
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஐப்பசி
2019
262ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**களவினா லாகிய வாக்க மளவிறந்**
**தாவது போலக் கெடும்.**

**பொருள் :** களவினாலுண்டாகிய பொருள் வளர்வதுபோலத் தோன்றி அளவு கடந்து கெடும். (283)

**களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமந் தரும்.**

**பொருள் :** பிறர் பொருளைக் கவர நினைக்கும் ஆசை அப்பொழுது இன்பம்போலத் தோன்றிப் பயனைக் கொடுக்கும்போது நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். (284)


# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே


இலங்கையானே

**கலிவிருத்தம்**



புன்னெ றிசெலும் போக்கை யொழித்துநீர்
நன்னெ றிதனில் நாட்டத்தை வைத்திடிற்
சென்னெ றிக்குநற் செல்வ மிலங்கையான்
சொன்னெ றிதனைச் சோரா துணர்மினே 05

சமய தீக்கையைப் பெற்றுப்பின் சற்குரு
அமையு மப்பா லவன்வழி செல்விரால்
தமையு ணரறிவு தலைப்படு மிலங்கையான்
சுவைதருஞ் சொல்லைக் கேட்பது தக்கதே 06


ஞானச்சுடர்
வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 262

2019 ஜப்பசி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| படையலின் தத்துவம் | க. கோணேஸ்வரன் | 01 -02 |
| சைவ அநுட்டானமே... | கே.எஸ். சிவஞானராஜா | 03 -05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 -08 |
| திருமந்திரத் தத்துவ... | கு. சிவபாலராஜா | 09 -14 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 15 -17 |
| கலகத்து அரக்கர் பலர்... | முருகவே பரமநாதன் | 18 -22 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 23 -24 |
| தையிட்டி கணையவிற்... | தொகுப்பு | 25 -26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 -28 |
| நல்லவர்க்கெல்லாம் | செல்வி மு. சோபிதா | 29 -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| அரிய பிறவி ஆறறிவுடை... | பு. கதிரித்தம்பி | 33 -34 |
| மூத்தோர் மதிப்பளிப்பு விழா | வல்வையூர் அப்பாண்ணா | 35 -37 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 38 -42 |
| இறைவன் பேசினால் | திருமதி ப. நடராசா | 43 -46 |
| சத்சங்கம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 47 -49 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 50 -52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# புரட்டாதி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் புரட்டாதி மாத மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடும் பேரவையோடும் நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும் சமாதான நீதவானுமாகிய திரு சிவ. ஆறுமுகஸ்வாமி அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தமது உரையில் ஒரு ஆன்மீக மலரை வெளியிடுவதென்பது இலகுவான காரியமன்று. அதுவும் விளம்பரம் இன்றி மற்ற மலர்களைப்போல் வியாபார உத்திகளைக் கடைப்பிடிக்காமல் தொடராக 261 மாத காலம் ஞானச்சுடர் தொடர்ந்து வருவது முருகனின் பெருங் கருணையென்றே கூறவேண்டும். மலரின் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை இம் மலர் பலவித பரிமாணங்களுடன் வளர்ச்சிபெற்று வருவது நாம் அனைவரும் அறிந்ததே. அதற்கு உறுதுணையாக விளங்கும் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும், ஆச்சிரமத்தின் பணிகளுக்கு முன்நின்று உழைக்கும் பேரவை யினருக்கும் நன்றி கூறி சந்நிதி வேலவனது அருளைவேண்டி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

மாதம் தவறாது வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடரின் மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஆற்றுபவரும் சந்நிதியான் ஆச்சிரமப் பேரவையின் செயற்பாட்டுக்கு தன்னாலியன்ற ஆதரவை நல்கி வருபவருமான திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

ஆசிரியர் தமது மதிப்பீட்டுரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் பணிகளை அட்டவணைப்படுத்தி தனது மன எழுச்சியோடு கூறிய விதம் சபையில் உள்ளோரைக் கவரக்கூடியதாக இருந்தது.

ஆசிரியர் மேலும் கூறுகையில் மலரில் இடம்பெறும் கட்டுரைகள் அனைத்தும் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகவே வந்துகொண்டு இருக்கின்றது. அதாவது மலரில் இடம்பெறும் முதலாவது கட்டுரைகளில் வரும் கருத்துக்களின் தன்மை மாறுபட்டதாகவும் ஒன்றோடொன்று முரண்படாத வகையிலும் வருவதும் போற்றப்படக்கூடியதே என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் உள்ளடக்கம்பற்றி அடியார்களுக்கு விளக்கிக் கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். நெஞ்சத்து நினைவு நல்லனபற்றியதாகவே இருக்க வேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் நமது வாழ்வு சிதைந்து விடும். நமக்கு உரியதை மட்டுமே நாம் அனுபவிக்க வேண்டும். நம் உடைமை அல்லாதனவற்றை மனதினால்கூட நினைக்கக் கூடாது.

நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறை சிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரம் இல்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சிலநிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபடவேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்ற வேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததுபோல் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களைச் சென்றடைவதில்லை. எனவே நலிவுற்ற வருக்கு உதவுவதே சைவ சமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம்பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லாவிதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப் பணிகள், சமயப் பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப் பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப்பான்மையிலிருந்து விலகிப் பரந்த மனப்பான்மையுள் உள்வாங்கப் படுகின்றோம். “சமயம் வெறும் வயிற்றுக்கு உரியதல்ல” என்று இராமகிருஷ்ண பரமஹம்சரும் “கடவுளை அடையச் சிறந்த வழி மனிதருக்குச் சேவை செய்வதே” என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக அமைவது மனம்தான். மனமது செம்மை யானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லாமும் பெற்றுய்வோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

அகில்ப ரம்பை காரை துடரி தும்பை சூரை
யலரி சம்பு நாவன் மருது சிந்து வாரம்
அறுகு தழுதாழை மாபாலை புன்கு
புரசு பழுபாகல் பூலா வழிஞ்சில்
ஆயி லாவிரை யிரலியி ரும்பிலி
யாடி யாவணி புடமிட வென்றழை
அவனி பாடல மனல மகீருக
மிவைச மூலமு மெழுபது சாலடை
அதிம தூரந்தக ரஞ்சிறு பாலடை
பதிமுக வெந்தய மின்கய மோதகம்
ஆறிடை யபினரி தாரங் கந்தக
நூறிடை திரிபலை யோரோன் றெண்பலம்
அதிவிட யமுமொழி கிருமி சத்ருவு
மனன்முறு கலுமற முருகு துத்தமு
அற்ப மொன்று கீரை வித்தேழிடை
யத்தி லொன்று பாதி தத்கோலமும்
அடவி கச்சோல நிமிளை நறும்பிசி
னரிதம் வெட்பாலை யரிசி கருங்கனி
ஆமலக மேல நான்முன் றிடை
சேமசிலை கூட லோகாஞ்சனம்
அரப்பொடி கடிப்பகை விடத்திர ணமப்பிர
கசத்தைசத குப்பிவிதை கொத்தமல்லி திப்பிலி
ஆலி கோட்ட மெலிப்பகை சச்சிலை
நீலி காய்ச்சு நிலப்பனை கற்பிசின்:,

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா

(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி

(கனடா)

சி. மகேஸ்வரன்

(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

செ. ஞானசபேசன்

(கிராம அலுவலர், ஏழாலை)

சி. உதயகுமார்

(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்

(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்

(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா

(சுண்ணாகம்)

ம. குகதாசன்

(வரணி)

க. கோபாலசுந்தரம்

(மாருதி மோட்டோர்ஸ், உடுப்பிட்டி)

உரிமையாளர்

(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

செ. ரவிசாந்

(குப்பிளான்)

நா. செல்வராஜா
(கொக்குவில்)
சி. சேது
(அச்சுவேலி)
S. செல்வராசா (செல்வி)
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)
மு. அப்புலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு)
திருமதி ப. சொக்கநாதன்
(கொக்குவில்)
ந. சிவக்குமார்
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)
திருமதி சசிலேகா ஜெயராஜன்
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)
ப. தியாகராஜசர்மா
(திருமகள் வாசா, ஆவரங்கால்)
மகாலிங்கம் செல்வமணி
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)
K. முகுந்தன்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)
நா. நாகராசா
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)
ந. மணிவண்ணன்
(இரும்புமதவடி, வதிரி)
இராதாகிருஷ்ணன் கிரிதரன்
(தம்பலடி, பொலிகண்டி)
ஆ. யோகதாசன்
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)
செ. இராசநாயகம்
(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)
K. சீவரெட்ணம்
(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

**கனகன் சின்னத்தம்பி**
(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)
**வே. முருகவேள்**
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)
**க. சத்தியதாஸ்**
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)
**வ. இராசநாயகம்**
(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)
**ரூபினி வசந்தகுமார்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)
**விக்னேஸ்வரி கணேசநாதன்**
(நீர்வேலி)
**சி. பத்மராசா**
(நவிண்டில், கரணவாய்)
**T.R. இரத்தினவேல்**
(அரசவீதி, உரும்பராய்)
**A. முரளிகரன்**
(ஊரெழு)
**பா. இந்துராணி**
(மல்ரி ஓயில், இணுவில்)
**சு. சுந்தரலிங்கம்**
(வேவில் லேன், வல்வெட்டி)
**வீ. வடிவேலு**
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)
**Dr தர்மலிங்கம்**
(நீர்வேலி)
**சிவலிங்கம் சுகந்திகா**
(ஆதியாமலை, உடுப்பிட்டி)
**த. கனகம்**
(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

நவரத்தினம் இந்திரமோகன்
(சண்டிலிப்பாய் மேற்கு)

திருமதி சிவநிதி முருகானந்தன்
(கட்டுடை, மானிப்பாய்)

இராசரத்தினம் வேல்குமார்
(இணுவில்வீதி, மானிப்பாய்)

P. சபாநாதன்
(யாழ்வீதி, மானிப்பாய்)

M. செந்தூரன்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

க. முருகானந்தம்
(காளிகோவிலடி, மல்லாகம்)

த. சொக்கலிங்கம்
(இணுவில் தென்மேற்கு)

பா. சியாமளநாயகி
(சுண்ணாகம் கிழக்கு)

கிட்டிணன் ஜெயக்குமார்
(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

கு. ஜெகதீஸ்வரன்
(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

கி. ஜெயக்குமரபதி
(இடைக்காடு, அச்சுவேலி)

க. துரைராசா
(சுதுமலை தெற்கு)

அருச்சுனன் சுனோஜா
(தும்பளை தெற்கு)

சி. புஸ்பரதி
(கரணவாய் மத்தி)

இ. சிவபாதம்
(நீலமயில் வாசா, அல்வாய்)

# படையலின் தத்துவம்

– திரு கந்தவனம் கோணேஸ்வரன் அவர்கள் –

சைவ சமயக் கோட்பாட்டின்படி பதி, பசு, பாசம் அநாதியானவை. அநாதி என்பதன் பொருள் தோற்றம் அற்றது என்பதாகும். தோற்றமில்லாப் பொருள்கள் எவற்றுக்கும் மறைவும் கிடையா. எனவே அவை நிரந்தரம் ஆனவை.

பதி, பசு, பாசம் என்பவை முறையே இறைவன், உயிர்கள், மலங்கள் எனவும் வழங்கப்படும். உயிர்களின் நோக்கம் இறைவனைச் சேர்தல். ஆனால் அதற்கு இடையூறாக இருப்பவை பாசம் எனப்படும் மலங்கள். மலம் என்றாலே அழுக்கு என்பது அனைவருக்கும் தெரியும். அழுக்கு நீக்கப்பட வேண்டியதன்றோ... ஆனால் உயிர்கள் தம் நிலை உணராது மலத்தில் அழுந்திக் கிடக்கின்றன. அழுக்கு என்ற பொருளில் மலம் என்ற சொல் அமைந்திருக்கின்றபோதும் நாங்கள் அதனை விடமுடியாமல் மயங்கிக் கிடப்பதால்த்தான் அதனைப் பாசம் என்றும் வழங்குகிறோம்.

உயிர்கள், இறையைத் தவிர மற்றைப் பொருளில் ஆசைகொண்டாலும் அது பாசம் எனப்படும். உயிர்கள் இறைவனை உணர்வதற்குப் பாசமே தடையாக இருக்கின்றது. உயிர்களின் துன்பங்களுக்கும் அதுவே காரணமாக இருக்கிறது. இதனால்த்தான் புத்தபிரானும் "ஆசையை விடு" என்றார்.

சைவ சமயம் உட்பட இந்துநெறி அனைத்திலும் இறைவனுக்கு நைவேத்தியம் வைத்து வழிபாடு செய்யும் முறை சிறப்பிடம் பெறுகிறது. உயிர்கள் பாசத்தைத் துறப்பதற்கான ஆரம்பப் படித்தரந்தான் இது.

இறைவனுக்கு நைவேத்தியப் பொருள்களாக நாம் வைப்பவை அனைத்தும் நமக்குப் பிடித்தமான பொருள்களே. இவற்றின் சுவை எம்மை வசப்படுத்தும். இந் நைவேத்தியம் இறைவனுக்கும் நமக்கும் நடுவில் தான் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. இதன் தாற்பரியம், "இறைவா! என்னை மயக்கும் பொருள்களை உன்னிடத்தில் ஒப்படைத்து விட்டேன், என்னை உன்பால் ஈர்த்தருளும்" என்பதாகும். வசதி படைத்தோர் பொன்னையும் நிலங்களையுங்கூட இறைவனுக்குப் படையல் செய்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது.

"நைவேத்தியப் பொருள்களை இறைவன் உண்பானா?" என்று கேட்கின்ற புத்திஜீவிகள் பலருளர். "இறைவன் படைத்த பொருள்களை இறைவனுக்கே நாம் தருவது வேடிக்கையாக இல்லையா?" என்று தத்துவம் பேசுபவர்களும் உளர். இவர்கள் நுனிப்புல் மேய்ந்தவர்களேயன்றி வேறல்லர்.

நாம் படைக்கும் எந்தப் பொருளையும் இறைவன் உண்பதில்லை. ஆனால் அப் பொருள்கள் எமது என்பதும் எமது உழைப்பாற் பெறப்பட்டவை என்பதும் உலகியல் உண்மை. அதன்படி அப்பொருள்கள் எமது உடைமைகளே. ஆயினும் இறைவன் முன்னிலையில் அவை வைக்கப்பட்டதும் "எமது" என்ற எண்ணம் மனதிலிருந்து மறைந்து போகிறது. அது நைவேத்தியம் என்ற பெயரில் இறைஉடைமை ஆகிறது. பூஜையின் பின் நாம் அவற்றைப் பெறும்போது "பிரசாதம்" எனப் பெயர் பெறுகிறது.

*எத்தனை படிகள் என்று மலைக்காதீர்கள். எல்லாப் படிகளும் கடக்கக்கூடியவையே.*

இறைவன் உயிர்கள் அனைத்துக்கும் எவ்வாறு சொந்தமோ, அவ்வாறே பிரசாதமும் அனைத்துயிர்களின் உடைமையாகிறது. இறைவனிடமிருந்து பெறப்பட்டவை என்ற உணர்வுடன், ஒரு சிறிய அளவிலேனும் "அமுதம்" என அனைவரும் பகிர்ந்துண்டு, ஆனந்தம் பெறுகிறார்கள். எமது என்ற உணர்வுடன் நாம் படைத்த சுவையான உணவு, பிரசாதமாகி இறைவனுடையது என்ற உணர்வில் கிடைக்கும் பட்சத்தில் சிறிது பெற்றுச் சந்தோசப்படுவது பொதுவுடைமையின் வெளிப்பாடு; பற்றற்ற நிலையின் ஆரம்பப்படி.

சரி, இறைவனே எமக்களிக்கும் பொருள்களை இறைவனுக்கே நாம் படைக்கும்போது என்ன பயன் உண்டாகிறது? இப்படிப் பார்ப்போம். ஒரு தாய் கைக்குழந்தைக்கு உணவளிக்கிறாள். சாதத்தைக் கிண்ணத்திலிட்டுப் பிசைந்தூட்டுகிறாள். அந்த வேளையில் அந்த உணவு குழந்தையின் உடைமை தானே? குழந்தை "தனது உணவு" என்ற நினைப்புடன் தன் சின்னக் கையால் அன்னைக்குச் சோறூட்ட முயல்கிறது. இந்த முயற்சியில் தாயின் வாயில் ஒரு பருக்கைச் சோறுகூடச் சேராதிருக்கலாம். அல்லது பிள்ளை நன்றாக ஊட்டுகிறது என்று கொண்டாற்கூடத் தாயின் வயிறு நிறையப்போவதில்லை. ஆனால் மனம் நிறைந்து விடுகிறது; பாசத்தினால் நெகிழ்ந்து விடுகிறது.

அன்னையால் வழங்கப்பட்ட உணவைத் தன்னுணவு என நினைக்கும் குழந்தையைப்போல, இறைவனின் குழந்தைகளான நாம், இறைவனால் படைத்தருளப்பட்டவற்றை எமது என நினைக்கிறோம். அந்த உணர்வில் குழந்தையைப்போல் அமுதூட்டுகிறோம். இறைவனும் தாயைப்போல உள்ளம் நெகிழ்ந்து போகிறான்.

இறைவன், உயிர்கள் என்று பார்த்தால் நைவேத்தியம் பாசத்தைத் துறக்கும் நிலையின் அடையாளமாகிறது. தாய், சேய் என்று பார்த்தால் நைவேத்தியம் அன்பின் நெகிழ்ச்சியாகிறது. இதுதான் படையலிற் பொதிந்துள்ள தத்துவம்.

## பெட்டிக்கடை

பெட்டிக்கடை ஒன்றில் மூன்று சிறுவர்கள் போட்டி போட்டுக்கொண்டு பொருட்களை வாங்க முன்வந்தனர். விநாயகம் என்ற சிறுவன் கற்பூரம் வாங்க வந்தான். சகாயம் என்ற சிறுவன் மெழுகுவர்த்தியை வாங்கிட வந்தான். பக்ரின் என்ற சிறுவனோ ஊதுவர்த்தியினை வாங்க வந்தான்.

அவர்களுக்குள் யார் முதலில் பொருட்களை வாங்குவதென்ற போட்டி எழுந்தது. அதனால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். கடைக்காரர் அவர்களைநோக்கி "நீங்கள் மூவருமே வெவ்வேறு இடத்திற்குச் செல்கின்றீர்கள்! கற்பூரம் வாங்கியவர் கோவிலுக்குச் செல்கின்றார். மெழுகுவர்த்தி வாங்குபவர் சேர்ச்சுக்குச் செல்கின்றார். ஊதுவர்த்தி வாங்குபவரோ மசூதிக்குச் செல்கின்றார். ஆனால் நீங்கள் வாங்க வந்த இந்த மூன்று பொருட்களிலும் ஒரு ஒற்றுமையிருக்கின்றது தெரியுமா?" என்றார். "அதென்ன ஒற்றுமை" என மூவரும் அவரைப் பார்த்துக் கேட்டனர்.

"இந்த மூன்று பொருட்களும் நெருப்பில் எரிந்து புகையாகக் காற்றுடன் கலக்கின்றது. அந்தக் காற்றைத்தான் நீங்கள் மூவருமே சுவாசிக்கின்றீர்கள். எல்லோர்க்கும் ஒரே காற்றுப்போல் இறைவனும் ஒருவர்தான். ஆனால் நாம் வணங்கும் முறைதான் மாறுபடுகிறது. நீங்கள் மூவருமே ஒற்றுமையுடன் இறைவனை வணங்கினால் அதன் பலன் இன்னும் அதிகரிக்கும். உங்கள் பிரார்த்தனையும் எண்ணங்களும் நிறைவேறி மத ஒற்றுமையும் ஏற்படும்" என்றார். அதனைக் கேட்ட மூவரும் மனம் திருந்தி தங்கள் தவறை உணர்ந்தார்கள்.

*வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்தபின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று.*

# சைவ அநுட்டானமே சாத்தியமான ஆசாரம்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

இப்பூவுலகிலே நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் வாழ்வாங்கு வாழ்ந்து கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும். முத்தியின்பம் என்பது இல்லறத்தில் இருப்பவர்களுக்கு சாத்தியமானதொன்று. பிரம்மச்சாரியத்தில் இருப்பவர்களுக்கு ஆசை, புகழ் எப்போது அடங்குகின்றதோ அப்போதே முத்தியின்பம் நிச்சயம் ஆகும். எனவே ஆடி அடங்கும் இந்த வாழ்க்கையில் ஆசையே துன்பத்துக்கு மூல காரணம் ஆகும். அதை அனுபவித்தாலொழிய அதனை விடுவது என்பது அசாத்தியமேயாகும்.

இல்லறம் என்பது ஒரு தரும காரியம் ஆகும். ஒரு கணவனும் மனைவியும் இவ் உலகில் இணைந்து நடாத்தும் பொறுப்பான வாழ்வினை இறைவன் அகமகிழ்ந்து ஆசீர்வதிக்கின்றான். இந்த வாழ்வுக்கு மூன்றாமவர் குந்தகம் செய்யாதவாறு சைவ அநுட்டானங்கள் பாதுகாப்பளிக்கும். இந்த நிலைகளுக்கு அப்பால் ஓர் இந்துவானவர் தன்னை இந்துவாக அடையாளப்படுத்தி, இந்துவாக வாழ்வதற்கும், ஆயுள்பூராவும் சிவத்தினை அனுபவிப்பதற்கும், ஈற்றில் முத்தியின்பம் பெறுவதற்கும் சைவ அநுட்டானங்கள் சாத்தியமான ஆசாரமாகப் போற்றப்படுகிறது.

## அநுட்டானம்

அநுட்டானம் என்பது ஆசாரத்தையும் ஒழுக்கத்தையும் குறிக்கும். சைவ சமய மரபில் பிறந்த ஒருவர் ஏழாம் வயதிலாவது ஒன்பதாவது வயதிலாவது அது தப்பினால் பதினோராவது வயதிலாவது சமய தீட்சை என்னும் சிவதீட்சை பெற்று அநுட்டானம் செய்துவருதல் வேண்டும். அவ்வாறு அநுட்டானம் ஒழுங்காகச் செய்யச் செய்ய ஒழுக்கமும் தன்பாட்டிலே சொல்லாமல் கொள்ளாமல் உடலோடும் உள்ளத்தோடும் ஊறிவரும்.

மனம் வாக்குக் காயம் ஆகிய முக்கரணங்களும் ஒன்றுபடும்போது பாவனை மந்திரம் கிரியை வயப்பட்டு உடலும் உள்ளமும் எல்லைக் கோட்டுக்களை மீறாதிருக்கும்! அத்துடன் சிவாலய தரிசனம், திருமுறை ஓதுதல், பஞ்சாட்சர செபஞ் செய்தல், திருத்தொண்டு புரிதல் ஆகியன இந்த அநுட்டானத்தால் பிரவாகிக்கும்.

தற்கால சமூகம் இந்துக்கள் என்று அழைக்கப்படும் தொண்ணூற்றைந்து சதவீதத்தினர் தம்மை அடையாளப்படுத்துவதான சிவதீட்சை பெறுவதேயில்லை. சமயப் பெரியோர்களும், சிவப்பிராமணக் குருக்கள்மாரும் பெற்றோர்களும் இதனை வலியுறுத்திக் கூறுவதுமில்லை. செய்விப்பதுமில்லை. விருப்பப்படுவதுமில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், கமலை ஞானப்பிரகாசர், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், ஈசான சிவாச்சாரியார், தற்புருஷ தேசிகர், பட்டுசுவாமி தேசிகர், க.சி. குலரத்தினம் ஆகியோர் அநுட்டான விளக்கம்

*கடின உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.*

சம்பந்தமாக விபரமாக எழுதியுள்ளார்கள். சிவபெருமான் எழுதியருளிய முதன் நூல் களான வேதம், சிவாகமம் இரண்டிலும் சைவ அநுட்டானங்களைப்பற்றி முக்கிய மாகக் குறிப்பிட்டதன் வாயிலாக இது முக் கியத்துவம் பெறுகிறது. எனவே இதை அநுட்டித்தால் சிவமோட்சம் கிடைப்பது உறுதி. அதைவிட ஆன்ம ஈடேற்றம், ஆன்ம விடுதலை, ஆன்ம வெளிச்சம் தேடியே வரும். இவையனைத்தையும் பிரதம சிவாசாரியார் கள் பத்ததிகள் செய்துள்ளார்கள்.

இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சக்திகிரீவன் அவர்கள் சிவ தீட்சை அநுட்டான கைங்கரியங்களில் அன் றும் இன்றும் என்றும் ஒழுங்காகத் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். வடமொழி அவரைப் பெறுமதியாக்கியுள்ளது.

உரிய அநுட்டானங்களை ஒழுங்காகச் செய்யாமல், கல்லையும் மண்ணையும் சீமெந்தையும் சேர்த்துக் கட்டிடங்களைக் கட்டினால் சைவசமயம் வளரும் என்று கருதுகின்ற நவீன யுகத்தில் நாம் வாழ்ந்து வருகின்றோம். கட்டிடங்களும், மேடையும், ஆரவாரங்களுமே எமது சமயத்தை ஆள் கின்றன. சம்பளத்திற்குச் சமயம், சம்பளத் திற்கு வாழ்க்கை, சம்பளத்திற்குக் கடமை என்றாகிவிட்டது.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்ற தத்துவத்தைச் சில சமய விளம்பரதாரர் மாற்றியமைத்து மூர்த்திக்கும் கீர்த்திக்கும் பங்கம் ஏற்படுத்தியுள்ளனர். அவசர அவசர மாகக் கோவிலை இடிப்பதும் அவசர அவ சரமாய்க் கோவிலைக் கட்டுவதும், அவசர அவசரமாய்க் கோபுரம் கட்டுவதும் பெரும் எடுப்பில் கும்பாபிஷேகம் செய்வதும், ஒட்டு மொத்தமாக இலங்கையைப் பேறாக்கி இருக்க வேண்டும். ஆனால் கர்ப்பக்கிரக மூர்த்திக்குக் கீர்த்தி பெருகுவதென்பது சிவாச்சாரியார்கள் மற்றும் அடியார்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆண்டுக் கொரு கோபுரம் கட்டுவது கின்னஸ் சாத னைக்குச் சில வேளைகளில் பரிசும் கிடைக் கலாம். ஆனால் சாமிக்கு விருப்பம் என்று எப்படிச் சொல்லமுடியும்? தங்கப் பவுணால் கோயிலையும் கோபுரத்தையும் கட்டிப் பார்த் தாலும் சாமியோ “ஆம்” என்றும் சொல் லாது. “இல்லை” என்றும் சொல்லாது. இறைவன் வாய் திறந்து பேசியது எப்போது என்றால் அடியவர்கள் தம்மை முழுமையாக இறைவனிடம் ஒப்படைக்கும்போதுதான்! ஒப் படைப்பது என்பது படிப்படியாக அநுட்டானங் களில் முழுமையாக ஈடுபடுவதாகும். இதுவே இலகுவாகின்ற உபவாசமாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய வழியில் பயணிப்பதற்கு யோக்கியந் தருவது சமய தீட்சையாகும். தீட்சை பெற்ற வரே தானம், தருமம், தத்தம், தவம் ஆகிய சிவ புண்ணியச் செயல்களைச் செய்வதற் குத் தகுதியுள்ளவராவார். சிவதொண்டுக்குச் சிவதீட்சை இன்றியமையாதது. ஆகம விதிப் படியே கோவில், பூஜை, கிரியை, கும்பா பிஷேகம், பிராமணர், சிவாச்சாரியார், மண்ட பங்கள், கோபுரங்கள் இருக்கவேண்டுமென்று விரும்பும் நம்மவர்கள், தாம்மட்டும் காற்சட்டை யோடும், சாரத்தோடும், சட்டையோடும், போர்த் துக்கொண்டும், தொலைபேசிகளோடும், பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு புகையிலை யுடனும், சண்டித்தனத்தோடும் கோவிலுக்குள் நர்த்தனம் புரிவதும் நாள்தோறும் கோவில் களில் நடந்தேறிவருகிறது.

தீட்சை, தீ+ஷா எனப் பிரிந்து தீட்ஷையாயிற்று. கொடுப்பதும் கெடுப்பதும் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

**கொடுப்பது சிவஞானம் கெடுப்பது மலங்கள்**

*உண்மை ஒன்றுதான் என்றும் நிலைத்துநிற்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது.*

மலங்களைக் கெடுத்து சிவஞானத்தைக் கொடுப்பது என்று பொருள். இது தீட்சை பெற்றுக்கொண்டால் மாத்திரமே சாத்தியமாகும். தீட்சை பெறாவிட்டால் ஆணவம், கன்மம், மாயை என்ற வலைக்குள்ளே அகப்பட்டுக் கண்கடை தெரியாமல் ஆலயங்களையே அரசியல் களமாக்கிவிடுவார்கள். இது ஒருபுறமாக இருக்க தீட்சை பெறாத தலைமைத்துவங்கள் ஆன்மீகத்தை அரசியல் ஆக்கிவிட்டு கூத்துப் பார்ப்பார்கள். அது மாத்திரமன்றி தனிப்பட்ட குடும்ப விவகாரங்களையும், இலாப நட்டங்களையும் விமர்சிக்கின்ற ஒரு மேடையாக ஆலயங்களைப் பட்டி மண்டபங்களாக்கிவிட்டார்கள். இத்தகுநிலை தீட்சைக்கும் ஆகமத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காத நிலையில் ஆன்மீகம் தவிடுபொடியாகிவிட்டது.

சிவதீட்சையில், சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை இம்மூன்றும் ஓம விசேடத்துடன் கூடியவை. இதைவிட நயன தீட்சை, பரிசதீட்சை, மானச தீட்சை, வாசக தீட்சை. சாத்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை ஆகிய ஏழும் பெறுபவரின் பக்குவங்கண்டும் பயபக்தி கண்டும் கொடுக்கப்பெறுவதாகும். இங்கே தரப்பட்ட தீட்சைகளைப் பெற்றவர்களால்த்தான் ஒரு ஆலயத்தைச் சாத்வீகமாகக் கொண்டு செல்ல முடியும். இல்லாத பட்சத்திலே ஆலயங்கள் வழக்குகளாலேயும், ஆரவார விளம்பரங்களினாலுமே கோலம் பெறும்.

மந்திரங்களும், உபதேசங்களும் ஆலயங்களுக்குள்ளே செறிய வேண்டும். எல்லைகளைத் தாண்டினால் மந்திரங்கள் மூலஸ்தான மூர்த்திக்கு ஒருபோதும் சித்திகரமாக அமையாது. சம்பளத்திற்குச் சமயமென்றால் ஆசாரம் சேதாரமாகவே அமையும். இப்போது நடப்பது அதுவேதான்!

கடவுள் வணக்கம், குரு வணக்கம், பூமிசுத்தி, சலசுத்தி, அஸ்திர சந்தியோபாசனம், ஆசமனம், அதரசுத்தி, அங்கஸ்பரிசம், கரசுத்தி, விபூதி சுத்தி, கிரியைமுறை, அபிமந்திரித்தல், விபூதி ஸ்நானம், மலஸ்நானம், விதி ஸ்நானம், திரிபுண்டரம், சகளீகரம், கரசுத்தி, கரநியாசம், அங்க நியாசம், பிராணாயாமம், மந்திர உச்சாடனம், அவையாவன:-

**பஞ்ச பிரம்ம மந்திரம் 5**

ஓம் ஈசானாய நம
ஓம் தத்புருஷாய நம
ஓம் அகோராய நம
ஓம் வாமதேவாய நம
ஓம் சத்தியோ சாதாய நம

**ஷடங்க மந்திரங்கள்**

ஓம் இருதயாய நம
ஓம் சிரசே நம
ஓம் சிகாயை நம
ஓம் கவசாய நம
ஓம் நேத்திரேப்யோ நம
ஓம் அஸ்திராய நம

சிவதீர்த்த கரணம், சந்தியா சக்தி தியானம், மந்திர ஸ்நானம், மார்ச்சனம், அகமர்ஷணம், கவசவேஷ்டனம், தர்ப்பணம், ஆசமனம், தீர்த்தோபசங்காரம், சூரியோபஸ்தானம், 108 சிவமந்திர செபநிவேதனம், உருத்திர தியானம், திருமுறையோதுதல், நமஸ்காரம், வீழ்ந்து வணங்குதல், அநுட்டான நிறைவு, கோபூஜை, போசனம்! ஆகிய இத்தனையும் நிறைவாகச் செய்கின்ற ஒருவரால் மட்டுமே ஆலயங்களை வழிநடத்த முடியும்.

*வாழ்க்கை என்கின்ற மரத்துக்கு இளமையில் கற்பது வேர் போன்றது.*

# திருச்சதகம் (தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 09. ஆனந்த பரவசம்

93 பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கில் அனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

ப-ரை:

பொய்தீர் மெய்யானே- உயிர்களின் பொய்ம்மையை நீக்கியருளும் மெய்ப்பொருளாயுள்ளவனே; பணிவார் பழைய அடியார்க்கு பிணி தீர்த்தருளி- நின்னை மெய்யன்போடு வணங்குபவர்களாகிய பழைய அடியார்க்குப் பிறவிப் பிணியை நீக்கியருளி; உன் அணி ஆர் பாதம் கொடுத்தி- உன் அழகு நிறைந்த திருவடிகளைக் கொடுத்தருளினை; அது அரிது என்றாலும்- எனக்கு இப்போது உடனே அப்படி அருள் செய்தல் முடியாதாயினும்; திணி ஆர் மூங்கில் அனையேன் வினையைப் பொடியாக்கி திட்பம் பொருந்திய மூங்கிலைப் போன்ற தீமையையுடையவனாகிய எனது பிராரத்த கன்மத்தையும் ஞானத் தீயாற் பொடி செய்து; ஒல்லை வந்து தணி ஆர்பாதம் தாராய்- காலம் நீடிக்காது விரைந்து வந்து குளிர்ச்சி பொருந்திய நின் திருவடிகளைத் தந்தருள்வாயாக.

பொய்தீர் மெய்யானே, நின்னைப் பணிபவர்களாகிய பழைய அடியார்க்குப் பிறவிப் பிணியை நீக்கியருளி உனது திருவடிகளைக் கொடுத்தருளினை; எனக்கு இப்பொழுது பிணி தீர்த்துத் திருவடிகளைத் தருதல் அரிதாயினும் மூங்கிலனையேன் வினையைப் பொடியாக்கி விரைந்து வந்து திருவடிகளைத் தந்தருள வேண்டும் என்பதாம்.

பணிவார் பழைய அடியார்க்குப் பிணி தீர்த்தருளி உன்பாதம் கொடுத்தி என இயைத்து பொருள் கொள்க. பணிவார்- அடியவர். "பணிவோர் மருங்களியா" கோவை -52. பிணி- பிறவிப் பிணி. "பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே" (நித் 18) என அடிகள் அருளியவாறுங் காண்க. பழைய அடியார்- தொன்று தொட்டு வழிபட்டு இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யன்பர்களை, "பாதங் கொடுத்தி" என்றது வீடுபேற்றினைக் கொடுத்தருளுதி என்றவாறு. "அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசமர்ந்திருந்தார்" எனப் பெரியபுராணத்து (திருநாவுக் 427) வருதலுங் காண்க. கொடுத்தி என்பதில் இகர விகுதி காலங் காட்டாது முன்னிலை விகுதியாய் நின்றது. தகரம் இறந்த காலம் காட்டிற்று.

*நல்ல வாழ்க்கை என்பது கடும் உழைப்பின் பின்னால் மறைந்திருக்கிறது.*

அதுவும் அரிது என்றால் என்பதில் உம்மையைப் பிரித்து அது அரிதென்றாலும் எனக் கூட்டி எனக்கு இப்பொழுது உடனே அப்படிச் செய்தல் முடியாதாயினும் எனப் பொருள் கொள்ளப்பட்டது. திணியார் மூங்கில்- திண்மை பொருந்திய மூங்கில் என்றது குழாய் மூங்கிலல்லாத கன்மூங்கிலை. இம் மூங்கில் போல மனநெகிழ்ச்சி யில்லாதேன் என்பார், “திணியார் மூங்கிலனையேன்” என்றார். “திணியார் மூங்கிற் சிந்தையேன்” (பிரார்த்தனை8) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. இனி மூங்கிலிடத்தே உண்டாகும் தீ அதனையே அழிப்பதுபோல யானே எனக்குத் தீமையைத் தேடிக் கொள்பவன் எனப் பொருள் கொள்ளலும் பொருந்தும்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபோது சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் அழிக்கப்பட்டமையின் வினையென்றது எஞ்சி நின்ற பிராரத்த வினையைக் குறித்தது. தணி; தண்மை; குளிர்ச்சி “தணிபுணல்”, “தணிமழை” (பரி 6:29; 9:11) என்பவற்றிலும் இப்பொருட்டாதல் காண்க. இப்பொழுது கூடாதாயினும் காலம் நீடிக்காது விரைந்து வந்து எனப் பொருள் தந்து நின்றது. அங்ஙனம் கொள்ளாக்கால் அடியார் பிணி தீர்த்துப் பாதம் கொடுத்தருளினை; அது அரிதாயினும் என் வினையைப் பொடியாக்கி ஒல்லை திருவடியைத் தரவேண்டும் என வேண்டுதல் பயனில் கூற்றாம்.

இதன்கண், ஒல்லை தணியார் பாதம் தாராய் என்றதனால் ஆனந்தபரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

94 யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

**ப-ரை:**

தித்திக்கும் தேனே அமுதே கரும்பின் தெளிவே- இனிக்கும் தேனும் அமுதும் கரும்பின் தெளிந்த சாறுமாக உள்ளவனே; மானே- பெரியோனே; யானே பொய்- யானும் நிலையில்லாத பொய் வாழ்வுடையேன்; என் நெஞ்சும் பொய்- என் உள்ளமும் நிலைபேறில்லாத பொய்ம்மையுடையது; என் அன்பும் பொய்- அவ்வுள்ளத்திடத்துள்ளதாகும் அன்பும் இடையீடுபடும் பொய்ம்மையுடையது; ஆனால்- அங்ஙனமாயின்; வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே- பிராரத்த வினையின் பயனை நுகர்ந்து கொண்டிருக்கும் யான் உன்னை அடைய வேண்டுமென்று விரும்பி அழுதால் உன்னை அடைய முடியுமா? அடியேன் உன்னை வந்து உறும் ஆறு அருளாய்- ஆதலால் அடியேன் உன்னை வந்து அடையுமாறு அருள் செய்ய வேண்டும்.

தேனே அமுதே கரும்பின் தெளிவே மானே. யானே பொய்; என் நெஞ்சும் பொய்மையுடையது. அந்நெஞ்சிடத்துள்ளதாகும் அன்பும் பொய்; அங்ஙனமாயின் உன்னை அடையவேண்டுமென்று விரும்பி அழுதால் உன்னை அடைய முடியுமா? ஆதலால் அடியேன் நின்னை வந்து அடையுமாறு அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

யானே என்பதில் ஏகாரம் எண்ணுப் பொருளது. அடிகள் தம்மை பொய் என்றது நிலையற்ற உலக வாழ்வுடைமை பற்றியாகும். நெஞ்சும் பொய் என்றது ஓரிடத்து நிலை பேறின்றி அலையு நிலைமை பற்றியதாகும். தம்முடைய அன்பினைப் பொய் என்றது எண்ணெய் ஒழுக்குப் போல இடையீடின்றி நிகழாது. அன்பு இடையறவுபடுதல் பற்றியதாகும். அங்ஙனம் இடையறவு படுதல் உண்டி உறக்கம் முதலியன பற்றியதாகும். ஆனால் என்பது முற்கூறிய மூன்றும் பொய்யாகுமாயின் என ஏதுவை வலியுறுத்தியது. வினையேன் என்றது எடுத்த உடலுக்குரிய பிராரத்த கன்மத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் யான் என்றவாறு. வினையேன்- குறிப்பு வினையாலணையும் பெயர். பெறலாமே என்பதில் ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது. அடியேன் வந்து உறுமாறு அருளாய் எனப் பின்னர் அடிகள் வேண்டிக் கொள்ளுமாற்றானும் அவ்வேகாரம் எதிர்மறை என்பது இனிது விளங்கும். தித்திக்கும் என்பதனை தேன் அமுது கரும்பின் தெளிவுகளுக்கு இனம் விலக்காது இயல்பு கூறும் அடைமொழியாக்குக. தேன் முதலியன போல இறைவன் இனியனாக விளங்குதல் தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே (சத 55) என அடிகள் அருளியவற்றானு மறிக. தேன் அமுது கரும்பின் தெளிவு என்பன அறிவு இச்சை செயல்களுக்கு இன்பந் தருபவன என் பதைக் குறிப்பனவாகும். தித்திக்கும்மானே என இயைத்து இனிமைதரும் பெரியோனே என உரைப்பினும் அமையும். மான் என்பது மகான் என்பதின் திரிபு. பெரியோன் என்பது கருத்து. அருளாய் முன்னிலை உடன்பாட்டு எதிர்கால வினைமுற்று.

இதன்கண், அடியேன் உனைவந்து உறுமாறு அருளாய் என்பதனால் உன்னை வந்து அடைந்து பெறும் ஆனந்தத்தினால் பரவசமடைய விரும்புதல் பெறப்படுதலின் ஆனந்த பரவசம் என்னும் ஒன்பதாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 90. (தொடரும்...

## அனைத்தையும் சுமக்காதே!

ஜென் துறவிகள் இருவர் தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஒரு குடிசையின்கீழ் வெகுநேரமாக நின்றுகொண்டிருந்தனர். மழை நின்றதும் தங்களது இருப்பிடத்தை நோக்கி நகர்ந்து செல்லும்போது, வழியில் ஓர் அழகான இளம்பெண் சாலையைக் கடக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தாள். இதைக் கண்ட துறவிகளில் ஒருவர், "என்னாயிற்று பெண்ணே? ஏதேனும் உதவி தேவையா?" என்று கேட்டார். பதிலுக்கு அந்தப் பெண், "நான் என் தோழியின் திருமணத்துக்குச் செல்கிறேன். ஆனால், இந்தச் சாலை முழுவதும் சேறும் சகதியுமாக உள்ளது. நடந்து சென்றால் நிச்சயம் என் அழகிய பட்டுப்பாவாடை பாழாகிவிடும்..." என்று வருந்தினாள். "கவலைப்படாதே, என் தோள்களின்மீது ஏறிக்கொள். நீ சேரவேண்டிய இடத்தில் உன்னைச் சேர்த்துவிடுகிறேன்..." என்று கூறிவிட்டு அவளுக்கு உதவி புரிந்தார்.

திரும்பி வரும் வழியில் தன்னுடன் இருக்கும் மற்றொரு துறவி கோபமாக இருப்பதுபோல அவருக்குத் தோன்றியது. "ஏன் என்மீது கோபமாக உள்ளீர்கள்...?" என்று கேட்க, அதற்கு அவர் "நாம் ஒரு துறவி என்பதை மறந்துவிட்டு அந்தப் பெண்ணை எப்படித் தொட்டுத் தூக்கலாம்? இது தவறானது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா...?" என்று கேட்டார். உதவி செய்த துறவி, "தூக்கிய அந்தப் பெண்ணை அப்போதே நான் இறக்கிவிட்டேன், நீங்கள்தான் அந்தச் சம்பவத்தை இறக்காமல் மனதில் சுமந்துகொண்டு இருக்கிறீர்கள்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். நாமும் நமது வாழ்வில் பிறர் ஏற்படுத்திய காயங்களை மனதில் தூக்கிக்கொண்டு செல்கின்றோம். எது தேவை; எது தேவையில்லை என்பதைப் பகுத்தறியத் தெரிந்துவிட்டால், வாழ்வு என்றென்றும் ஆனந்தமே.

*வாழ்க்கையின் நோக்கமே பிறருக்கு உதவி செய்வதே ஆகும்.*

# திருமந்திரத் தத்துவ முத்துக்கள்

– **திரு கு. சிவபாலராஜா** அவர்கள் –

மனிதன் முழு மனிதனாக வாழ்வதற்கு ஆன்மீகம் அவசியமாகின்றது. விஞ்ஞானம் வளர்ந்துள்ள அளவுக்கு இன்னமும் மெய்ஞ் ஞானம் வளரவில்லை. இதனால் மக்கள் மத்தியில் மெய்ஞ்ஞானம் பற்றிய குழப்பநிலை அறிவே இன்று காணப்படுகின்றது. மனிதனுக்கு உடற்பலம், மனோபலம், ஆத்ம பலம் ஆகிய மூன்றும் அவசியமானவை. சமய வாழ்வு வாழ்வதென்பது மனிதனுக்கு அவசியமானது. சமய வாழ்வை மனிதன் கைவிடும்போது, அவனுடைய மகிழ்ச்சி நிறைந்த வாழ்வில் பல குழப்பங்கள் வந்து சேரும். இறைவனது சித்தத்திற்கு ஏற்றபடி மனிதனும் தன்னை அமைத்துக் கொள்ளலே சமயம் எனப்படுகிறது. அதாவது ஏற்றவாறு தன்னைச் சமைத்துக்கொள்ளலே சமயம் எனப்படுகிறது. தீயனவற்றை விலக்கி, நாம் நல்லனவற்றைச் செய்தல் சமய வாழ்வில் அவசியமானது. சமயம் இன்றேல் மனிதன் விலங்கின் இயல்போடு வாழத் தலைப்படுவான். மனிதனானவன் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படல் வேண்டும். சைவத் திருமுறைகள் மனிதன் தெய்வீக நிலைக்கு உயர்வதற்கு வழிகாட்டுகின்றன. மகா ஞானிகளாகவும், உள்ளுணர்வுடையவர்களாகவும், தெய்வ அருள் பெற்றவர்களாகவும் வாழ்ந்த அருளாளர்களின் தெய்வீக அருள் வாக்குகளே சைவத் திருமுறைகளாகும். வேதப் பொருளும், சிவாகமப் பொருளும் சேர்த்து உருவாக்கப்பட்ட திருநூல் திருமந்திரமாகும். இதை அருளியவர் திருமூலநாயனார் ஆவார். சிவ ஆகமங்கள் இருபத்தி எட்டில் ஒன்பது ஆகமங்களின் சாரப்பொருளாக திருமந்திரம் காணப்படுகின்றது. ஒன்பது ஆகமங்களானவை; காரணம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், கலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாளவம் என்பன.

வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள்முகமாகத் திருப்பி, அங்கே இன்ப ஊற்றைக் காண்பதற்கும், இறையின்பத்தை உணர்வதற்கும் திருமந்திரம் வழிகாட்டுகின்றது. தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என ஆன்றோர் கூறுவர். மனிதனுக்குத் தெரிந்த விடயத்தில் இருந்து, தெரியாத விடயங்களை ஆன்மீக ரீதியில் மனிதர் விளங்கிக் கொள்ளும் விதமாக திருமூலர் தனது திருமந்திரத்தில் விளக்கியுள்ளார். அறிவுக்கு அப்பாற்பட்ட விடயங்களை விளக்குவதற்கு, அறிவுக்குட்பட்ட விடயங்களையும் உண்மைகளையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டி தனது திருமந்திரத்தில் திருமூலர் விளக்கியுள்ளார். இது ஒரு சிறப்பு அம்சமாகும்.

“திருமந்திர சாரம்” என்பது உடலில் உள்ள குண்டலினி சத்தியை விழிப்படையச் செய்து, மூலாதாரக் கனலைச் சுழுமுனை

*பகையைத் தீர்ப்பது நட்பு ஒன்றுதான். அமைதிக்கான உறுதியும் அதுவே.*

நாடி வழியாகக் கழுத்தில் உள்ள விசுத்தி என்ற ஆதாரம் வரை ஏற்றி, அருட்சத்தியின் அருளால் அதைக் குளிரச் செய்து, தலையில் உள்ள பராசத்தியுடன் சேர்த்து, அங்கு பெருகும் அமுதத்தைப் பருகி இன்பமடைதல் என்பது சாரமாகும். இது யோக சாதனை நெறியை சிவயோக நெறியாக வளர்த்து யோகத்திற்கு முக்கிய இடம் கொடுத்துள்ளார். சைவம், சித்தாந்தம் ஆகிய இரு சொற் பிரயோகங்களை உலகிற்கு முதன்முதல் உணர்த்தியவர் திருமூலர் ஆவார். மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைத் திருமூலர் மூவாயிரம் ஆண்டுகளில் பாடியுள்ளார். எனவே திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்துள்ளார் என்பதும் அறியப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு திருமந்திரப் பாடல் பாடியுள்ளார். திருமந்திரம் பாடப்பெற்ற திருத்தலம் காவிரி ஆற்றின் தென்கரைத் தலமாகிய திருவாவடுதுறை என்பதாகும். திருமந்திரம் "அன்பே சிவம்" என்னும் கருப்பொருளைக் கொண்டு அமைந்துள்ளது. சிறந்த ஒரு பாடல் வருமாறு.

**அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**<br>
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்**<br>
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**<br>
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

-திருமந்திரம் 270.

அன்பாகிய சத்தியும், அறிவாகிய சிவமும் இரண்டு எனக் கொள்பவர் அனுபவமற்ற மாந்தரே. அன்பின் முதிர்ச்சியால் சிவமாகிய அறிவு விளங்கும். இதை "ஆரும் அறிகிலர்" என்று கூறியுள்ளார். "ஆரும்" என்பது உயர்ந்தவர், தாழ்ந்தவர், சமமானவர் ஆகிய முத்திறத்தார். எனவே அன்புதான் சிவத்தை விளங்கச் செய்யும் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

**சிவனொ டொக்குந் தெய்வம் தேடினும் இல்லை;**<br>
**அவனொ டொப்பார் இங்கு யாவரும் இல்லை;**<br>
**புவனங் கடந்தன்று பொன் ஒளி மின்னும்**<br>
**தவனச் சடைமுடித் தாமரையானே.**

-திருமந்திரம் 5.

உலகில் சிவபெருமானைப் போன்ற தெய்வம் எங்கும் இல்லை. உலகில் தேடிப் பார்க்கினும் சிவம் ஒத்த தெய்வம் இல்லை. அப்பெருமானுக்கு உவமை கூறத்தக்க வேறு தெய்வம் எதுவும் (எவரும்) இல்லை. அப்பெருமான் அண்டத்தைக் கடந்து நின்று பொன்போல் ஒளிர்ந்து விளங்குபவன், செந்நிறமாகிய மேல் நோக்கிய "சகசிரதள"த் தாமரையில் விளங்குபவன் சிவன். அவன் "ஞான சூரியன்" சித்தி முத்திகளாலும் அவனோடு ஒத்தவர் யாரும் எங்குமில்லை. அவன் உலகம் கடந்த கதிரவன். எனவே இங்கு சிவன் ஒருவனே எல்லோருக்கும் தெய்வம் என்னும் உண்மைப் பொருள் பற்றிய தத்துவக் கருத்து வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**<br>
**மனக் கவலை மாற்றல் அரிது.**

-குறள் 07.

"குருவில்லா வித்தை பாழ்" என ஒளவை ஓதினாள். எமக்கு சிவஞானம் உண்டாக வேண்டுமானால் சிவம் என்னும் ஞானாசிரியர் குருவடிவாக வந்து உபதேசித்தல் வேண்டும். அல்லாவிடில், சிவஞானம் கிடைக்காது போய்விடும். மாணவனது அறிவு அவனுக்கு சிவஞானம் உண்டாகப் போதாது. குருவே வரல் வேண்டும். தீ மூட்டுவோன், அத் தீயானது கொழுந்துவிட்டு எரிவதற்குப் பொறுப்பாளன் அல்லன். அத் தீயை மூளச் செய்வோன் தீ எரிவதற்கு முறையான பொறுப்பாளன் ஆவான். அதுபோலவே, ஆன்ம அறிவு, சிவஞானம் பெறப்போதாது. குருவறிவே இதற்குத் துணையாகும். ஆன்ம அறிவு பாசங்களை அகற்றப் போதாது; சிவனறிவு பெறப்படல் வேண்டும்.

*நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து.*

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றம் முன் அற்ற மலங்களே.

-திருமந்திரம் 117.

இதில் பசுக்கள் சூரியகாந்தக்கல் போன்றன. பாசங்கள் பஞ்சு போல்வன. எனவே சூரியகாந்தக் கற்கள் தனியே இருக்கும்போது பஞ்சினைச் சுடமாட்டாதவை. அக் கற்களை மூடிப் பஞ்சு அமையுமெனில் பஞ்சானது எரிந்துவிடும். சூரியகாந்தக் கற்கள், சூரியன் இன்றி எதனையும் சுட்டெரிக்கும் சத்தியற்றவை. சூரிய வெப்பம் வந்தபோது அக் கல்லில் பட்டுத் தெறிக்கும் வெப்பமானது அதிலுள்ள பஞ்சினைச் சுட்டெரிக்கும் சத்தி பெற்றதாய் மாறிவிடும். பின் சூரியன் மறைந்ததும் அது நின்றுவிடும். "சூரியன் சந்நிதி" என்பது சூரியனின் முன்பாக எனக் கூறியுள்ளார். இது ஓர் அழகிய தத்துவக் கருத்தாகும்.

சூரிய காந்தக் கல்லி னிடத்தே செய்ய
சுடர் தோன்றி யிடச்சோதி தோன்றுமாப் போல்
ஆரியனாம் ஆசான் வந்தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்.

-சிவஞானசித்தியார் சூ 8-28.

மேலுள்ள பாடலில் இத்தத்துவக் கருத்து இனிதாக விளக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந் தோம்புகின்றேனே.

-திருமந்திரம் 725.

உடம்பானது உயிர்நலத்திற்குக் கருவியாகின்றமை மேலுள்ள திருமந்திரப் பாடல் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. சிவ நூல்களைப் படிப்பதற்கு முன்பெல்லாம் இந்த உடம்பினை அழுக்குடையது என்று மட்டுமே நான் இகழ்ந்திருந்தேன். பின்னர் சிவ நூல் படித்தறிந்த பின்னர் அவ்வுடம்பினுள் பல பயன்தரும் வழிகள் இருப்பதை நான் அறிந்துகொண்டேன். அத்துடன் இவ்வுடலையே சிவபெருமான் தனது கோயிலாகக் கொண்டுள்ளான் என்பதையும் அறிந்துகொண்டேன். அதற்குப் பிறகு இவ்வுடம்பினைக் கேடுறாதவாறு பாதுகாத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே இங்கு உடல் பேணப்படுதலே உயிர் பேணப்படுவதற்கான ஓர் வழி என்பதை உணர்ந்துள்ளோம். "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்பதுவும் அதுபற்றியே. எனவே உடலை நாம் ஏன் பாதுகாத்தல் வேண்டும் என்பது இங்கு விளக்கப்பட்டுள்ளது.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகா ப்பசு பாசம்
பதி யணுகின் பசு பாசம் நில்லாவே.

-திருமந்திரம் 115.

பதி என்றும் உள்பொருள்; தொன்மையானது. அதைப்போலவே பசுவும் பாசமும் தொன்மையானவை. பாசம் என்றும் ஆன்மாவை உலக பந்தத்தில் ஈடுபடுத்தும் அதனால்த்தான் பதியினைப் பசு அணுகமுடியவில்லை. பசு குருவின் உபதேசத்தால் பதியை அணுகின் பாசம் விட்டொழியும். இந்த உண்மையினைத்தான் சிவபெருமானாகிய தெட்சணாமூர்த்தி சுவாமி, சனகர் முதலியோருக்கு உபதேசம் செய்தனர். பதி ஒன்றே என்றும் உள்ளது. எனவே பசு பாசம் எவ்வாறு தோன்றின என்பதுவும் மக்கள் மத்தியில் கேள்விக் குறியாக உள்ளது. இதற்குரிய விடையாவது; பதியைப் போல் பசு பாசமும் அனாதி; தொன்று தொட்டது. பாசங்கள் பசுவைப் பற்றி நிற்குமன்றி பதியை அணுக மாட்டாதது. பசு பதியிடம் அணுகும்

அந்நேரம் பார்த்து பசுவுடன் கூடி இருந்த பாசங்கள் அன்றோடு விலகி ஓடிவிடும். இத் திருமந்திரத்தால் ஓர் ஐயம் தெளிவாக்கப் பட்டுள்ளது. பதியின் இயல்பு இதனால் விளக்கப்பட்டுள்ளது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

-திருமந்திரம் 139.

சிவன் குருவாய் வந்து திருவடி ஞானத்தை வழங்குவான். அப்படியே திரு வடி ஞானத்தைப் பெற்றபின், அதனை வழங்கிய குருமூர்த்தியை மறத்தல் பெரிய குற்றம் எனக் கூறப்பட்டுள்ளமையால், அக் குற்றத்திற்கு ஆளாகாது என்றும் அக் குரு மூர்த்தியை மறவாது சிவம் எனக் கண்டு வழிபடுதல் வேண்டும் என்பதை இத் திருமந் திரத்தின்மூலம் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஞானகுருவினது திருவுருவை சிவபெரு மானது அருள் திருமேனியாகக் காணுதல் வேண்டும். அவரது திருப்பெயரைச் சிவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தோடு ஒப்பதாக எப்பொழுதும் சொல்லுதல் வேண் டும். சிவனாரது கட்டளைகளை அருள் ஆணை களாகப் போற்றிக் கேட்டல் வேண்டும். அவ ரது திருவுருவை உள்ளத்துள் நினைத்தல் வேண்டும். இவைகளே உண்மை ஞானத்தைத் தருவனவாகும். குரு என இங்கு கூறப்பட்டது ஞான குருவையே. சிவன் ஆசானாக நிற்றல் இந்த ஞானகுருவிடத்தேயாம். ஏனை ஆசிரியர் களைக் குரு எனக் கூறுதல் தவறு. அருளா சிரியர் எனவும் ஞானகுரு அழைக்கப்படுவார். இவர்கள் நிருவாண தீக்கை பெற்ற குருமார் ஆவர். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என நறுந்தொகையிற் கூறப்பட்டிருத்தல் ஒரு முகமனுரையேயாம். உண்மையுமன்று.

இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டி யவனை மணம் புரிந்தாளே.

-திருமந்திரம் 1514.

மூலாதாரத்தில் இருந்த குண்டலினி சத்தி அஞ்ஞானத்தில் உள்ள ஆன்மாவுக்கு ஞானம் ஏற்பட அஞ்ஞானத்தை அகற்றிப் பசுவின் இயல்பையும், பதியின் இயல்பையும் அறியும்படி செய்து ஆசையை உண்டாக்கி உடன்இருந்தாள். சுவாதிட்டானத்துக்கு மூலை யில் இருந்த மூலாதாரம் பற்றியது இது. குண்டலினி சத்தி என்பது இங்கே குமரி எனப்பட்டுள்ளது. குண்டலினி, உயிரைச் சிவத்துடன் சேர்த்தலை இங்கு "மருட்டிப் புணர்தல்" எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இவை எல்லாம் குண்டலினி சத்தியின் செய்கை என்பதை உணர்தல் வேண்டும். உலகத்தில் உள்ள துக்கம் நிலையாமை முதலியவற்றை நன்கு புலப்படச் செய்து, உயிரைச் சிவத்துடன் சேர்ப்பிக்கும் நல்ல காரியத்தை குண்டலினி சக்தி செய்துள்ளது. குருட்டுக் கிழவனாகிய அஞ்ஞான இருளில் எதுவும் விளங்காமல் குருடனைப்போல் இருந்த ஆன்மாவை குண்டலினி சத்தி சேர்ந்தமை யால், ஆன்மாவானது சிவத்தையடைய வழி பிறந்தது. அற்பமான அறிவினைப் பெற்ற ஆன்மா, சிவத்தையடைந்து சிவஞானம் பெறுவதற்கு வழிகாட்டியது குண்டலினி சத்தியே.

சிவ சிவ வென்கிலர் தீவினையாளர்
சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

-திருமந்திரம் 2716.

சிவ சிவ என செபியாதோர், ஓயாது சிவ சிந்தனை செய்யாதோர், சிவ நாமத்தை

*ஒவ்வொரு தடவையும் விழுவது மீண்டும் எழுவதற்கே என்று நம்புங்கள்.*

உச்சரிக்காதோர் பாவிகளாவர். பெரும் பாவம் செய்தவர்கள் அவர்கள். சிவ சிவ என்று சொன்னால் செய்த பாவங்கள் யாவும் கழிந்து தொலைந்துவிடும். சிவ சிவ என்று செபித்தால் மனிதனும் தேவன் ஆகலாம். தெய்வமாகலாம். சிவ சிவ என்று செபிப் போர்க்குச் சிவப்பேறு கிடைக்கும். பொய், புனைந்துரைகள் பேசும் வாயால் சிவ சிவ என்று சொன்னால் பாவம் தொலையும். புண் ணியம் சேரும். நாம் துன்பப்படும்போது ஐயோ, அம்மா என்று அலறுகின்றோம். அந்நேரத்தில் சிவ சிவ எனக் கூறிடின் துன்பம் தொலைந்து இன்பம் பெருகும். எனவேதான் அப்பர் பெரு மான் "நாவுக்கு அருங்கலம் நமச்சிவாயவே" என்று பாடினார். சிவ சிவ எனக் கூறினால் மனிதர் விண்ணுலக வாழ்வு பெறுவர். மேலும் மேலும் சிவ சிவ என்று கூறினால் சிவகதி ஆகிய வீடுபேறு கிடைக்கும். எனவே பயன் வளர்ந்துகொண்டே போகும் என்பது திருமூலர் கருத்து. தீவினை செய்தோர்களுக்கு இப் பெரிய பேறு கிடைக்கவேண்டிய பலன் இன்மையால் சிவ சிவ என அவர்கள் சொல்ல மாட்டார்கள்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார் முதற் பூதமே.
-திருமந்திரம் 2290.

நமக்கு சில விடயங்களில் மயக்க மாக இருக்கும். அவற்றைச் சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அம்மயக்கத்திற் கான காரணம்தான் என்ன? இதில் அதற் கான காரணம் சொல்லப்பட்டிருக்கின்றது. காரியம் வெளிப்படையாகத் தோன்றும். அத் தோற்றத்தில் மயங்கினால் அதன் காரணம் புலப்படாது. மறைந்தே இருக்கும். அக் கார ணத்தை உணர்ந்து விட்டால் காரியத்தால் உண்டான மயக்கம் தெளியும். இவ் விளக் கத்தை அறிந்தபின் மயக்கம் தெளியும்.

மரத்தால் செய்யப்பட்ட அழகிய பெரிய யானையின் உருவம் (சிற்பம்) அதைப் பார்க்கின்றபொழுது அது உண்மையான யானை நேர்முகத்தில் வந்து நிற்பது போலவே தெரிகிறது. ஆனால் அது ஒரு சிற்ப யானை. எனவே அந்நேரத்தில் சிற்ப யானை சிற்பம் என்பது மறைந்து நிசமாகவே யானைபோல் தெரிகிறது. அது செய்யப்பட்ட யானை. மரம் இன்னது என்பது அங்கு மறைந்து போகின் றது. அது ஒருவகை வைர மரத்தால் செய் யப்பட்ட உருவம் என்பது உண்மைதான். ஆனால் அந்நேரத்தில் நாம் மரம் இன்னது என்பதைச் சிந்திப்பதில்லை. யானையின் உருவத்தை மட்டும் பார்க்கிறோம். இதுதான் மரத்தை மாமத யானை மறைத்த விதம் ஆகும். பின்னர் அதே யானை உருவை ஒரு கணம் மறந்து, அது செய்யப்பட்டது இன்ன மரத்தினால் என்பதையும், அதன் தன்மை, அழகு இவற்றைப் பார்த்தால் யானை மறைந்து விடுகின்றது. மரம்தான் நமது கண்ணில் படுகின்றது. இதுதான் மரத் தில் மாமத யானை மறைந்த விதம். இதைப் போலவே பரமனாகிய சிவபெருமான் விண், மண், நீர், நெருப்பு, காற்று என்னும் ஐந்து பூதங்களாலும் மறைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் இந்த ஐந்து பூதங்களும் இறை வனில் ஒடுங்கி மறைந்திருக்கின்றன. உலக இச்சைகள் இறைவனை மறக்கச் செய்யும். எனவே இறைவனை நினைத்துவிட்டால் உலக இச்சைகள் அகன்றுவிடும்.

சிவனடியார்களை நாம் நடமாடும் கோயிலாகவே கண்டுள்ளோம். அத்தகைய சிவனடியார்கள் மனித வடிவுடைய நடமாடும் கோயிலாகவும், உடம்பே ஆலயமாகவும் திருமூலர் தெளிவுபடுத்தியுள்ளார். இத் தத்துவம்

மிக மேலானதும், புதுமையானதாகவும் உள்ளது. இதனால் திருமூலர் ஆன்மீக வரலாற்றில் ஓர் புரட்சிக் கவிஞர் எனப் புகழப்படுகின்றார்.

**உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.**

-திருமந்திரம் 1823.

ஞானிகளுக்கு அவர்தம் உள்ளமே கருவறையாக விளங்கும். கருவறையில் இறைவன் இருப்பான். இக் கோயில் அமைப்பு முழுவதையும் உடம்பில் முழுவதிலும் காண்கின்றோம். கருவறையில் உறையும் வள்ளல் பெருமானார்க்கு ஞானியின் வாய் கோபுர வாசலாக அமைகின்றது. ஞானியின் உயிர்தான் கருவறைப் பெருமானாகிய சிவலிங்கம். ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகள் ஐந்து தலைகளையுடைய நாகமாம். இந் நாகத் தலைகளின் மேல் உள்ள நாகமணிகள் ஐந்தும் எம்பெருமானை நோக்கி ஒளியூட்டிக்கொண்டிருக்கும் விளக்குகளாக விளங்கும். காளமணிவிளக்கு என்பது நஞ்சுள்ள மணிவிளக்குகள். நாகபாம்பு நஞ்சுடையது. எனவே இப் பாம்பானது குண்டலினி சத்தியைக் குறித்தது. சிவலிங்கம் என்றது, அதனால் உண்டாகும் சிவசோதியை. குண்டலினி சிவலிங்கத்திற்குமேல் குடைபோல் கவிந்திருக்கும் நாக படங்கள் ஐந்து. ஆன்ம உணர்வின்கண் சிவன் விளங்குவதால் "சீவன் சிவலிங்கம்" என்று விளக்கப்பட்டுள்ளது.


சிவனது திருவருளால் இறைவனை உணர்ந்த மெய்யறிவாளர்கள் தமது முன்னைய பின்னைய வினைகள் அனைத்தையும் அழித்து விடுவார்கள். அதன் திருமந்திரப் பாடல் வருமாறு.

**தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவனருளாலே.**

-திருமந்திரம் 2611.

பழ வினையாகிய சஞ்சிதத்தை நீக்குவித்துக் கொள்வர். மேலும் இத் தத்துவ ஞானிகள் நிகழ்கால வினையாகிய ஆகாமிய வினையை கசக்கிப் பிழிந்து விடுவர். இவை யாவற்றையும் செய்யத்தக்க ஆற்றலைக் கொடுத்தவர் யாரெனில் அவர் சிவபெருமானேயாவார்.

## இறைவனடி சேர்ந்தார்



சைவத்திரு காசிநாதர் சிவபாலன் அவர்கள் 16.10.2019இல் இறைவனடி சேர்ந்தார். விளம்பரம் எதையும் விரும்பாது- ஆடம்பரம் எதுவுமின்றி- அமைதியாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கடந்த 35 வருடங்களாக தொண்டாற்றி மறைந்த மாமனிதர் அமரர் சிவபாலன் அவர்களாகும்.

தெல். அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம லிகிதராகவும், தெல். சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தின் நூலகராகவும் தொண்டாற்றி மறைந்த உத்தமர் அவர்.

வாழ்நாள் பூராவும் "சைவ வளர்ச்சி" எனும் சிந்தனையுடன் வாழ்ந்து மறைந்த அன்னாரின் ஆத்மா இறைவன் காலடியில் இளைப்பாற சந்நிதியான் ஆச்சிரமம் பிரார்த்திக்கிறது.

*சமுதாயம் என்பது மனிதர்களின் ஒற்றுமைதான்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

## அழிப்பதுவும் அனுக்கிரகமே

ஒரு நாள் எல்லோரும் அம்பிகா வனத்திலுள்ள அம்பிகை ஆலயத்திற்குச் சென்று பூசை செய்தார்கள். இரவு அங்கே படுத்து உறங்கினார்கள். பெரிய பாம்பு ஒன்று உறங்கிக் கொண்டிருந்த நந்தகோபரை விழுங்கத் தொடங்கியது. நந்தகோபர், “கிருஷ்ணா காப்பாற்று காப்பாற்று” என்று கத்தினார். திடுக்கிட்டு எழுந்த கோபர்கள் வெளிச்சத்துக்காக வைத்த கொள்ளிக்கட்டை களைக் கொண்டு பாம்பை அடித்தார்கள். நெருப்பு சுட்டபோதும் அவரைப் பாம்பு விட்ட பாடில்லை. கிருஷ்ணர் அருகே போய் பாம் பின்மீது காலை வைத்தார்.

உடனே பாம்பு கந்தர்வனாக மாறி யது. “பகவானே, நான் சுதர்சனன் என்ற கந்தர்வன். ஐஸ்வர்யத்தாலும் அழகாலும் கர்வம் கொண்டிருந்த நான், ஒரு சமயம் அழகில்லாத அங்கிரஸ் முனிவர்களைப் பரி காசம் செய்தேன். அவர்களுடைய சாபத் தால் பாம்பானேன். தங்கள் திருவடி ஸ்பரிசத் தால் சாபவிமோசனம் பெற்றேன். அவர் களுடைய சாபமும் எனக்கு அனுக்கிரக மானது. அந்தச் சாபம் இல்லாவிட்டால் தங் கள் திருப்பாதத் தொடர்பு ஏற்பட்டிருக்காது அல்லவா?” என்று கந்தர்வன் பகவானை வலம்வந்து வணங்கி விடைபெற்றுச் சென் றான்.

ஒருமுறை சங்கசூடன் என்ற யட்சன் கோபியர்களைக் கடத்திக்கொண்டு போனான். இவன் குபேரனுடைய வேலைக்காரன். இவ னுடைய தலையில் ஒளிவீசும் இரத்தினம் ஒன்று இருந்தது. கோபியர்களைக் காப்பாற்ற பலராமனும் கிருஷ்ணனும் பின் தொடர்ந்து ஓடினார்கள். சங்கசூடன் பயந்துபோய் கோபி யர்களை விட்டுவிட்டு ஓடினான். கோபியர் களுக்குக் காவலாக பலராமர் நிற்க, கிருஷ் ணர் அவனைத் துரத்திச் சென்று, அவனைக் கொன்று தலையில் இருந்த இரத்தினத்தைக் கொண்டு வந்து பலராமருக்களித்தார்.

அரிஷ்டன் என்ற அசுரன் மிகப்பெரிய ரிஷபத்தின் உருவமெடுத்து, குளம்புகளால் பூமியைப் பிளந்து கொண்டு கர்ஜனையோடு வந்தான். உன்னுடைய கொழுப்பை அடக்க நான் இருக்கிறேன் என்று கூறி அவன் கொம்பு களைப் பிடித்து பலமாகத் தள்ளினார் கிருஷ்ணர். மீண்டும் அவன் எழுந்து எதிர்க்க அவன் கொம்புகளைப் பிடித்துக் கீழே தள்ளி, கொம்பாலேயே அவனை அடித்துக் கொன்றார். ரத்தம் கக்கி விழுந்து மடிந்தான் அசுரன்.

## கம்சனின் சதி

நாரத முனிவர் தேவர்களுக்கும் வேண்டியவராக இருக்கிறார். அசுரர்களுக்கும்,

அரக்கர்களுக்கும் வேண்டியவராக இருக்கிறார். தேவ சபையில் என்ன மரியாதை இவருக்குண்டோ, அதே மரியாதையைக் கொடுமையான அசுரனும் கொடுப்பான். அத்தகைய நாரதர் கம்சனிடம் வந்தார். தேவகியின் எட்டாவது மகன் கிருஷ்ணன் என்றும், பலராமரும் வசுதேவனின் மகன்தான் என்பதையும், கோகுலத்தில் வளர்வதையும் சொல்லிவிட்டுப் போனார். கிருஸ்ணரின் அவதார காரியம் நடக்க வேண்டுமே என்று நினைத்தே வந்தார். கம்சனிடம் சொல்லிவிட்டுச் சென்றார்.

கம்சனின் நிம்மதி போய்விட்டது. வசுதேவரின் பிள்ளைகளால்த்தான் தொல்லை. அவர்களைக் கொல்கிறேன் என்று எழுந்தான். நாரதர் தடுத்துவிட்டார். கேசி என்ற அசுரனை அழைத்து அவர்கள் இருவரையும் கொன்றுவிடும்படி அனுப்பினான். பின்பு சாணூரன், முஷ்டிகன் என்ற மந்திரிகளை அழைத்து, மல்யுத்தத்துக்குக் கிருஷ்ணனையும், பலராமனையும் அழைக்கிறேன். மல்யுத்தத்தில் அவர்களைக் கொன்றுவிடுங்கள் என்றான். கம்சனின் யானை குவலயாபீடம் எனும் பெயர் கொண்டது. அதன் பாகனை அழைத்து பலராமனும், கிருஷ்ணனும் வரும்போது வாசலில் வைத்து அவர்களைக் கொன்றுவிடு என்று கட்டளையிட்டான். தனுர்யாகம் வருகிற சதுர்த்தசி தினத்தில் ஆரம்பிக்கப்படட்டும் என்று கட்டளையிட்டான். அவர்களை எவராலும் கொல்லமுடியாது. இனி கோகுலத்துக்கு ஆள் அனுப்பி அவர்களை வரவழைக்க வேண்டும் அதற்கு அக்ரூரர்தான் சரியான ஆள் என அவரை வரவழைத்தான்.

அக்ரூரர் வந்தார். அவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, உங்களைத்தான் நம்பி இருக்கிறேன். எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். நீங்கள் நந்தனுடைய கோகுலத்துக்குப் போய், அவருடைய பிள்ளைகளை உடனே அழைத்துவர வேண்டும். அந்த இரண்டுபேரும்தான் எனக்கு எமன்கள் என்று அவர்களைக் கொல்ல தான் வைத்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் சொல்லி தனுர் யாகத்தைப் பார்ப்பதற்காக என்று அழைத்து வாருங்கள் என்றான். அக்ரூரரும் சரி என்று உடனே கிளம்பினார்.

### கேசி வதம்

கேசி குதிரை உருவத்தோடு மிகப் பயங்கரமாகக் கனைத்துக்கொண்டு கோகுலத்துள் நுழைந்தான். எல்லோரும் பயந்து ஓடினர். கிருஷ்ணர் மூர்க்கமாக எதிர்க்கும் அவன் பின்னங்கால்களை தூக்கி வேகமாகச் சுழற்றி வீசி எறிந்தார். மீண்டும் அவன் எழுந்து ஆக்ரோசமாக எதிர்த்தான். கிருஷ்ணர் அந்தக் குதிரை வாய்க்குள் தன் கையை நுழைத்தார். கை பெரிதாகிக்கொண்டு போனது. மூச்சுத் திணறி விழுந்து இறந்தான் கேசி.

அதன்பிறகு நாரதர் கிருஷ்ணர் அருகில் வந்து கம்சனுடைய திட்டத்தைப் பற்றியும், மூன்றாவது நாளில் கிருஷ்ணர் கம்சனைக் கொல்லப்போவதையும், இன்னும் எதிர்காலத்தில் அவர் செய்யப்போகும் செயல்களையெல்லாம் கூறி வணங்கித் துதித்து விடைபெற்றார்.

கிருஷ்ணரும் மற்றக் கோபர்களும் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்தபோது "ஆடு- திருடன்" விளையாட்டு விளையாடினார்கள். சிலர் ஆடுகளாகவும், சிலர் திருடர்களாகவும் விளையாடுவர். திருடர்கள் ஆடுகளைக் கொண்டுபோய் ஒளித்து வைப்பார்கள். மற்றவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். இது விளையாட்டு. அப்போது வியோமன் என்ற அசுரன் அங்கு வந்தான். இந்த விளையாட்டைப் பயன்படுத்திக்கொண்டு, பல கோபர்களைக்

கொண்டுபோய் குகையில் வைத்து, பெரிய பாறாங்கல்லைக் கொண்டு குகை வாயிலை மூடினான். இதனைத் தெரிந்த கிருஷ்ணர் வியோமாசுரனைக் கொன்றுவிட்டு, கோபர்களைக் குகையிலிருந்தும் விடுவித்தார்.

### அக்ரூரர் வருகை

அக்ரூரர் ரதத்திலேறி கோகுலத்துக்கு கிருஷ்ணரைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியதே என மகிழ்ந்து பயணப்பட்டார். அவர் ஞானி. தன்னை எப்படி கிருஷ்ணரும், பலராமரும் வரவேற்பார்கள் என்று தேரில் போகும்போதே கனவு காணத் தொடங்கினார். அவர் நினைத்தது போலவே அவரை வரவேற்று விருந்துகொடுத்து உபசரித்தனர். தனுர் யாகத்திற்கு அழைப்பதற்கே தான் வந்திருப்பதாகவும், கம்சனின் சூழ்ச்சி எண்ணத்தையும் கிருஷ்ணரிடம் கூறினார். நந்தகோபரும் மறுநாள் எல்லோரும் கிளம்புவதற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி கோகுலத்தில் அனைவருக்கும் அறிவிக்கச் சொன்னார்.

அக்ரூரர் கிருஷ்ணரை அழைத்துப் போவது அறிந்து கோபியர்கள் துடித்துப் போனார்கள். புலம்பித் தவித்தபடியே இரவைப் போக்கினார்கள். மறுநாள் அக்ரூரர் வந்த ரதத்தில் பலராமரும், கிருஷ்ணரும் ஏறிக்கொண்டார்கள். நந்தகோபரும் மற்றையோரும் மற்ற வண்டிகளில் ஏறினார்கள். கிருஷ்ணர் செல்வதை கோபியர்கள் பதுமைகளாகப் பார்த்துக்கொண்டே நின்றனர். தேருடன் கூடவே அவர்கள் மனமும் போனது. "நான் மீண்டும் திரும்பி வருவேன்" என்று தூதுவர்கள் மூலம் அவர்களுக்கு கிருஷ்ணர் சொல்லி அனுப்பினார்.

"கருமுகில் வண்ணனை காயாம்பூ வண்ணனை
கமல மலர்த்தாளினைப் போற்றுவோம்"

(தொடரும்...

## நிம்மதியே உண்மையான செல்வம்!

துறவி ஒருவர் கிராமத்துக்கு வந்திருந்தார். பணக்காரன் ஒருவன் அவரிடம் ஆசி வாங்கினால் தனக்கு மேலும் பணம் பெருகும் என்ற எண்ணத்தில் அவரைச் சந்திப்பதற்குச் சென்றான். துறவியின் பாதத்தில் விழுந்து வணங்கினான்.

"அன்பனே! எழுந்திரு! உனக்கு என்னப்பா குறை!" என்று கேட்டார். "ஐயா! உங்கள் நல்லாசியுடன் நான் இன்னும் பணம் சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துங்கள்" என்று கூறினான். துறவி அவரிடம், "செல்வம் என்பது சிந்தையின் நிறைவு. பொருளாசைக்கு எல்லையே கிடையாது. மனம் என்னும் குரங்கு தாவிக்கொண்டேதான் திரியும். நாம்தான் மனதை ஒருமுகப்படுத்தி நிலைநிறுத்த வேண்டும். இல்லாதவர்களுக்குச் சிறிதளவாவது கொடுப்பதே நீ பெற்ற செல்வத்தின் பயனாகும். பெற்ற பொருள் அனைத்தையும் நீ ஒருவனே அனுபவிக்க வேண்டும் என்றால் முடியாது. வாழ்க்கையில் நாம் இழக்கக் கூடாத பெருஞ் செல்வம் மனநிறைவும், நிம்மதியுமே. ஒரு நாளைக்கு ஒருபிடி அன்னத்தையாவது பசித்தவருக்கு உணவாக இடு! உன்னிடம் உள்ள பணம் உனக்கு உதவலாம், உதவாமலும் போகலாம். நீ படுத்த படுக்கையாகக் கிடந்தால், பணத்தை எட்டி எடுக்கக்கூட கை உதவாது. ஆனால், ஒருவன் செய்த தர்மம் தக்க சமயத்தில் உதவும்" என்று ஆசியளித்தார். இந்த அறிவுரை பணக்காரனின் மனதை மாற்றியது. தான் மட்டுமே செல்வத்தை அனுபவிக்கவேண்டும் என்ற தன எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

*தன்னால் இயன்றதைச் செய்பவன் வீரன். மற்றவர்கள் அதைச் செய்வதில்லை.*

# கலகத்து அரக்கர் பலர் எங்கள் கருத்திநுள்ளே புகுந்துவிட்டார்

## -பாரதி-

— **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் —

மனித உடம்பை, வடிவத்தை, தோற்றத்தை, அமைப்பை மாற்றியமைக்க விஞ்ஞானம் முனைகிறது. இந்த மானிடம் அதற்குப் பின்னாலே விரைந்து ஓடுகிறது. இப்புனிதமற்ற உடலை மாற்றி, மெருகு, மேட்டிமைப்படுத்தும் நம்மினம், சொந்தமனதைப் புனிதமாக்குவதற்குப் பதில் குப்பை மேடாக்குகிறது. மனமும், குணமும், மனப்பாங்கும், குணவியல்பும் வெகுதூரம் பின்னணியில் பசையடிக்கிறது. ஒருவரைச் சார்ளிசப்பிளினாக மாற்றலாம். அவரும் சப்ளின்போல் நடிக்கலாம். கம்பைச் சுழற்றலாம். பார்ப்பவர்கள் இரசிக்கலாம். போற்றலாம், புகழலாம். அவரின் உயிர், ஆத்மா, சிந்தனை, செயல் உண்மையில் அவர் பிறப்பின் வழியதுதான். இவ்வுடம்பை சிறுகுடில் பழங்குடில் (தினைத்தயோர் பொறையிலா உயிர் போங்) கூடு என்றுதான் வர்ணிப்பர் மெய்யியலாளர். இந்த உடம்பை, அலங்கரிக்கிறோம், பூசிப் புனர்க்காரம் செய்கின்றோம். பட்டும் பல நகையும் அணிகின்றோம். வெண்கேசத்தைக் கருங்கேசம் ஆக்குகிறோம். ஸ்ரைல் பண்ணுவதே நாகரிகம் என்கிறோம். உடை நடை பாவனை, வாசனை, பூச்சுகள் எம் வெளித் தோற்றத்தை மாற்றலாம். ஆனால் அகத் தோற்றத்தை மாற்றாது. அகத்தின் அழகு முகத்திற் தெரியும். அடுத்தது காட்டும் பளிங்குபோல் உள்ளம் கடுத்தது காட்டும். புறந்தூய்மை நீரான் அமையும். அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும். குறள். மனிதம் விஞ்ஞான நோக்கில் விலங்கு பிராணி எனத்தான் கணிக்கப்படுகிறது. மனிதரிலே பறவையுண்டு, விலங்குண்டு, ஊர்வனவும் உண்டு என்பர். மாவும் மாக்களும் ஐயறிவினவே என்பர் தொல்காப்பியர். மனம் படைத்தவன் மனிதன். மனத்தை ஆள்பவன்தான் மனிதன். ஐம்பொறிகள் மனசை ஆள முயல்கின்றன. அதற்கு இடமளிக்காமல் மனசை வழிப்படுத்துபவன்தான் மனித நிலையுடையவன்.

நித்தம் நித்தம் நீராடி உடம்பைச் சுத்தம் செய்யலாம். ஆனால் அதைப்போற் பன்மடங்கு சித்தத்தைச் சுத்தமாய் வைத்திருப்பதே அதி இன்றியமையாதது. மனத்திலே கெட்ட குணங்களின் சகவாசம் வந்துவிட்டால் சேற்று எருமைதான் மனம். இந்த மனச்சிறப்பே மனித வாழ்வின் அடிப்படை. நன்னலம் பேணத் தன்நலம் போக வேண்டும். ஆக மனச் செம்மையே வாழ்வின் செம்மையாம். மனித விழுமியங்கள், நாகரிகம் பற்றிப் பேசுமளவு மனநலம்பற்றி அக்கறை கொள்வது குறைவு. இம்மனுக்குலம் வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு. எனவே மனநலம் எல்லா நலத்திலும் மேலானது. இதையே வள்ளுவர்,

**உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு** (993) என்றார்.

வெறுத்தக்க- செறியத்தக்க. ஆகவே மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர் என்ற உண்மையையும் அடுத்துப் பேசினார். சார்ந்ததன் வண்ணமாதல் உயிரினதும், மனதினதும்

*எங்கும் இருள் என்பது கிடையாது. அறியாமைதான் இருள்.*

வேலை. எனவே மனநலம் வாய்க்க இனநல மும் முக்கியமாம். சேரிடம் அறிந்து சேர் என்பர் அவ்வையார்.

**மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப் புடைத்து.**

குறள்- 458.

ஏமாப்பு- பாதுகாப்பு, வலிதாதல். இதையும் தமிழன்னை சான்றோர் இனத்திரு என்றாள். எனவே மக்கள் வாழ்வு உண்டு, உடுத்து, களித்து, பேரோடும், புகழோடும் இருப்பதன்று. மனச் செம்மைபேணி, அறப் பண்புகளை வளர்த்து உயர்ந்ததில் உயர்ந்த தாம் பக்குவங்களை வளர்ப்பதிற் தங்கியுள் ளது. எவன் மனிதம் பேணித் தன்னை வழி நடத்துகிறானோ அவன் மனிதன். மாமனிதர் களும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை. மனிதப் புனிதர்களும் வாழ்ந்து காட்டியுள் ளனர். இன விருத்தியன்று வாழ்வு. நற் சமுதாயத்தை உருவாக்குவதே செவ்விய வாழ்வு. சம்பாத்தியம், புகழ் போன்றவை இரண்டாம் மூன்றாம் பட்சமானவை பிறர் போற்ற வாழ வேண்டும். பிறர் தூற்ற வாழக் கூடாது. வையத்துள் வாழ்வாங்கு வாழ மனம், நலம், கல்விநலம், கொள்கை, கோட் பாடு நடைமுறை முக்கியம். சாதனையும் தேவை. எதிர்நீச்சல் போடுவதுபோல வாழ் வின் பின்பகைப் புலம், முன்பகைப்புலம் இரண்டிற்கும் முகம் கொடுத்து செவ்விய, செப்பமான, சீரிய, நேரிய நீர்மைகளைக் கட்டி எழுப்புவதே மனித வாழ்வாம். இந்த மனப்பக்குவத்தைக் கெடுக்கும் தீய சக்தி களை ஊடுருவ விடாமல் உறுதியென்கின்ற இரும்பு மதில் தேவை. புதுமையென்னும் சேற்றிலே நாம் புதையக்கூடாது பாரதி பல இடங்களிலே. மன உறுதியை, மட்டில்லாச் செம்மை நலங்களைப் பற்றிப் பேசியுள்ளார்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்.

மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படவேண்டும்
உறுதி வேண்டும்.

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின்மீது தனியரசாணை
பொழுதெலாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடும் தனிப்பரம் பொருளே.

சுயசரிதை 49.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் அறிவு வேண்டும்.

அன்னையை வேண்டுதல்.

*நல்ல புத்தகங்களைப் போன்ற நம்பிக்கை இந்த உலகத்திலே இல்லை.*

மனம் பக்குவப்படல் வேண்டும். செக்குமாடுபோல் வளையக்கூடாது. எனவேதான் பாரதி மனம் சுத்தமாக வெளுக்க வழியில்லையே என்று பொங்கி எழுகின்றார். துணியின் அழுக்கைச் சோடாவால் நீக்கலாம். பட்டை போடப் போடத்தான் பளபளக்கும் வைரம். தோலைப் பதனிட்டு ஏதேதோ செய்யலாம். அப்பாலே மனம் வெளுக்க மார்க்கமில்லையெனக் கூறி, ஈற்றில் என்ன சொன்னார்?

கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்துமாரி
மாரியம்மா எங்கள் முத்துமாரி
பல கற்றும் பல் கேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை எங்கள் முத்துமாரி
மாரியம்மா எங்கள் முத்துமாரி

-40 முத்துமாரி 1.

இவ்வருமையான சிந்துதமிழ் எம் மனக் கதவங்களைத் திறக்க வேண்டும். மன வாயிலைத் திறந்து, உலகக் கதவுகளை மூடப்பழகவும் வேண்டும். நமக்குள்ளே இருப்பவை. அகப்பகை. வெளியில் இருப்பவை புறப்பகை. இவற்றின் கருவை அறுக்க வேண்டும். ஐம்பொறிவழி செல்வன புறம். மனதைத் தைக்கும் மெய், வாய், கண், மூக்கு, செவியுணர்வு மனதைப் பாதிப்பன. அ∴தேபோல காம குரோத லோப மோக மதமாற்சரியங்கள் அகப்பகை. பகைவன்- விரோதி. இவை நம்மையடுத்துக் கெடுக்கும் உட்பகைகள். இவற்றை உட்புகவிடக் கூடாது. படித்தவனைக்கூட இவையாட்டியசைக்கும் பான்மையன. வள்ளற் பெருமான் இந்த அனுபவங்களை உயிர் ஓவியமாகத் தீட்டியுள்ளார்.

காமஉட்பகைவனும் கோபவெங் கொடியனும்
கன லோப முழுமூடனும்
கடு மோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண் கெட்ட ஆங்காரியும்
ஏமம் அறு மாச்சரிய விழலனும் கொலை என்
றியம்புபா தகனுமாம் இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள் வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலய முனிவன்
சிந்தனையின் வந்தனை உவந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே
தாமம் ஒளிர் சென்னையில் கந்த கோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

அருட்பா திருமுறை- தெய்வமணி 2.

*எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ அந்த வீட்டில்த்தான் ஒளிவிளக்கு இருக்கிறது.*

குறிப்பிட்ட ஆறோடு ஒன்றாக ஏழு பேசப்பட்டுள்ளது. ஏழாவது கொலை. இவை மட்டுமன்றி இவற்றோடு தொடர்புடைய அரக்கர் கொடுமையை நாம் காறி உமிழ வேண்டும் என்பதைப் பாரதி நிறுதிட்டமாகப் பாடிக் காட்டியுள்ளார். இனி இவ்வாறின் விளக்கம் என்ன எனக் காண்போம்.

காமம் என்பது தனந்தான்யம் புத்திர பௌத்திராதிகளின் பேரில் அதிகப் பரீதி வைத்தல். இதனாற் துயர் அடைந்தவர் நரகாசுரன், வாலி, சந்திரன் முதலியோர்.

குரோதம் என்பது ஒருதருக்குக் கெடுதி விளைவிக்கப் பிரயத்தனம் செய்ய இச்சை கொள்ளுதல். இதனாற் துயர் அடைந்தோர் பகாசுரன் முதலியோர்.

லோபம் என்பது தனது சொத்தில் இருந்து ஞானிகளுக்குக்கூடச் சிறிதேனும் கொடுக்கக் கூடாது என்னும் எண்ணமிருத்தல். (இவறன்மை வேண்டுழிப் பொருள் கொடாதிருத்தல்) இதற்குச் சான்று துரியோதனன்.

மோகம் என்பது புத்திர களத்திரர் களின்மீது அதிகப் பிரீதியை வைத்துத் தனக்குண்டாயிருக்கும் பொருள் போதாது என்றும் இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசையை விருத்தி செய்தல். புத்திர சோகத்தாற் துயரப் பட்டான் தசரதன்.

மதம் என்பது திரவியம் அதிகரிப்பதனால் மற்றவர்களை இலட்சியம் (அலட்சியமாக) வைக்காமற் பேசுதல். இதனாற் துயர் அடைந்தவன் கார்த்தவீரியார்ச்சுனன்.

மாச்சரியம் என்பது தன்னைப்போற் பிறரும், தன்னைப்போற் சுகம் அனுபவித்தலை சகியாமை விளைவிக்கும் சித்த விருத்தியை உண்டாக்கல். இதனால் அழிந்தவன் சிசுபாலதந்தவக்கிரன்.

சுரர்- தேவர். இதன் எதிர்ப்பதம் அசுரர். இவர்களே அரக்கர் மனுஷத்தனம் இல்லாது துஷ்டத்தனம் நிறைந்தவர்கள். சைவாலயங்களிலே இயம சங்காரம், சூரன் போர், நரகாசுரன் போர் வெகு வேடிக்கையாக நடைபெறும். நம் அசுர குணங்களை, அரக்கத்தனங்களை விட்டோமா. நான் யான் என்று தானே வாழ்கிறோம். யான் எனது அற்ற இடமே திருவடியாம் என்ற உண்மையை உணர்ந்தோமா. இந்த அகங்கார, மமகார (நான்- எனது) சூரர்களை வெட்டியெறிவதே- சம்மாரங்களின் கருமமாம். அபிடேகம் கோடி அர்ச்சனை, சங்காபிஷேகம், சூரன்போர் நம்மைச் சுத்தப்படுத்தட்டும். சுத்தமான இருதயத்தோடும் கருமங்களை மேற்கொண்டு ஆன்மீக நெறியை மேற்கொள்வோமாக. நம் சந்ததி கொடுமையற்ற புனிதர்களாக வாழ நாம் உழைப்போமாக.

## அசுரர்களின் பேர் பாரதி பாடல்.

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின் சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை
துச்சமெனப் பிறர் பொருளைக் கருதலாலே
சூழ்ந்த தெலாம் கடவுளெனச் சுருதி சொல்லும்
நிச்சயமாம் ஞானத்தை மறந்த தாலே
நேர்வதே மானுடர்க்குச் சிதைத்தீ நெஞ்சில்.

-சுயசரிதை 7.

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவேயன்றி
வேறொன்றறியேன் பராபரமே.
மனிதர் நோக மனிதர் வாழ்வதா. -தாயுமானவர்.

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

பல காலங்கள் உருண்டோடிய பழமையான புதுக்கதை ஒன்று. ஒரு பாடசாலையில் ஆசிரியர் மாணவர்களிடம் வினவுகின்றார். உங்களுடைய இலட்சியம் என்ன? எதிர்காலத்தில் நீங்கள் என்னவாகப் போகின்றீர்கள்? எனும் கேள்விக் கணைகளை மாணவர்களிடம் ஏவினார்.

ஒருவன் வைத்தியனாகப் போகிறேன் என்றான்; மற்றொருவனோ சட்டத்தரணியாக வருவேன் என்றான், இன்னொருவன் பொறியியலாளனாக மிளிர்வேன் என்றான். இவ்விதம் தொடர்ந்து ஒவ்வொரு மாணவனையும் கேட்டு வர ஒரு மாணவன் கூறினான், நான் தேரோட்டியாகப் போகிறேன் என்றான். அனைத்து மாணவர்களும் அவனைக் கேலி செய்தனர். ஆசிரியருக்கோ கோபம் தலைக்கேறியது. இவ்வளவு பணத்தைச் செலவழித்து இந்தப் பாடசாலையில் உன் பெற்றோர்கள் படிக்க வைப்பது நீ தேரோட்டியாகத்தானா? என ஏசினார். அந்த மாணவனிடம் நாளை நீ பாடசாலை வரும்போது உன் பெற்றோரைக் கண்டிப்பாக அழைத்து வரவேண்டும் என்று கடிந்துரைத்தார். அந்த மாணவனின் பெயர் நரேந்திரன்.

மறுநாள் தன் தாயாரை அழைத்துக்கொண்டு அவன் பாடசாலை செல்கிறான். தாயாரிடம் ஆசிரியர் இவன் நேற்று என்னிடம் கூறியதைக் கேட்டீர்களா? தேரோட்டியாகப் போகிறானாம். என்ன இவ்விதமாகப் பிள்ளையை வளர்த்திருக்கிறீர்கள். கண்டிக்கத் தெரியாதா புத்திமதி கூறுங்கள் எனக் கூறினார். தாயாரும் மறு பேச்சுப் பேசாமல் அவனை மிகவும் அன்புடன் வீடு அழைத்துச் சென்றார்.

மகனை வீட்டிற்கு அழைத்துச் சென்றவர் நேரடியாகச் சுவாமியறையினுள் மகனுடன் நுழைந்தார். மகனே! இதோ பார் இவரைப்போல் நீ தேரோட்டியாகிவிடு என்றார். தாயாரின் சுட்டுவிரல் நோக்கி நின்ற இடத்தில் அர்ஜுனனது தேர்ப்பாகனாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அமர்ந்திருக்கிறார். இந்த ஓவியத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் போல் ஆகிவிடுமாறே தாய் இயம்பினாள். அந்த மாணவன், அந்த மகன் வேறு யாருமில்லை சுவாமி விவேகானந்தர்.

இவருடைய இலக்கியங்களை வாசித்தோருக்கு ஒன்று நன்கு புலப்படும். இவருடைய பேச்சும், எழுத்தும் மனித மனங்களை கடிவாளம் போட்டு நிறுத்தவல்லது. உலக வாழ் மக்கள் பலரது மனங்களில் இவர் தேர்ப்பாகனாக இருந்து சீரிய வழியைக் காட்டியுள்ளார்; இன்றும் காட்டி வருகின்றார்.

ஆகையால் எம்மிடையே பலருக்குப் பல இலட்சியங்கள் இருக்கும். அவ்விலட்சியங்கள் பார்ப்போர் கண்களுக்குச் சிறுமைத் தன்மை கொண்டதாக இருக்கலாம். ஆனால் அதனுள் உள்ள உயரிய தன்மையை உணர்ந்து வாழ்வில் முன்னேறுங்கள். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" நினைப்பவற்றை எல்லாம் என்றும் உயர்ந்தவையாய் நினையுங்கள்.

"சிந்தனைதான் உன்னைத் தூண்டி வேலை செய்ய வைக்கிற உந்துசக்தி. எனவே உன் மனதை மிக உயர்ந்த சிந்தனைகளால் நிரப்பிவிடு"- சுவாமி விவேகானந்தர்-

-செல்வி ச. வர்ணி-

# திருவிளையாடற் புராண வசனம் (இரண்டாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## வெள்ளை யானை சாபந் தீர்த்த படலம்

துருவாச முனிவர் காசியிலே சிவாகம விதிப்படி தம்முடைய பெயரினாலே ஒரு சிவலிங்கந் தாபித்து, பூசை செய்து, தோத்திரம் பண்ணினார். பண்ணும்பொழுது, சிவபிரானுடைய திருமுடியினின்றும் ஒரு தாமரைப்பூ விழ, துருவாச முனிவர் அதைத் தம்முடைய இரண்டு கைகளையும் விரித்து ஏந்தி, கண்களிலும் சிரசிலும் மார்பிலும் ஒற்றிக்கொண்டு, சரீரம் பூரித்து, மனமகிழ்ச்சி பெருக, விடைபெற்றுக்கொண்டு, சுவர்க்கலோகத்துக்குப் போனார். போம்பொழுது, இந்திரன் அசுரர்களைக் கொன்று, தன்னகரமாகிய அமராவதிக்கு மீளுவானாகி, வெற்றிமாலை அணிந்து, தேவசேனைக் கடல் ஆரவாரிப்ப, வேதமும் பல்லாண்டும் ஒலிப்ப, எத்திக்கிலும் வாத்தியங்கள் கலிப்ப, தேவமகளிர் பாடும் மிக இனிமையாகிய கீதஞ் செவிமடுப்ப, சாமரை நிரைகள் இரட்ட, வெண்குடை நிழற்ற, வெள்ளை யானை மேற்கொண்டு பவனி வந்தான். அப்பொழுது தேவர்கள் அருகு வந்து, தங்கள் தங்கள் மனசிற்கு இயைந்த கையுறைகளைக் கொடுத்து வணங்கிச் சென்றார்கள். துருவாச முனிவர் ஆசிகூறி, தம்முடைய கையிலிருந்த தாமரைப் பூவை நீட்டினார். விவேகமில்லாதவனாகிய இந்திரன் செல்வச் செருக்கினாலே அதனை ஒரு கை நீட்டி வாங்கி வெள்ளை யானையின் மேல் வைத்தான். வெள்ளையானை தன்மேல் வைக்கப்பட்ட தாமரைப்பூவைக் கீழே தள்ளி காலினாலே மிதித்துச் சிந்தியது.

துருவாச முனிவர் அதுகண்டு, அக்கினி சிந்தும்படி பார்த்து, தேவர்களெல்லாம் பயந்தோடும் வண்ணம் பெருங்கோபங்கொண்டு நின்று, "விசுவாதிகரும் விசுவசேவியருமாகிய சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை மறவாத மெய்யன்பர்கள் அருவருத்துத் தள்ளிவிட்ட புல்லிய செல்வத்தினாலாய தருக்கையுடைய இந்திரா! என்ன காரியஞ் செய்தாய்? தேவர்களுடைய கையுறைகளையே நன்கு மதித்தாய்! சர்வலோக நாயகராகிய எமது சிவபிரானுடைய திருமுடியின்மேலே சாத்தப்பட்ட தாமரைப்பூவை வழிபடாது வாங்கி, யானை மிதித்துச் சிந்தும்படி அதன்மேல் வைத்தாயே! மூடா! விட்டுணுவினுடைய இறுமாப்பும் பிரமனுடைய இறுமாப்பும் உன்னுடைய இறுமாப்பும் பரமபதியாகிய சிவபிரானைப் பூசித்த பேறு என்பது சிறிதும் நினைந்திலையே, பேதாய்! இச் சிவத் துரோகத்தினாலே, பாவீ! உன்னுடைய சிரசு பாண்டியனொருவனுடைய வளையினாலேயே சிதறக் கடவது; இந்த வெள்ளை யானை காட்டானையாகக் கடவது" என்று சபித்தார். உடனே தேவர்கள் நடுநடுங்கித் துருவாச முனிவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து, அஞ்சலி செய்து, ஆடையொதுக்கி, தலைபணிந்து, வாய் புதைத்து நின்று, "ஐம்பொறிகளையும் வென்ற சுவாமீ! அடியேங்களுடைய அரசனும் வெள்ளை யானையும் பெருங் கொடும் பாவஞ் செய்தமையால் சபித்தீர். இந்தச் சாபத்தை இப்போதே தீர்த்தருளும்" என்று இரந்தார்கள். துருவாச முனிவர் திருவுளமிரங்கி "சிவநிர்மாலிய நிந்தனை பரிகாரத்தினாலே நீங்காது. இந்திரனுக்குத் தலையளவாக வந்தது முடியளவாகப் போகக் கடவது.

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக்கூடத் திறக்கும்.

வெள்ளை யானை காட்டானையாகி, நூறு வருடஞ் சென்றபின் முன்போலாகக் கடவது" என்று பிறிது சாபஞ் சொன்னார். இந்திரன் மகுட பங்கம் அடைந்த சரித்திரம் பின்னே சொல்வோம். அது நிற்க.

வெள்ளை யானை சுவர்க்கத்தை விட்டு, அறிவிழந்து காட்டு யானையாகி, காட்டு யானைகளோடு சேர்ந்து எங்குந் திரிந்து, நூறு வருடமுஞ் செல்ல, கடம்ப வனத்திலே புகுந்து, பொற்றாமரை வாவியைக் கண்டது. அப்பொழுது முன்னையறிவு தோன்ற, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்தது. உடனே காட்டுயானை வடிவம் நீங்கிப் பழைய வடிவந்தோன்றியது. அப் பொழுது சிவபிரானுடைய திருவருளினாலே சொக்கலிங்க மூர்த்தி எதிர்தோன்றக் கண்டு கும்பிட்டு, புழைக்கையால் மொண்ட தீர்த்தத் தினாலே சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்து, திருப்பள்ளித் தாமஞ் சாத்திப் பூசை செய்தது. உடனே சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டு, "நீ இங்கு வந்த காரியம் யாது? உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று வினவியருள, வெள்ளை யானை வணங்கி நின்று, முன்னே தனக்கு நேரிட்ட சாபத்தையும் அதனாலே தான் வந்த முறை மையையுஞ் சொல்லி, "தமியேன் பிரம விட்டுணுக்களாலும் அடையப் பெறாத உம்மை அடையப்பெற்றேன். இனி அடியே னுக்கு ஒரு குறை உண்டாமோ? எம்பெரு மானே! உம்முடைய திருவடிகளைப் பிரி யாது, இவ்வெட்டு யானைகளுடனே ஒன்ப தாக அடியேனும் உமக்கெதிரே இவ்விமானத் தைத் தாங்க என் மனம் விரும்புகின்றது" என்று விண்ணப்பஞ் செய்தது. கருணாகர ராகிய சோமசுந்தரக் கடவுள் யானையின் மேலே திருக்கடைக்கண் சாத்தி, "தேவேந் திரன் நம்மிடத்து மெய்யன்புடையவன்; ஆதலால் நீ அவனைத் தாங்குதல் நம்மைத் தாங்குதல் போன்று நமக்குப் பெருமகிழ்ச்சி பயக்கும்" என்று சொல்லி விடைகொடுத்து அருளினார்.

வெள்ளை யானை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு சொக்கலிங்க மூர்த்திக்கு மேற்குத் திசையிலே போய், அங்கே தன் பெயரினாலே ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதன் கரையிலே சிவலிங்க மூர்த்தியையும் விநாயகரையும் பிரதிட்டைபண்ணி, பூசை செய்துகொண்டிருந்தது. இந்திரன் அது கேட்டு, வெள்ளை யானையைக் கொண்டு வர ஒற்றரை விடுத்தான். வெள்ளை யானை தன்னை வந்தழைத்த ஒற்றரை முன்போக விடுத்து, சொக்கலிங்க மூர்த்திக்குக் கிழக் குத் திக்கிலே போய் அங்கே ஐராவதபுரம் எனத் தன்பெயரால் ஒரு நகரம் உண்டாக்கி, இந்திரேச்சுரர் எனத் தன்னிறைவன் பெயரால் ஒரு சிவலிங்கந் தாபித்து, பூசை செய்து கொண்டிருந்தது. இந்திரன், "நம்முடைய யானை இன்னும் வந்தில"தென்று பின்னரும் ஒற்றரை விடுப்ப, வெள்ளை யானை சுவர்க் கத்தை அடைந்து, இந்திரனை வணங்கி, தனக்கு நிகழ்ந்தவையனைத்தையும் விண் ணப்பஞ் செய்து இனிது வாழ்ந்திருந்தது.

மேற்கு திக்கிலுள்ள கசபுட்கரிணி யிலே ஸ்நானஞ் செய்து ஐராவத விநாயக ரையும் ஐராவதேச்சுரரையும் மெய்யன்போடு வணங்கினவர் சாபத் தொடர்ச்சியினின்றும் பாவத் தொடர்ச்சியினின்றும் நீங்குவர். ஐரா வதஞ் சென்ற நெறியே போம், வைகை நதியிலே ஸ்நானஞ் செய்து, தென் கரையில் எழுந்தருளியிருக்கும் இந்திரேச்சுரரை வணங் கினவர் இம்மையிலே அறம் முதலிய மூன் றையும் அடைந்து, மறுமையிலே பதினான்கு தேவேந்திர பட்டம் வரையும் சுவர்க்கத்திலே பல போகங்களை அனுபவித்து, பின்பு நிராசை உதிக்க, முத்தியை அடைவர்.

(தொடரும்...

*சான்றோர்க்கு அளிக்கும் கௌரவம் கடவுளுக்குச் செய்யும் மரியாதையாகும்.*

# தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவில் வரலாறு

– தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவில் புணருத்தாரன தொண்டர் சபை –

மனிதப் பண்பும் தெய்வ பக்தியும் பொருந்திய மக்கள் வாழும் கிராமம் தையிட்டி என்று அழைக்கப்படுகின்றது. இவ்வூர் மிகவும் உயர்ந்த திடல்களான அமைப்புக் களைக் கொண்ட நிலங்களும், மிகவும் ஆழமான கிணறுகளும் உள்ள ஊர் ஆகும். இங்கே பல தெய்வ ஸ்தலங்கள் காணப்படு கின்றன. அதனால் தெய்வ பக்தியுடைய மக்கள் மிகவும் சிறப்பான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தனர். இக் கிராமத்திற்கு "தெய்வதிட்டி" என்று பெயர் இருந்ததாகவும் இக் காரணப் பெயர் திரிபு பெற்று தையிட்டி என்ற பெயர் வந்ததாக அறிஞர் கூறுகின் றனர். இதைவிட சில ஆய்வாளர்கள் தமது ஆய்விலே இந்த அழகான கிராமத்திலே மக்கள் எல்லோரும் நல்ல நிறைவான வாழ்க்கை வாழ்ந்தனர் என்றும், ஒவ்வொரு வீடுகளிலும் நிரை நிரையாக நிறையப் பசுக் கள் வளர்க்கப்பட்டு பால், தயிர்களை எல்லோருக்கும் பகிர்ந்து ஈட்டியதால் இந்த ஊரை தயிர்யீட்டிய ஊர் தையிர்யீட்டி என்று அழைத்தனர் என்றும், இப்பெயர் மருவி தையிட்டி என்றாகியதாகவும் கூறப்படுகின்றது. இவ்வூரைத் தெய்வத் தன்மையுடன் தொடர்பு படுத்திய மக்களின் வாழ்க்கை முறையில் ஒற்றுமை நிலவியது. எனவேதான் இக் கிராமத்திற்கு அருள்பாலிக்கும் வடிவில் ஓம் என்னும் பிரணவ ஒலியைக் கொண்ட பிர ணவ வடிவிலே பிள்ளையார் தோன்றினார். இந்த வகையிலே தையிட்டி மக்களுக்குக் குலதெய்வமாக வினைகள் தீர்ப்பாராக, விக்கினேஸ்வரராக, முதல் வணக்கத்திற்கு உரியவரான விநாயகப் பெருமானுக்கு ஆல யம் அமைத்து, ஒழுங்கான பூசைகள் நித் திய நைமித்தியப் பூசைகள் கிரியைகள் செய்து போற்றிப் பேணி வழிபட்டு வந்தனர். இந்த ஆலயம் அமைந்த இடம் கணேசவிற் கோட்டம் என அழைக்கப்பட்டமையால் இந்த ஆலயத்தின் மூலமூர்த்திக்கு "கணையவிற் பிள்ளையார்" கோவில் என்றும் அழைக்கப் படலாயிற்று.

வரதபண்டிதர் அவர்கள் இக் கோயில் மீது திருவூஞ்சல் பாடியுள்ளார். இவர் இயற்றிய கிள்ளைவிடுதூது என்னும் நாலிலே,

"தம்முடன் செல்வமிகுந் தையிட்டியில் வூரிற் எண்ணரிய
சன்மமெடுத்த சனங்களுக்கும் பென்னினுடன்
துய்ய மும்பால் ஆறுவினை சோறு தவியாங்கவர்க்கு
வெய்யபிணி நோய் விலக்கியே ஐயமறக்
கோட்டமதில் வரம் நல்குஞ் கிருபை சமுத்திரமாங்
கோட்ட மதில் வாழும் குல தெய்வம்"

தையிட்டி கிராமத்தில் பல சைவக் கோயில்கள் இருந்தாலும் இவைகளில் மிக வும் பழமை வாய்ந்த வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த ஆலயமாக கணையவிற்

*தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகளே தேவையில்லை.*

பிள்ளையார் ஆலயம் திகழ்கின்றது. இக் கோவில் ஏறக்குறைய 550 ஆண்டுகளுக்கு மேலாக அருள் சுரக்கும் ஆலயமாக உயர் நிலையில் பேணிப் போற்றி வழிபாடாற்றி வரும் கோயிலாக இருந்து வருகிறது. இக் கோயிலில் ஆவணி மாதத்தில் கொடியேற றத் திருவிழா ஆரம்பமாகி 10ஆவது தின மாகிய தீர்த்த உற்சவம் ஆவணிப் பூரணை அன்று இடம்பெறும்.

இங்கே பன்னிரண்டு மாதங்களில் வரும் சதுர்த்தி, சஷ்டி, சிவராத்திரி, திருக் கார்த்திகை, சூரன்போர், திருவெம்பாவை ஆகிய முக்கிய தினங்களில் விசேட பூசை கள் நடைபெறும் ஆலயமாகும்.

தையிட்டி கணையவிற்பதி ஆலயத் தின் மூலமூர்த்தி விக்கிரகம் சோழ அர சனுடைய காலத்தில் இந்தியாவில் திரிசங் காட் என்னும் இடத்தில் இருந்து வாராசிங்க வளவரால் கொண்டுவரப்பட்டது. அவர் வழித்தோன்றலில் ஜெயதுங்க முதலியார் இராசகாரிய எதிர் வன்னிய சேகர முதலியார் வழித்தோன்றல் (பெரியதம்பி) கதிர்பிள்ளை உடையார், ஆறுமுக உடையார் வழித்தோன் றல் தம்பையா சண்முகநாதன் வழித்தோன் றல் சண்முகநாதன் சயந்தன் இவர்களால் வழிமுறையாக ஆண் சந்ததி வழிப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாண வைபவமாலை யிலும் கச்சேரி கோவில் பதிவுகளிலும் பதியப்பட்டிருக்கிறது. கிள்ளைவிடுதூது என்னும் நூலிலே இவ் ஆலயத்தின் மூர்த்தி பற்றி பல பாடல்கள் பாடப்பட்டுள்ளது. இக் கோயிலும் திருக்குளமும், திருமடமும், பரம் பரை பரம்பரையாக ஆண் சந்ததியினருக்கே உறுதி சாதனம் செய்யப்பட்டுள்ளது. இக் கோயில் 550 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 200 ஆண்டுகளுக்கு மேலாக மகோற்சவம் நடைபெற்றுவரும் ஓர் ஆலயமாகும். இந்த ஆலயம் ஆயிரத்துத் தொளாயிரத்து தொண் நூறுகளில் (1990) நாட்டில் ஏற்பட்ட அசா தாரண சூழ்நிலை காரணமாக பெரியளவில் கோவிலில் அழிவுகளைச் சந்தித்துள்ளது. நித்திய, நைமித்திய, காமிக பூசைகள் எதுவுமின்றி காணப்பட்டது. 11.03.2000ஆம் ஆண்டு சண்முகநாதன் சயந்தன் தலைமை யில் கணையவிற் பிள்ளையார் புனருத்தாரண தொண்டர் சபை மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் இச்சபையினர் பல்வேறு வித மான ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டமையால் இக்கோவில் 01.11.2016இல் மக்களின் தரிசனத்திற்கு கிடைக்கப்பெற்றது. அன்று போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கள் எவ்வாறு இந்து ஆலயங்களை அழித்து உடைத்து சின்னாபின்னமாக்கினார்களோ அதேபோல் கணையவிற் பிள்ளையார் ஆல யத்தையும் அழித்து விக்கிரகங்கள் அனைத் தையும் சூறையாடி, கணக்கிட முடியாத பல கோடி சொத்துக்களை அழித்து, கோவிலின் வடக்கு, கிழக்கு வீதிகளில் உள்ள மண்ணை யும் சுமார் 06 அடி ஆழத்திற்கு அகழ்ந்து எடுத்ததுடன் இன்னமும் பல்வேறு அழிவு களையும் அந்த அசாதாரண சூழ்நிலை ஏற்படுத்திவிட்டது. தற்போது ஊர்மக்களின் பூரண ஆதரவில் புனருத்தாரண செயற்பாடு கள் முழு அளவில் இடம்பெற்று வருகின்ற தோடு, தற்பொழுது வீதி புனரமைப்பு செயற் பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இக்கோயிலின் மூலமூர்த்தியாகிய பிள்ளையாரை சந்தனக்கட்டையில் செதுக்கி 02.02.2017முதல் நித்திய பூசைகள் நடை பெற்று வருகின்றது. இக்கோவிலின் புனருத் தாரண தொண்டர் சபையினரால் வருகின்ற பங்குனி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த நாளில் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

*எவரால் மனித இனத்திற்கு நன்மை ஏற்படுகிறதோ அவரே மனிதரில் சிறந்தவர்.*

# வழித்துணை 28

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 இறைவனை ஏற்கவைக்கக் கடும்முயற்சி வேண்டும்
இல்லையென்று மறுத்துரைக்க ஓர்நொடியே போதும்
ஏற்றாலும் மறுத்தாலும் மானிடராய் வாழ்ந்திடலாம்
மனதார ஏற்றால்தான் மறுமையில் நாம் மகிழ்ந்திடலாம்.

02 கூறுகின்ற வார்த்தைகளில் உண்மையேதும் இல்லையெனில்
ஊறுபல விளையுமென்று உணர்ந்திடுதல் வேண்டும்
மாறுபாடாய் நாம்பேசும் வார்த்தைகளால் மானிடத்தில்
வேறுபாடே தோன்றிப்பின் வேற்றுமைகள் வளரும்.

03 சாத்வீகம் இருந்தால்தான் ஆத்மீகம் இருக்கும்
ஆத்மீகம் இருந்தாலே இறைபக்தி பிறக்கும்
இறைபக்தி பிறந்தாலே இம்மையிலும் மறுமையிலும்
குறைவில்லாப் பேரின்பப் பெருவாழ்வு மலரும்.

04 பிறர்வாழத் தன்னலனை அர்ப்பணம் செய்பவர்கள்
அறவழியில் வாழ்பவர்கள் என்றிறைவன் அறிந்து
திறமான பெருவாழ்வைப் பிறப்பிதனில் தருவதுடன்
பிறவாத பேரின்பப் பெருவாழ்வும்பின் அருள்வான்.

05 பிறந்தோம் வளர்ந்தோம் இறப்போமென்றெண்ணி
எப்படியும் வாழலாம் என்றெண்ணி வாழ்ந்திடாமல்
வையத்தில் வாழுகின்ற நெறியோடு வாழ்ந்திட்டால்
இறப்பிற்கு முன்னரே சிறப்பெல்லாம் அடைந்திடலாம்.

06 நாணயம் என்பது மற்றவற்கு மட்டுமன்றி
ஏணையில் இருந்தே எம்மிடமும் வளரவேண்டும்
தூணையோ துரும்பையோ பொறுத்ததில்லை நாணயம்
சாணையும் முழமாக மதித்தலே நாணயமாம்.

07 மனச்சாட்சி என்பது மற்றவர்கள் தருவதன்று
தனக்காகத் தானே தன்னுள்ளே வளர்ப்பதாகும்
தினம்தினம் நடப்பவற்றை மனத்துள்ளே மதிப்பிட்டு
கனம்பண்ணி நடத்தலே மனச்சாட்சி என்பதாகும்.

08 தனக்குண்டு சுதந்திரம் என்றுஓர் பொருள்சொல்லி
பிறர்க்கு இடைஞ்சலாகவே வாழ்கின்ற பேர்களை
எனக்கு இடைஞ்சல் என்றிறைவன் ஏற்காமல் விடுமிடத்து
தனக்கு இடைஞ்சல் தானேதான் என்றுணர்ந்து தவிதவிப்பர்.

09 நல்லோரை ஏற்கார்கள் நல்லதையும் கேட்கார்கள்
கல்லையும்நான் கடவுளென்று வணங்குவேனோ என்பார்கள்
இல்லாரை உதைப்பார்கள் இருப்போரை மதிப்பார்கள்
பொல்லா இவையகலப் பிறப்பதுவே மானிடமாம்.

10 உறக்கத்தைக் கெடுத்தலும் உண்பதனைக் குழப்புதலும்
கலக்கத்தைக் கொடுக்கின்ற கருத்தினைக் கூறுதலும்
விலக்கப்பட வேண்டிய பலவற்றில் சிலவாகும்
சிலஇவற்றை விலக்கிடுவீர் பலரும்மைப் போற்றிடுவர்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் யா/ நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை மாணவனுக்கும், மாணவிக்குமான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டபோது...





ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோர்...





சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் யா/ நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை மாணவிக்கு துவிச்சக்கரவண்டியும், சற்குணராசா பிரியதர்சினி என்பவருக்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டபோது...



# நல்லவர்க்கெல்லாம்...

– செல்வி சோபிதா முகுந்தன் அவர்கள் –

தவறு செய்யும் ஒவ்வொருவரையும் நாம் பார்த்துக் கேட்கும் கேள்வி "உனக்கு மனச்சாட்சி இல்லையா" என்பதே! மனச்சாட்சி என்பது நன்மை தீமைகளை உய்த்துணரும் திறன் என்றால் பொருத்தமானதே.

சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயம் என்பவற்றிற்கு அப்பால் மேலோங்கி நிற்பது மனச்சாட்சி. இயல்பாக ஒருவன் தீச்செயல் புரிவது மனச்சாட்சி இல்லாமலும் நற்செயல் புரிவது மனச்சாட்சிப்படியும் நடப்பதாகக் கருதப்படுகிறது. மனச்சாட்சி என்பதற்கான வரைவிலக்கணம் மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது என்பதே உண்மை.

கொலை, களவு, கற்பழிப்பு, பயங்கரவாதம் என இன்று உலகில் பெருகிவரும் அநியாயங்கள் எமது மனங்களில் ஏற்படுத்தும் அதிர்வலைகள் அவற்றைப் புரிபவர்கள் மீது வெறுப்பையும் அச்செயல்கள்மீதான விருப்பமின்மையையும் ஏற்படுத்த பிரதானமாக இருப்பது மனச்சாட்சி. மனம் படைத்ததால் நாங்கள் மனச்சாட்சிப்படி நடப்பதே நல்ல பண்பு. ஏனெனில் சட்டமும் ஒழுங்கும் பிற சாட்சிகளைத் தேடியே தண்டனை கொடுக்கின்றன. ஆனால் மனச்சாட்சி எமக்குள் இருந்து எம்மை வழிநடாத்தும் ஒரு ஆசான்.

மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களைச் செய்வதற்கு எமது உள்மனம் ஒன்றுவதில்லை. இயல்பாக மனிதன் தீமைகளை எதிர்த்து நன்மையின்பால் விருப்புக் கொண்டவனாகவே காணப்படுகின்றான். உதாரணமாக நாம் இராமாயணம், மகாபாரதம் போன்ற பண்டைய இலக்கியங்களையும் அன்றுமுதல் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கும் திரைப்படங்களையும் எடுத்துப் பார்த்தால் அவற்றில் கதாநாயகர்கள் நன்மை வழி நடப்பவர்களாகவும் தீமையை எதிர்ப்பவர்களாகவும் காணப்படுவதும் அதர்மம் அழிக்கப்பட்டுத் தர்மம் நிலைநாட்டுவதாகக் கதைகள் நிறைவடைவதும் அவற்றை ஏகோபித்து மக்கள் ஏற்றுக்கொள்வதும் சான்றாகின்றது. எமது மனச்சாட்சி நன்மைவழி நின்று தீமையை எதிர்ப்பதாலேயே நாம் அதர்மத்தின் அழிவை இரசிக்கின்றோம்.

மனச்சாட்சிக்கும் தெய்வத்திற்கும் அஞ்சி வாழ்பவன் தவறுகள் செய்யமாட்டான். அவனது வாழ்வு செம்மையுற்றுத் திகழும் வாழ்வாகும். தீமைக்கு அஞ்சாத மனிதர்கள் அரிதாகவும் நன்மையின் பாற்பட்ட மனிதர்கள் உலகில் அதிகமாகவும் இருப்பதற்கு இந்தத் தத்துவமே காரணம் ஆகும்.

நன்மைகள் செய்தால் நல்லதே விளையும் என்று தெரிந்தும் ஏன் தீமையின் பால் செல்கின்றோம்? ஆசை, காமம், குரோதம், பழிவாங்கும் உணர்வு, துவேஷம், அறியாமை ஆகிய பண்புகள் எம்மிடம் உள்ள பலவீனங்கள், அமைதியான வாழ்வு வாழும் ஒருவனைக்கூட "நான்" என்ற அகங்காரமும் "எனது" என்ற மமகாரமும் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகின்றன. அவன் மன உணர்வுகளால் தீமைவழி செல்வது தவறென அறியாது தீய வழியில் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். பொறாமை கொண்டோ கோபத்தினாலே அன்றி பழிவாங்கும் நோக்கத்திலோ தனது

*சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது.*

சக மனிதனை மனச்சாட்சி இன்றிச் சொல் லால், செயலால் வருத்தமடையச் செய்யும் ஒருவன் ஆற அமர அமர்ந்திருந்து சிந்தித் தால் தான் செய்த தவறை உணர்வான். உண்மையில் எல்லா மதங்களும் "நீ செய்த வினையின் பயனை நீ அடைந்தே தீரவேண் டும்" என்றே போதிக்கின்றன. அந்தவகை யில் நாம் செய்த வினை எமக்கு மீண்டும் கிடைக்கும் என்பதை நன்குணர்ந்தால் நாம் பிறர்க்குத் தீங்கிழைக்க விரும்புவோமா? இல்லை.

நீரிற் குமிழிபோல நிலையற்ற வாழ் வில் நல்ல காரியங்களால் நாள்களை நிறைத்து நல்லவர்களாய் வாழ்ந்து நன்மை களைச் செய்து நல்வாழ்வு வாழ்வதுதானே மறுமைக்கும் இம்மைக்கும் சிறப்புச் சேர்க் கும். நாம் நல்லன செய்தால் எம்மைச்சூழ நல்லவற்றைக் காணமுடியும் என்று கண்ட பின் தீயவழி நமக்கெதற்கு?

ஒருவன் நல்லவனா கெட்டவனா என் பது அவன் மனமறிந்த உண்மை; அடுத்து தெய்வமறியும் உண்மை. வேறு யாருக்கும் மறைத்தாலும் மனச்சாட்சியும் தெய்வமும் அவனை வருத்துவதில் இருந்து அவன் தப்பமுடியாது. நல்லவர்க்கெல்லாம் சாட்சி கள் இரண்டு! ஒன்று மனச்சாட்சி; ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா!

## தேசத்தில் நூற்றாண்டு காணும் சுடரே வாழி!

அகிலமெல்லாம் போற்றிடும் சுடரே வாழி
ஆயிரம் ஆயிரம் பணிகளை ஆற்றிடும் சுடரே வாழி
வியந்திடும் ஆன்மீகம் பரப்பிடும் சுடரே வாழி
விடியலைத் தேடிடும் சுடரே வாழி!

சந்நிதியான் அருளாலே மலரும் சுடரே வாழி
சைவமும் தமிழும் காக்க எழுந்த சுடரே வாழி
எண்ணியதைப் படைக்கின்ற சுடரே வாழி
ஈழத்தின் இணையற்ற ஞானச்சுடரே வாழி!

எழுச்சியின் திறவுகோலான சுடரே வாழி
எண்ணத்தின் நாற்றங்காலான சுடரே வாழி
விழிப்புற்ற சைவத்தாயகத்தின் சுடரே வாழி
விடிவெள்ளித் தூதாய் வரும் சுடரே வாழி!

மானுடத்தை மேன்மைப்படுத்த எழுந்த சுடரே வாழி
மண்ணுலகெல்லாம் பரவிடும் சுடரே வாழி
தேனினுமினிய சேதிகளைத் தாங்கும் சுடரே வாழி
தேசத்தில் நூற்றாண்டுகாணும் சுடரே வாழி!

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

*மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின்மூலமாகத்தான் தேடிக்கொள்கிறான்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...

## உற்சவகாலம்

| | | |
|---|---|---|
| திரு புவனேந்தி மூலம் நெல்லியடி | | |
| தயாபரன் | நெல்லியடி | 2மூடை அரிசி |
| ஐ. சிவநாதன் | நெல்லியடி | 1மூடை அரிசி |
| கணேசன் ஹாட்வெயர் | நெல்லியடி | 10000. 00 |
| S.T. பரமேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| ராஜன் | யாழ்ப்பாணம் | 30kg உருளைக்கிழங்கு, 1மூடை பருப்பு, 3மூடை அரிசி |
| ஸ்ரீகுமரன் ஹாட்வெயர் | | 2மூடை அரிசி |
| திரு வரதீஸ்வரன் | | 2மூடை அரிசி |
| T. துவாரகேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| ச. லலீசன் | அச்சுவேலி | 1புட்டி பருப்பு, தேங்காய், 3மூடை அரிசி |
| உமாமூலம் க. ஆனந்தராசா | கரவெட்டி | 25000. 00 |
| த. சிவகுருநாதன் (துவாரகா வெதுப்பகம்) | கரவெட்டி | 1மூடை செத்தல், 25kg அரிசி |
| ஆறுமுகம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 30000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| மு. செல்வானந்தம் | உடுப்பிட்டி | 25000. 00 |
| நேசரத்தினம் ஜெயக்குமார் குடும்பம் | U.K | 30000. 00 |
| த. நேசமலர் குடும்பம் | சுவிஸ் | மரக்கறி, 1மூடை அரிசி |
| நடராசா சிவதாசன் | நீர்வேலி | 50000. 00 |
| சி. சிவமூர்த்தி (ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாடம்) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ம. சியாமளன் | அச்சுவேலி | 20000. 00 |
| வே. கிருஷ்ணசாமி | காரைநகர் | 5000. 00 |
| சிவசம்பு அபிலாஸ் | கனடா | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| ம. குகநந்தினி | லண்டன் | 25000. 00 |
| ராமு தர்மதுரை (முருகா ஸ்ரோர்ஸ்) | குப்பிளான் | சோயா, மரக்கறி, 1மூடை அரிசி |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ச. சாருமதி முருகன் கோவிலடி | புலோலி | 10000. 00 |
| த. உருத்திரா | பருத்தித்துறை | 15000. 00 |
| கஜேந்திரன் ஜனனி | யாழ்ப்பாணம் | 5000. 00 |

*மன்னிப்பது என்பது வலிமையுடையோரின் குணம்.*

| | | |
|---|---|---|
| ம. ராசநாயகம் (கவிதா பொடி பில்லேர்ஸ்) | கரவெட்டி | 2மூடை அரிசி |
| ஜெகா மோட்டோர்ஸ் | வல்வெட்டி | 3புட்டி அரிசி |
| சபா ரேடேர்ஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| ஸ்ரீ கௌரி ஸ்ரோர்ஸ் | கொடிகாமம் | 8000. 00 |
| சிவதொண்டன் நிலையம் | யாழ்ப்பாணம் | 50000 பெருமதியான பொருட்கள் |
| ஆனந்தி சற்குணநாதன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| ஆனந்தன் தேவி | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| சபாபதிப்பிள்ளை குடும்பம் | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| சந்திரா தியாகலிங்கம் | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| சண்முகவரதன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| அ. சண்முகராஜா | லண்டன் | 35000. 00 |
| திருமதி அ. பவளக்கண்டு | கோப்பாய் | 1மூடை பருப்பு, 2மூடை அரிசி, 20000. 00 |
| ஜெகநாதன் ஜனனி | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| சி. கஜன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 10 புட்டி பருப்பு |
| அனிகா சண்முகபாலா | தொண்டைமானாறு | 15000. 00 |
| அ. பரமநாதன் | அளவெட்டி | 60000. 00 |
| நடேசன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| செல்லமுத்தூஸ் புடவையகம் | நெல்லியடி | 10000. 00 |
| கண்ணாடிக் களஞ்சியம் | நெல்லியடி | உருளைக்கிழங்கு, 1புட்டி பருப்பு, 3மூடை அரிசி |
| வைஸ்ணவி நகைமாடம் | நெல்லியடி | 1மூடை அரிசி 2000. 00 |
| சு. விபுலானந்தன் (ஜெகா மோட்டோர்ஸ்) | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| தி. வியாகேஸ்வரன் | அச்சுவேலி | மரக்கறி, 3மூடை அரிசி |
| மாகோ களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி | 75 போர்வைகள் (முதியோர்விழா அன்பளிப்பு) 10000. 00 |
| க. சோமசேகரம் (மகாராணி மூலம்) | | |
| ச. சிவஞானம் | காரைநகர் | 15மூடை அரிசி |
| E.S.P. நாகரட்ணம் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| வியாவில் ஐயனார் தேவஸ்தானம் | காரைநகர் | 3மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 50L தயிர், 3மூடை அரிசி |
| சி. தங்கவடிவேலு (சிற்றி வெதுப்பகம்) | பருத்தித்துறை | 3 மூடை மா |
| மு. சரவணபவான் | வடலியடைப்பு | 1000. 00 |
| முருகேசு நல்லபிள்ளை | ஏழாலை | 5000. 00 |
| க. முரளிதரன் (H.N.B) | பருத்தித்துறை | 5000. 00 |
| ச. சஷ்டிப்பிரியா | கொழும்பு | 10000. 00 |

(தொடரும்...

# அரிய பிறவி ஆறறிவுடை மாந்தருக்கு எச்சரிக்கை

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

இப்பிறப்பில் பஞ்சமா பாதகங்களை நீக்கி இறைபணி செய்யாதவர்கள் ஆறாம் அறிவை இழக்கின்றனர். இறைவன் முன் வினைப்படி பல்லுயிர்களைப் பார்தோறும் படைக்கின்றார். முற்பிறப்பில் புண்ணியம் செய்த உயிரினங்களை மனிதர்களாய்ப் பூமியில் அவதரிக்க வைக்கின்றார். பூமியில் அரிய பிறவியைப் பெற்ற மானுடர்கள் இறைபணி செய்து, தன்னிடம் திரும்பவும் வருவார்கள் என்று எண்ணுகின்றார். ஆனால் பூமியில் உதித்த மனிதர்கள் சிற்றின்பங்களில் நாட்டங்கொண்டு, இறைவனை மறந்து, நற்பணிகளைக் கைவிட்டு, பொருள் தேடுவதிலும், காணி, பூமி வாங்குவதிலும் அலைந்து திரிகின்றனர். பொன்னையும் பொருளையும் தருபவன் இறைவன்தான் என்ற உண்மையை ஆறறிவு படைத்த மனிதனால் உணரமுடியவில்லை. இதனால் பஞ்சமா பாதகங்கள் நீக்கப்படாமையினாலும், இறைபணி செய்யாமையினாலும் ஆறாம் அறிவு பறிபோகப் போகின்ற நிலையை எண்ணி இறைவன் கண்ணீர் வடிக்கின்றான்.

இறைவன் பல்வகைப்பட்ட உயிரினங்களை பூமியில் படைத்து, அவைகள் வாழும் வழிகளையும் காட்டி, அவ் உயிரினங்களைக் காக்க எங்கும் வியாபித்திருக்கின்றார். ஐந்து அறிவுடைய உயிரினங்கள் வாழ நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றையும் படைத்துள்ளார். இறைவன் தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்கு தாயாக விளங்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன. இறைவனுக்கு அனுதினமும் மாலைகட்டி வழிபட்ட செட்டிச்சி அம்மையார் மகளுக்குத் தாயாக இருந்து, பிரசவ கடமைகளைச் செய்தார் என்று கூறப்பட்டதை அடியார்கள் நன்கு அறிவார்கள். எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன், எல்லாவற்றையும் அறிவான், உயிரினங்களுக்கு இடர்வரும்போது கூவி அழைத்தால் ஓடி வந்து அருள் செய்வானென்பதுவும் திண்ணம்.

மானுடப்பிறவி எடுத்து இறை பணி செய்தவர்கள் நாயன்மார்களாகவும், முனிவர்களாகவும், சித்தர்களாகவும், சிவன் அடியார்களாகவும் விளங்குகின்றனர். கல்வி கற்ற மனிதர்கள் விஞ்ஞானிகளாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், சட்ட வல்லுனர்களாகவும் விளங்குகின்றனர். மனிதன் விஞ்ஞானத்தின்மூலம் நொடிப் பொழுதில் தொலைவிலுள்ளவர்களுடன் கதைக்கவும், கதைப்பவர்களைத் தொலைக் கருவிமூலம் பார்க்கவும், கோள்களைக் கண்டு அறியவும், அதிவிரைவு விமானங்களில் பறந்து குறுகிய நேரத்தில் வெகு தொலை தூரத்தை அடையவும் விஞ்ஞானம் வளர்ந்து கொண்டு போகின்றது. உலகத்தையே அழிக்கக்கூடிய அணுகுண்டுகளையும் மனிதன்

கண்டு பிடித்துள்ளான். பூமியில் வாழ்கின்ற மனிதன் ஆறறிவால் நன்மை, தீமைகளை நன்கு அறிவான். பூமியில் மனிதன் மனித னாக வாழ நல்ல கருமங்களைச் செய்ய, மனிதப் பண்புகளை நன்கு பேண அனை வருக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும். நாட்டுக்கு தீமை விளையும் செயற்பாடுகளை களைய வேண்டும். இச் செயற்பாடுகளெல் லாம் வீட்டில் இருந்தே ஆரம்பமாகி பாட சாலையில் நற்செயற்பாடுகளை ஆசிரியர் கள் மாணவர்களுக்கு ஏற்பட வழிகாட்ட வேண்டும். நூல் நிலையங்களைக் கிராமந் தோறும் அமைத்து மாணவர் பாடசாலைக் கடமைகள் முடிந்து பிற்பகலில் நூல் நிலை யம் சென்று புத்தகங்களை வாசிக்கலாம். மாணவர்கள் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் நல்ல அறிவைப்பெற்று, நற்பழக்கங் களைப் பெற்றுக்கொள்ளலாம். வருங்கால குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக அமைத் துக்கொள்ளலாம். குடும்ப வாழ்க்கையில் ஒழுக்கம் சிறந்த இடத்தை வகிப்பதால் வாழ்க்கை இன்பமாக அமைந்துவிடும். புறச் சூழலுக்கேற்ற தன்மை மாற்றிக்கொள்ளவும், புறச்சூழலில் தீமைகளை நீக்கிக் கொள்ள வும் அவனால் முடியும். மனித குலத்தின் ஆறறிவு படைத்த உயிரினங்களாக, மகாத்மா காந்தி, ஏபிரகாம் லிங்கன், அன்னை திரேசா விளங்கியதை உலகம் அறியும்.

பண்டைய தமிழர்கள் இறை வழி பாட்டுக்குப் பல வானளாவிய கோபுரங்களை உடைய கோவில்களை அமைத்தார்கள். அந்தக் கோவில்கள் சைவத்தின் பெருமை யையும் உண்மைகளையும் உலகுக்கு இன்றும் அறிவித்துக்கொண்டிருக்கின்றன. இந்தியாவில் திருப்பதி, மீனாட்சி அம்மன் ஆலயம், தில்லைச் சிவன் ஆலயம் அருள் சுரந்து புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. எல்லாச் சமயத்தவர்களும் இன்று திருப்பதி சென்று வழிபடுவதை நாம் காண்கின்றோம். மறுபிறப்பிலும் மானுடப்பிறவி பறிபோகாது செல்ல ஆலயங்கள் பேருதவி செய்கின்றன. வேளாங்கண்ணி, மடுகோவில், கதிர்காமம் போன்ற தலங்களையும் எல்லாச் சமயத்த வரும் வழிபட்டு வருவதை நாம் காண்கின் றோம். ஓர் ஊர், ஒருவனே கடவுள் என்ற நிலைப்பாடு மனிதருக்கு ஏற்பட்டால் சமயச் சண்டைகள் ஏற்படா. இந்த உண்மை உண ராத சிலரால் சமயச் சண்டைகள் ஏற்பட வழிபிறக்கின்றன. நல்ல பண்புள்ள மக்களால், சாதிச் சண்டைகளோ சமயச் சண்டைகளோ ஏற்படா. எனவே சமயம்மூலம் ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

அரிய பிறவியும் ஆறறிவும் படைத்த மனிதன் பிறவி தொடர்ந்து செல்லும். ஆன்மா அழிவதில்லை. ஆனால் உடம்பு அழிகின்ற உண்மையை அறிந்திருக்க வேண்டும். எழு வகைப் பிறப்பும், தொடர்ந்து செல்லும். மனிதன் பிறந்து, இறக்கும் வரையும் பஞ்சமா பாதகங்களை ஒழித்து சிவத்தொண்டு செய்து, இறைவனடி சேரத் தினமும் செல்வச்சந்நிதி யான் ஆலயம் சென்று வாருங்கள். ஆற்றங் கரையான் உங்கள் ஆறறிவுடைய இப்பிறவி யின் பயனைப்பெற வழிகாட்டுவான். முன் வினையையும் வேரறுப்பான். அவனுடைய அருள் ஆட்டம் தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சந்நிதியானிடம் சென்று அவனது அருள் ஆட்டத்தைக் காணுங்கள். சந்நிதியான் ஆச்சிரமம் சென்று பசி ஆறுங்கள்.

**"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க!**
**அனைவருக்கும் செல்வச்சந்நிதியான் அருள் புரிவான்.**

*வெறும் அதிஷ்டத்தை மட்டும் தேடி ஓடும்போதுதான் நாம் கால்கள் இடறி விழுகின்றோம்.*

# மூத்தோர் மதிப்பளிப்பு விழா 2019

– தொகுப்பு: வல்லையூர் அப்பாண்ணா –

சந்நிதியான் காலடியிலேயே காலத்தைக் கழித்துவரும் ஆதரவற்றவர்களுக்காக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் பணிகள் பலப்பல. மூன்றுவேளை உணவு, இரண்டுநேர தேநீர், அவர்களுக்குரிய உடுபுடவை, வேட்டி, மழைகாலத்திற்கான போர்வை, நவராத்திரி காலம் போன்ற விசேட தினங்களில் விசேட உணவு வகைகள் என அவர்களுக்கான கவனிப்புகள் விரிந்து செல்கின்றன.

இந்தவகையில் மூத்தோர் மதிப்பளிப்பு என்பதுவும் கடந்த காலங்களில் மேற்குறித்த ஆதரவற்றோருக்கான பொருள்களின் கொடுப்பனவாகவே இருந்து வந்திருக்கிறது.

2018க்கு முந்திய இரண்டு மூன்று வருடங்கள் பரு. பிரதேச சபை, கரவெட்டி பிரதேச சபை, மருதங்கேணி பிரதேச சபை ஆகியவற்றின் வேண்டுகோளை ஆச்சிரமம் ஏற்று, பிரதேச சபைகளின் மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு நாளுக்கான பொருள்களாக (வேட்டி, உடுபுடவை முதலானவை) அந்தந்த பிரதேச சபைகளின் பிரதிநிதிகளிடம் வாராந்த வெள்ளி நிகழ்வின்போது கையளிக்கப்பட்டு வந்தது.

இவற்றிற்கும் மேலாக, ஆச்சிரமத்துக்கு அயற் கிராமங்களிலுள்ள மூத்தோரை ஆச்சிரமத்திற்கு அழைத்து அவர்களுக்கு மிகச் சிறப்பானதொரு மதிப்பளிப்பு வைபவத்தை நடாத்த வேண்டுமென ஆச்சிரம சுவாமிகளின் எண்ணத்தில் கருக்கொண்ட இந்த வைபவமானது 2018இலிருந்து சந்நிதியான் ஆச்சிரம வளாகத்தில் நடந்தேறி வருகிறது.

இந்த மூத்தோர் மதிப்பளிப்பு நிகழ்வுக்கான முதியோரைத் தெரிவு செய்வதென்பது பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. ஆச்சிரமம் சார்பாகவே பதிவுகளை மேற்கொள்ள முடியுமா? இது சாத்தியமா? அல்லது கிராம அலுவலகர்கள் மூலமாகப் பட்டியல் பெற முடியுமா? இது சாத்தியமா? என சைவ கலை பண்பாட்டுப் பேரவையினருடனான சந்திப்பின் போது பலவாறாகவும் ஆலோசிக்கப்பட்டு ஒரு சாத்தியமான முடிவு பெறப்பட்டது. ஆச்சிரம சுற்றாடலில் உள்ள சனசமூக நிலையங்கள் மூலமாக மூத்தோர் பட்டியல் பெறப்பட்டு- அவர்களைக் கௌரவிப்பது என்பதே அந்த முடிவாகும். இந்த முடிவின் பிரகாரம் மூத்தோரை தெரிவு செய்யும் பொறுப்பு அந்தந்த இடத்து சனசமூக நிலையங்களின் பொறுப்பாகியது.

அந்தந்த ச.ச.நி ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து மூத்தோர் பட்டியலை தயாரிக்குமாறு போதுமான கால அவகாசத்துடன் ச.ச. நிலையங்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டின்படி கடந்த வருடம் போன்று- இவ்வருடமும் மூத்தோர் மதிப்பளிப்பு 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடந்தேறியது.

இதன்படி கலைவாணி ச.ச.நி, அண்ணா ச.ச.நி, விவேகானந்தா ச.ச.நி, கலையரசி ச.ச.நி, கலைமகள் ச.ச.நி, அக்கரை ச.ச.நி ஆகிய 06 ச.ச. நிலையங்களிலிருந்து பட்டியலிடப்பட்ட 88 முதியோர்

அன்றைய மதிப்பளிக்கும் வைபவத்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர். சில ச.ச. நிலையங்களின் பட்டியலில் பெயர்களின் எண்ணிக்கை குறைவாகவும், சில ச.ச. நிலையங்களில் அதிகமான பெயர்களை உள்ளடக்கியதாகவும் இருந்தபோதிலும் அனைத்து முதியவர்களும் முறைப்படி கௌரவம் பெற்றனர்.

நேர்த்தியாக உடையணிந்து ஆண்களும் பெண்களுமாக- பலரும் ஊன்று கோல்களுடன்- காலையிலிருந்தே ஆச்சிரம வாசலில் ஒன்று கூடினர்.

உரிய நேரம் வந்ததும் ஆச்சிரம மைய மண்டபத்தில் 2019ஆம் ஆண்டுக்கான முதியோர் மதிப்பளிக்கும் நிகழ்வு ஆரம்பம் ஆகியது. வழமைபோன்று வாராந்த நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கும் பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதன் அவர்கள் ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, "ஞானச்சுடர்" வாசகர்களுக்கு கட்டுரைகள் வாயிலாக நன்கு அறிமுகமான அச்சுவேலி- இடைக்காட்டைச் சேர்ந்த திரு பு. கதிரித்தம்பி எனும் முதியவரின் பஞ்சபுராணத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

வயதுக்கு ஏற்றபடி மெலிந்து தளர்ந்த உடலுடன் ஒலிவாங்கியருகே வந்து தளதளத்த குரலில் முதியவர் பு. கதிரித்தம்பி பாடிய பஞ்சபுராணம் அனைவருக்கும் தேனாக இனித்தது.

இளைப்பாறிய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்களின் தலைமையுரையுடன் உரை நிகழ்வுகள் ஆரம்பமாயின. ஆச்சிரம செயற்பாடுகள் அனைத்தையும் பற்றி தெளிவாக- விரிவாக எடுத்துரைத்த திரு ஆ. சிவநாதன் அவர்கள், "எந்த சமுதாயம் மூத்தோர் அறிவுரை கேட்டு வாழுகிறதோ, அந்த சமுதாயம் விரைவாக முன்னேறும்" என இளையோருக்கு எடுத்துக்கூறி தமது தலைமையுரையினை நிறைவு செய்தார்.

அடுத்து வரவேற்புரை நிகழ்த்த வந்த யாழ். வட்டுக்கோட்டை கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள், கௌரவம் பெற வந்திருந்த முதியவர்கள், பார்வையாளர்கள் என அனைவரையும் வரவேற்று வந்தமர்ந்தார்.

அடுத்து மேடையேறிய செல்வி தி. ஜென்சிகாவின் நடன நிகழ்வு அவையோர் அனைவரையும் கட்டிப்போட்டது. குறிப்பாக, வந்திருந்த முதியவர்கள் தத்தமது சொந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, செல்வி ஜென்சிகாவின் நடனங்கண்டு ஆனந்தித்தனர்.

முத்தைத்தரு பத்தித் திருநகை.... எனத் திருப்புகழ் பாடலுடன் ஆரம்பித்து, ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்று... எனத் தொடர்ந்து நாதவிந்து கலாதீப நமோ நம... என நடன நிகழ்வினை 15 நிமிடங்களில் நிறைவு செய்து, தமது உடலசைவினாலும் அற்புத அபிநயத்தினாலும் அனைவரையும் அசத்தினார்.


நடன நிகழ்வுவேளையின்போது விருந்தினர்கள்- முதியவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட சிற்றுண்டிகளும் தேநீரும் (குறிப்பாக இவ்விடத்திற்கே உரித்தான உருண்டை ஆக்கப்பட்ட உழுத்தம் பிட்டு) முதியோரின் உடலுக்குத் தெம்பாகவும், கண்முன்னே நடைபெற்று முடிந்த நடன நிகழ்வு மனதுக்கு இதமாகவும் இருந்தது.

சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த ஓய்வுபெற்ற அரச அதிபர் திரு செ. ஸ்ரீனிவாசன் அவர்களின் சிறப்புரை அடுத்துத் தொடர்ந்தது. தமது நீண்ட நாளைய அரச பணியில் கிடைத்த அனுபவங்கள் அனைத்தையும் திரட்டி அறிவுரைகளாகவும், நிறுவனங்கள்- ச.ச. நிலையங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும், முதியோரை அரவணைக்கவேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துரைத்தார் திரு செ. ஸ்ரீனிவாசன் அவர்கள்.

*குற்றவாளி சட்டத்திற்கு அஞ்சுகிறான். நல்ல மனிதன் தன் மனச்சாட்சிக்கு அஞ்சுகிறான்.*









சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில்
பருத்தித்துறை பிரதேச செயலக முதியோர் தினத்திற்கான உடுபுடவைகளும், அல்வாய் றோ.த.க.
பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப் பொருட்களும், வழங்கப்பட்டபோது...



நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையினைத் தொடர்ந்து யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி இளைப்பாறிய விரிவுரையாளர் திரு மு. கௌரிகாந்தன் அவர்கள் உரையாற்றினார். பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டிப் பேசிய திரு கௌரிகாந்தன், "ஞானச்சுடர்" சமய சஞ்சிகை எழுத்தாளர்களுக்கும்- கவிதை யாளர்களுக்கும் மதிப்பளித்து வருவது போற்றப்பட வேண்டியதென வியந்துரைத்தார்.

தொடர்ந்து மோகனதாஸ் சுவாமிகளின் முக்கிய அறிவித்தலொன்று வெளியாகியது. பல்வேறு துறைகளிலும் பணிகள் பல புரிந்த சாதனையாளர்களான திருவாளர்கள் ஸ்ரீனி வாசன், க. தர்மலிங்கம், பு. கதிரித்தம்பி, ஐ. சண்முகலிங்கம், க. நல்லையா, சிவ. ஆறு முகசாமி போன்றோர் நல்லை ஆதீன முதல்வரவர்களால் சபையில் மதிப்பளிக்கப்பட்டனர். அறிவிப்பும் - மதிப்பளித்தலும் சுவாமிகளின் பெரு விருப்பின் பேரில் நடைபெற்ற நிகழ் வாகும். அத்துடன் அல்வாய் றோ.க. பாட சாலை பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இத்துடன் உரை நிகழ்வுகள் அனைத் தும் நிறைவுக்கு வர, மூத்தோர் மதிப்பளிப்பு நிகழ்வின் முக்கிய கட்டம் ஆரம்பமானது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ச.ச. நிலையங் களினால் வழங்கப்பட்ட மூத்தோர் பட்டியல் வாசிக்கப்பட, அழைக்கப்பட்டிருந்த 88 முதிய வரில் 3பேர் நீங்கலாக ஏனைய 85 பேரும் வரிசையாக வந்து தத்தமது கௌரவிப்பைப் பெற்றுச் சென்றனர். அப்பிள்- ஆரேஞ்- பிஸ்கற் முதலான பழங்கள் கொண்ட பை ஒன்று, உடுபுடவைகள் - வேட்டிகள் - போர்வை அடங்கிய பை ஒன்றுடன் 10கிலோ அரிசிப்பை ஒவ்வொன்றும் அன்பளிப்பாக ஆச்சிரமத்தினால் முதியவர்களுக்கு வழங்கப்பட்டன. மலர்ந்த முகத்துடனும் - நிறைந்த புன்னகையுடனும் முதியோர்கள் தத்தமது அன்பளிப்புகளைத் தூக்கமுடியாமற் தூக்கிச் சென்ற காட்சியை அனைவரும் ரசித்தனர்.

இவற்றிற்கும் மேலாக சந்நிதிச் சுற் றாடலிலேயே தங்கியிருந்து, தினமும் ஆச்சிர மத்தில் உணவருந்தவரும் ஆதரவற்ற முதி யோர் அனைவருக்கும் போர்வைகளும் வழங் கப்பட்டன. மழை காலம் ஆரம்பமாகி விட்டதால் - காலநேரம் கருதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போர்வையானது பேருதவி யாகவிருக்கும் என்பது உண்மை.

இரா. செல்வவடிவேல் அவர்களின் நன்றியுரையினை அடுத்து, ஆச்சிரம மைய மண்டபத்து கருவறையில் அமர்ந்துள்ள முரு கப்பெருமானுக்கு நடைபெற்ற பூசை வழிபாடு களைத் தொடர்ந்து முதியோரும்- விருந் தினரும் - பொது மக்களும் மதிய போசனத் திற்காக பந்தியில் அமர்ந்து கொண்டனர்.

## கட்டுரையாளர் கவனத்திற்கு...

2015 முதல் 2018 வரை உள்ள காலப்பகுதியில் "ஞானச்சுடர்" ஆன்மீக மாதாந்த சஞ்சிகையில் கட்டுரைகள் - கவிதைகள் எழுதியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங்களை (2015 - 2018) வழங்கிய அனைவரும் தங்கள் தற்போதைய சரியான முகவரிகளுடன்- தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு விரைவில் கடிதம் மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*மிக அதிகமானவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பவன்தான் மிகவும் மகிழ்ச்சியான மனிதன்.*

# சமய வாழ்வு (தொடர் -24)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

நம்முடைய இந்து சமயத்தை மாற்றுச் சமயத்தைச் சார்ந்தவர்கள் விமர்சிக்கும் இடம் "அவதாரங்கள்" என்பதாகும் அவதாரங்கள் ஏன் என்கிற கேள்விக்குக் கிருஷ்ண பரமாத்மா கீதையில் பதில் சொல்லி இருக்கிறார்.

"அதர்மம் எப்போதெல்லாம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் நான் அவதரித்து, அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டுகிறேன்" என்று கீதையில் சொல்லப்பட்டுள்ளது.

விஷ்ணு பல அவதாரங்கள் எடுத்து இந்தச் செயலைச் செய்திருக்கிறார்.

முதல் அவதாரம் மீன் அவதாரமான மச்ச அவதாரம்
இரண்டாவது அவதாரம் ஆமை அவதாரமான கூர்ம அவதாரம்
மூன்றாவது அவதாரம் காட்டுப்பன்றி அவதாரமான வராக அவதாரம்
நான்காவது அவதாரம் பாதி சிங்கமும் பாதி மனித உருவமும் கொண்ட நரசிம்ம அவதாரம்
ஐந்தாவது அவதாரம் மிகக் குள்ளமான மனிதத் தோற்றமுடைய வாமன அவதாரம்
ஆறாவது அவதாரம் முரட்டுத்தன்மை கொண்ட மனிதரான பரசுராமவவதாரம்
ஏழாவது அவதாரம் இலட்சிய மனிதராகக் காட்சி தருகின்ற இராம அவதாரம்
எட்டாவது அவதாரம் பால கிருஷ்ணனுக்கு உதவியாக இருந்த பலராம அவதாரம்
ஒன்பதாவது அவதாரம் உலகுக்கு ஒப்பற்ற நீதியைப் போதித்த கிருஷ்ணாவதாரம்

இப்படித் திருமால் பல அவதாரங்களை எடுத்திருக்கிறார்.



இந்த அவதார வரிசை பரிணாமத் தத்துவத்தை (கூர்ப்புக் கோட்பாடு) விளக்குகின்ற வரிசையாக அமைந்திருப்பதாகக் கருதலாம்.

உலகம் தோன்றியவுடன் முதன் முதலாக நீரப்பரப்புத்தான் தோன்றியது. அந்த நீரப் பரப்பிலேயே முதல் உயிரினங்கள் தோன்றின. இறைவன் எல்லா உயிர்களிலும் வாழ்கிறான் என்பது இந்துமதத் தத்துவம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது நீர் வாழ் உயிரினங் களிலிருந்து மனித வளர்ச்சிவரை அனைத்துமே இறைவனின் அவதாரங்கள் என்பதை விளக்கு வதாக இந்த அவதார வரிசை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முதலில் நீரில் வாழுகின்ற மீனாக அவதாரம். அடுத்து நீரிலும் நிலத்திலும் வாழுகின்ற ஆமையாக அவதாரம். அதை அடுத்து பூமியின் அடியில் இருக்கின்ற கிழங்கு களைத் தோண்டி உண்ணுகின்ற காட்டுப் பன்றியாக அவதாரம். (மிருகங்களிலேயே காட்டுப்பன்றி மிகவும் கூர்மையான அறிவு படைத்தது என்று இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன.)

அடுத்து பாதி மிருகம் பாதி மனிதன் சேர்ந்த கலவையாக நரசிம்ம அவதாரம். அதன் வளர்ச்சியாக குள்ள மனிதனான வாமனனின் அவதாரம்.

அதன் பிறகு வந்த மனிதன் பலசாலி யாகவும் முரட்டுத்தனம் கொண்டவனாகவும், பழிவாங்கும் உணர்ச்சி உடையவனாகவும் இருந்தான் என்பதை விளக்கப் பரசுராம அவதாரம். ஏழாவது அவதாரமாகிய இராமர் பண்புகள் நிரம்பிய சிறந்த மனிதராக விளங்கு கிறார்.

வால்மீகி முனிவர் ஒருதடவை நாரத முனிவரிடம், "ஐயா, முனிவரே! இக்காலத் தில் இவ்வுலகத்தில் எல்லாவிதமான சிறந்த குணங்களும் பொருந்தியிருக்கும் உத்தம மான ஒருவன் இருக்கிறானா? பராக்கிரமசாலி யும், தர்மங்களை அறிந்தவனும், நன்றி மறவாதவனும், உண்மையைப் பேசுகிறவனும், விரதங்களை அனுஷ்டிக்கத் தவறாதவனும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்கின்ற வனும், கற்றுணர்ந்தவனும், எல்லாராலும் விரும்பத்தக்க அழகுள்ளவனுமாகிய உத்த மன் ஒருவனை நீர் கண்டதுண்டா?" என வால்மீகி கேட்டார்.

அதைக்கேட்டு மூன்று உலகங் களையுமறிந்த நாரத மகா முனிவர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, "முனிவரே! கேளும், நீர் எடுத்துக்கூறிய நற்குணங்கள் எல்லாவற் றையும் ஒருவனிடத்தில் காண்பது அரிது. ஆயினும் இத்துணை நற்குணங்களும் பொருந்திய ஒருவர் இருக்கிறார். அவர் இரகு வம்சத்தில் பிறந்து இராமன் என்னும் பெய ருடன் விளங்குபவர். நீர் குறித்த நற்குணங் கள் எல்லாம் அவரிடம் குடிகொண்டிருக் கின்றன" என்றார்.

இத்தகைய குணங்களையும் பண்பு களையும் பெற்றிருந்த இராமன் என்ற மனி தனைத்தான் வால்மீகி முனிவர் தம்முடைய இராமாயணத்தில் பாடினார். இராமனைத் திருமாலின் அவதாரமென்று சில இடங் களில் குறிப்பிட்ட போதிலும் இராமனை ஒரு மனிதனாகவே தம்முடைய காப்பியத் தில் காட்டினார். நற்குணங்கள் அனைத்தும் ஒரு மனிதனிடத்தில் ஒருங்கே அமைந்திருப் பது அருமையிலும் அருமையாதலின், அத் தகைய குணங்களனைத்தும் ஒருங்கே பெற் றிருந்த இராமன், இராமாயணத்தைப் படிப் பவர்கள் உள்ளத்தில் மனிதனுக்கு அப்பாற் பட்டவனாகவே தோன்ற ஆரம்பித்தான்.

வால்மீகி முனிவருக்கும் கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கும் இடையேயிருந்த நீண்டகாலத்தில் இந்நாட்டு மக்களின் உள் ளத்தில் ஒப்புயர்வற்ற உன்னத குணங் களாலும் பண்புகளாலும் ஒழுக்கசீலத்தாலும் வரம்பற்ற வள்ளன்மையினாலும் எல்லை அற்ற அருளினாலும், இராமன் ஒரு தெய்வம் ஆகவே இடம்பெற்றுவிட்டான். எனவே தன்னுடைய காலத்தின் சூழ்நிலையின்படி, கம்பன் காப்பிய நாயகனாகிய இராமனைக் கடவுளின் அவதாரமாகவே முழுக்க முழுக்க கொண்டுவிட்டான்.

இராம காதையில் கருத்துச் சொல் பவர்கள் இந்த அடிப்படையில் நேர்மையான விமர்சனத்தைச் செய்வது இலக்கிய வளர்ச் சிக்கு உதவும். இந்த இடத்தில் திருவள்ளுவப்

பெருந்தகை குறிப்பிட்ட விடயம் ஒன்றைப் பார்க்கலாம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.** (குறள் 50)

இவ்வையகத்தில் வாழவேண்டிய முறைப்படி (மேற்குறிப்பிட்ட குண அம்சங்கள்) வாழ்கின்றவனை, வான் உலகத்தில் உள்ள தேவர்களில் ஒருவனாகவே வையகத்தில் உள்ளோர் கருதிப் போற்றுவர் என்பதாம்.

எனவே இராம அவதாரம் என்பது மனிதர்கள் எப்படி வாழவேண்டும் எதனைச் செய்யக்கூடாது என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

எட்டாவது அவதாரமாகிய பலராம அவதாரத்தை சிலர் அவதாரமாக ஏற்பது இல்லை.

கிருஷ்ணாவதாரம் நியாயத்தின் பக்கம் மனிதன் நிற்கவேண்டிய அவசியத்தை விளக்குகின்ற அவதாரம். மனித குலத்துக்குத் தேவையான உபதேசம் கிருஷ்ணா அவதாரத்தில் நிகழ்கிறது.

ஆக மனிதனின் பரிணாம வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவதோடு, இந்த அவதாரங்கள் மானிட வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற தன்மையிலும் விளங்குகின்றன. ஒவ்வொரு அவதாரத்தின் நோக்கமும் ஒவ்வொரு நீதியை விளக்குவதாகவே அமைந்துள்ளன.

ஹயக்கிரீவன் என்ற அசுரன் வேதங்களைத் திருடிக்கொண்டு போய்க் கடலில் ஒளித்துவிட்டான். மகாவிஷ்ணு மச்ச அவதாரம் எடுத்து வேதங்களை மீட்டு வருகிறார். நியாயங்களை ஒளிக்க முயல்கின்றவன் தண்டனைக்குத் தப்பமுடியாது என்பதை இந்த அவதாரம் விளக்குகிறது.

மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகியாகிய பாம்பை கயிறாகக் கொண்டு கடலைக் கடைந்தபோது, மந்திரமலை ஒரு பக்கம் சாய, அதனை நிமிர்த்த விஷ்ணு ஆமை வடிவம் எடுத்து அம்மலையைத் தாங்கினார். ஒரு காரியத்தைச் செய்கின்ற போது, அதைச் செய்வதற்கான சக்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு இல்லாத நிலையில் இறைவனை வேண்டினால், அவன் வந்து துணை செய்யத் தயாராக இருக்கிறான் என்பதை கூர்மாவதாரம் எடுத்துக்காட்டுகிறது.

ஹிரன்யாஷன் எனும் அரக்கன் பூமியைப் பாயாகச் சுருட்டி கடலுக்குள் கொண்டு போய் ஒளித்து வைத்தான். விஷ்ணு வராக அவதாரம் எடுத்து அவனைக் கொன்று பூமியைத் தன் கொம்பின்மீது சுமந்து மீட்டு வந்தார். இந்த அவதாரத்தில், உலகத்தையே ஏமாற்றுகின்ற வலிமை படைத்தவனையும் இறைவன் தண்டிப்பான் என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

இரண்யன் என்கிற அசுரன் ஆணவத்தின் எல்லைக்கே சென்று, கடவுள்கூட தனக்கு அடிமைப்பட்டவன் என ஆர்ப்பரிக்கிறான். அவனுடைய புதல்வன் பிரகலாதன் அந்த ஆணவத்தை எதிர்க்கிறான். கடவுளை எனக்குக் காட்டு என்று இரண்யன் ஆணவத்துடன் கேட்கின்றபோது, கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்று அவன் சொல்ல, "இந்தத் தூணில் அவன் உள்ளானா?" என்று இரண்யன் காலால் தூணை உதைக்க, அத்தூணிலிருந்து நரசிங்க மூர்த்தியாக விஷ்ணு தோன்றி அவனைக் கொன்றார். இரணியன் தவம் இருந்து சக்தி பெற்றவன். கடவுளிடமிருந்து பெற்ற சக்தியை கடவுளுக்கு எதிராகவே பயன்படுத்துகின்ற ஆணவத்தைப் பெறுகிறான். அழிவையும் அடைகிறான்.

நம்முடைய சக்தி அனைத்தும் இறைவன் அளித்தது என்பதை நாம் உணராதபோது

நமக்கு ஆணவம் ஏற்படுகிறது. அந்த ஆண வமே நம்முடைய அழிவுக்கும் காரணமாகிறது. இதைத்தான் நரசிம்ம அவதாரம் உணர்த்து கிறது.

மகாபலி என்கிற அரசனிடம் விஷ்ணு சிறிய உருவத்தில் வந்து மூன்று அடி மண் கேட்கிறார். சிறிய உருவம் தானே மூன்றடி மண் என்ன பிரமாதம் என்று எண்ணி மகா பலி கொடுக்க ஒப்புக்கொள்கின்றான். உடனே வாமனன் என்கிற சிறு வடிவத்தில் வந்த பரந்தாமன், விசுவரூபம் எடுத்து ஓர் அடியால் உலகத்தையும், மற்றோர் அடியால் வானத் தையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடம் இல்லாமையால் மகாபலியின் தலையில் காலை வைத்து, அவனைப் பாதாளத்தில் அமிழ்த்தினார்.

வந்தவரின் பெருமையினை உணரா மல் தோற்றத்தை மட்டும் வைத்து மகாபலி எடை போட்டதால் ஏற்பட்ட ஆபத்து இது. மூர்த்தி சிறியதாக இருந்தால் கீர்த்தி பெரிய தாக இருக்கும் என்கிற எச்சரிக்கையுடனும் அடக்கத்துடனும் நடக்க வேண்டும் என் பதை இந்த அவதாரம் விளக்குகிறது.

தனது தந்தையை ஓர் அரசன் கொன் றான் என்பதற்காக அவனது இனத்தையே அழிக்கிறார் பரசுராமர். அதாவது ஒரு கெடு தலை மற்றவர்களுக்கு நாம் செய்தால், அது நம்மை மட்டும் இன்றி நம் வம்சத் தையே அழித்துவிடும் என்பதை பரசுராம அவதாரம் எடுத்துக் காட்டுகிறது.

இராமவதாரம் பற்றியும் கிருஷ்ண அவதாரம் பற்றியும் எழுதுவதற்கு முன்ன தாக ஒவ்வொரு அவதாரமும் மானிட இனத் துக்குத் தேவையான ஒரு நீதியைப் புகட்டு வதற்குத் தோன்றியவை என்பதை நாம் தெரிந்துகொள்வது அவசியம். இந்த அவ தாரக் கதைகள் கற்பனைக் கதைகளாகக் கூட இருக்கலாம். ஆனால் உலகின் பரிணாம வளர்ச்சியினையும், மானிடர் தெரிந்துகொள்ள வேண்டிய நீதிகளையும் உணர்த்துகின்ற கற்பனைகள் இவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

இறைவன் எப்போதும் நன்மைக்குத் துணையாகவும் தீமைக்குப் பகையாகவும் விளங்குவான் என்பதை இந்த அவதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இராமவதாரக் கதை அனைவரும் அறிந்த ஒன்று. இராமனிடமிருந்த சிறப்பான குணங்களே இராமாயணக் கதையில் அமைந் துள்ள நீதியாகும். இராமரிடம் இருந்த சிறப் பான குணங்கள் எவை?

1. குரு வாக்கிய பரிபாலனம்
2. தந்தை தாய் வாக்கிய பரிபாலனம்
3. சகோதர பாசம்
4. ஏகபத்தினி விரதம்
5. சரணாகதி அளித்தல்
6. துஷ்டர்களைத் தண்டித்து நல்லவர்களைப் பாதுகாத்தல்.

## 01. குருவாக்கிய பரிபாலனம்:

ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத் தைப் பார்த்தால் போதும். குருவின் கட் டளை எதுவானாலும் அதை மீறக்கூடாது என எண்ணுபவன் இராமன். தாடகையை இராமன் கொல்ல மறுக்கிறான். ஒரு பெண் ணைக் கொல்வது பாவம் என எண்ணுகிறான். "பெண் என் மனத்திடை பெருந்தகை. நினைத்திட்டான்" என்பது கம்பன் வரி. குரு விசுவாமித்திரர் அவளைக் கொல்லுவது சரியே என்று அவனுக்கு எடுத்துக் கூறுகிறார். அவள் பெண்தான் என்றாலும், ஆண்களை விடவும் மோசமான கொடுமைகளைச் செய் கின்றவள் என்றும், பல நல்ல கருமங்கள் நடைபெறுவதற்கு அவள் தடையாக

இருப்பதால் அவளைக் கொல்லுவது இராமனின் கடமை என்றும் விசுவாமித்திரர் எடுத்துக் காட்டுகிறார்.

"தீது என்றுள்ளவை யாவையும் செய்து, எமைக்
கோது என்று உண்டிலள், இத்தனையே குறை
யாது என்று எண்ணுவது? இக் கொடியாளையும்
மாது என்று எண்ணுவதோ? மணிப் பூணினாய்!"

தீமை என்று இருப்பவையாகிய எல்லாச் செயல்களையும் செய்து முடித்து; எம்மைப் போன்ற முனிவர்களைச் சாரமில்லாத சக்கை என்று உண்ணாது விட்டனள்; அவள் செய்த தீய செயல்களில் இவ்வளவே குறை; இத்தகையவளை என்ன என்று எண்ணுவது; இத்தகைய கொடுஞ்செயல் உடையவளையும்; மணிகளாலான அணிகலன்களை அணிந்திருக்கும் ராமபிரானே! பெண் என்று நினைத்தல் ஒண்ணுமோ.

இவ்வாறு விசுவாமித்திரர் தாடகை செய்த தீவினைகளைத் தொடர்ந்து எடுத்துக் கூறுகிறார். முடிவாக, உருவத்தினால் மட்டும் பெண்ணாக இருந்து பயன் இல்லை. பெண்ணுக் குரிய குணங்கள் அமையப்பெற்றிருக்க வேண்டும். எனத் தெளிவுபடுத்த அண்ணலின் அம்பு தாடகையின்மீது பாய்கிறது.

இந்த வரலாறு இன்றுள்ள பெண்களுக்கு எவ்வளவுதூரம் அவசியம் என்பதை எழுதவும் வேண்டுமோ? (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 11 | ஐப் | 25 | திங்கள் | திருமூலர் |
| நவம்பர் | 20 | கார் | 04 | புதன் | ஆறுமுகநாவலர் |
| நவம்பர் | 22 | கார் | 06 | வெள்ளி | மெய்ப்பொருளார் |
| டிசம்பர் | 02 | கார் | 16 | திங்கள் | இராமநாதர் |

## கந்தசஷ்டிகால விசேட நிகழ்வு
## (28.10.2019 - 01.11.2019)

வருடா வருடம் வழமைபோல் இடம்பெற்றுவரும் கந்தசஷ்டி கால விசேட நிகழ்வுகள் 28.10.2019 தொடக்கம் 01.11.2019 வரை "கந்தன் புகழ்மாலை" என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்களின் தொடர் சொற்பொழிவு முற்பகல் 11.00 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்.

02.11.2019 சனிக்கிழமை மாலை சூரன்போர்
03.11.2019 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாரணை

*பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.*

# இறைவன் பேசினால்

– திருமதி ப. நடராசா அவர்கள் –

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

ஓ! மனிதா கேள்! உன்னுள் உறங்கிக் கிடக்கும் உன்னத சக்தியைத் தட்டி எழுப்பும் ஒலியே என் குரல். விழித்தெழு; என் குரல் உன் காதில் விழ வேண்டுமா? சிறிது நேரம் வெளிப்புற உலகை மறந்து உள்ளே திரும்பு. அதாவது அகமுகமாகு. என் குரல் உனக்கு நன்றாகக் கேட்கும்.

இதோ! பூமி உருண்டை இப்பூகோள உருண்டையின் புறத்தேயுள்ள குறிப்புகளின் படி தேசப்படங்கள், ஆறுகள், மலைகள், கடல் நிலப்பரப்பு பாதைகள் இவற்றையெல்லாம் கண்கூடாகக் காணலாம் ஆனால் இது சுழல்வது எப்படி? இதனுள்ளே இருப்பவர் யார்? என்று கேட்டுப்பார். நான் உள்ளே இருந்து இதை இயக்கிக்கொண்டிருக்கும் இயக்குனர். பூமியை மட்டுமல்ல அண்டத்தில் உள்ள அத்தனை கோள்களையும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதாது சதா சர்வகாலமும் இயக்கிக்கொண்டிருக்கும் இயக்குனர். எந்த விதியில் எவ்வொழுங்கில் இவை இயங்க வேண்டுமோ அவ்வொழுங்கு விதிக்கமைய இயங்குவதால் ஒன்றை ஒன்று முட்டாது மோதாது இயங்குகின்றது. இவ்வொழுங்கு விதியை நிர்ணயித்தவனும் நானே. என்னில் இருந்து தோன்றும் அணுத்துகள்களின் தொகுப்பே உலகம். ஒவ்வொரு அணுத்துகளுக்கும் சக்தி உண்டு. உறங்கிக் கிடக்கும் சக்தியை இயங்க வைப்பது என் அலை. இதுவே உள்ளிருக்கும் எனது கலை. இவ் அண்ட கோளங்கள் உருண்டுகொண்டே இருப்பதற்கு உதவியாயிருப்பது காலச் சக்கரம். இச்சக்கரம் சுழல்வது எனது ஆணையால் எல்லா விதிக்கும் காரணம் நானே. எல்லாமே நானாக இருக்கும்போது இவ்வொழுங்கு விதி எங்ஙனம் மாறும்?

மாற்றமுடியாத ஒன்றை மாற்ற நினைப்பது என்னை மீறிச் செயற்பட நினைக்கும் நினைப்பாகும். இயல்பாகவே என்னிடமிருந்து வருவது சத்து. என்னால் தோற்றுவிக்கப்பட்டது அசத்து. சத்து அசத்தை இயங்க வைக்கின்றது. சத்து அழியாப்பொருளாகிய உயிர். அசத்து. அழியும் தன்மையுடைய உடலாகும். சத்து அழியாப் பொருளதலால் அது உண்மை, சத்தியம், நித்தியம் என்று கூறப்படுகின்றது. அசத்தாகிய உடல் மாறுபட்ட தோற்றங்களுக்காளாகி இறுதியில் அழிகின்றது. இதை மனிதனை நோக்கி நான் கூறுவது எதற்காக என்றால் மனிதனுக்கே இதனைப் பகுத்தறியும் ஆறாவது அறிவைத் தந்திருப்பதால் மற்றைய படைப்புக்களெல்லாம் ஐம்பூதங்களின் வசப்பட்டவை. என்னையறியும் ஆற்றல் இல்லாதவை. அதனால் மனிதா நீ என் வசமானவன். நீ ஐம்பூதங்களுக்கு வசப்பட்டு அதன் அடிமையாக இருப்பதால் துன்பப்படுகின்றாய் நீ சுதந்திரனாக நிம்மதியாய் அமைதியாய் வாழ வேண்டின் என் வசமாகு.

*நிஸப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.*

மனித வாழ்வின் ஒழுங்கு விதிகளை மீறி மனிதர்கள் வாழ முற்படும்போது அங்கே எல்லா விதிகளும் மாறுபடுவதால் நோய், வறுமை, பகை என்பவற்றால் துன்பம் உண் டாகி அமைதி குன்றுகின்றது. ஐம்பூதங்களின் சக்தி அதிகரிப்பதால் இவற்றைக் கட்டுப் படுத்தி மனிதன் எவ்வித ஒழுங்குவிதிக்கமைய வாழவேண்டும் என்பதை மனிதர்களுக்கு உணர்த்தவே நான் காலத்திற்குக் காலம் மனித உருத்தாங்கிப் பூமிக்கு வருகின்றேன். எனது மனம், வாக்கு, காயம் மூன்றாலும் மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டவே இவ்வாறு உருத்தாங்கி வருகின்றேன். இதனால் ஒருருவம் ஒரு பெயர் இல்லாத நான் பல பெயர்கள் உருவங்கள் கொண்டு இவ்வுலகில் வாழ்கின்றேன். ஒவ் வொரு உடற்கூட்டினுள்ளும் இருந்து அதனை இயக்கும் உயிர்ச்சத்து நானே.

இங்கு உலகெங்கும் ஏற்பட்டுள்ள அறியாமை இருளால் மனித வாழ்வு தடம் புரண்டு விட்டது. வேதனையால் மக்கள் துடிக் கின்றனர். வாழ்வு பெரும் சுமையாகி விட்ட தாகக் கருதுகின்றனர். இறைவா! எம்மைக் காப்பாற்று என்று கதறியழும் நிலையில் மனித வாழ்வின் இயல்பு மயக்கத்தினால் மறைந்து விட்டது. மனிதா! உன்னைத் துன்பத்திலிருந்து மீட்டெடுக்கவே உன்னுடன் பேசுகின்றேன். கவனிப்பாயா? இந்த உடம்பு நான் என்று நினைக்கும்போது ஒவ்வொரு மனிதனும் தனியான ஓர் பிறவியாக நினைக் கின்றான். ஆனால் சகல உடல்களையும் இயக்கும் ஆன்ம சக்தியே நான். நான் ஆன்மா என நினைக்கும் போது அங்கே ஒற்றுமை உணர்வு தோன்றுகின்றது. நான் உடம்பு என்று நினைக்கும்போது வேற்றுமை உணர்வு உண் டாகின்றது. உன் நினைப்புச் சரியாயிருந்தால் எல்லாம் ஒன்று என்பதை உணர்வாய்.

சாதி, இனம், மொழி, சமயம் என்ப வற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதர்கள் தம்மை வேறுபடுத்திக் காண்பது அறியாமை யினால் ஆகும். ஒரே சக்தியான பிரிக்க முடி யாத என்னை உனது கடவுள் எனது கடவுள் எனப் பங்குபோட்டுப் பேசுவது உண்மையான கடவுளை (என்னை) புரிந்து கொள்ளாத தனாலேயே ஆகும். இன்று சர்ச்சைக்குரிய சமயங்களான இஸ்லாம், பௌத்தம், கிறீஸ் தவம் எல்லாமே மனிதர்களால் பின்பற்றப்படும் சமயங்களாகும். புத்தராக, யேசுவாக, அல்லா வாக, சிவமாக, எல்லாமாக இருப்பதும் யானே.

நான் “சித்தார்த்தர்” எனும் பெயருடன் தோன்றி பிணி, மூப்பு, சாக்காடு இவற்றில் இருந்து விடுபடும் மார்க்கத்தை அறிந்து, பிறப்பு இறப்புச் சுழலிலிருந்து விடுபடுவதற் காக அரச போகத்தைத் துறந்து உண்மை அறிவை நோக்கித் தியானத்தமர்ந்தேன். நானே அது என்பதை இறுதியில் உணர்ந்தேன். உணர்ந்ததை உலகிற்குச் சொன்னேன். சாதி, சமயம், இனம், மொழி, பட்டம், பதவி, படிப்பு, உற்றார் நண்பர், பகைவர் இவை எல்லாவற் றையும் கடந்து உள்ளே செல். அங்கே நீ நான் என்ற பேதமின்றி “நான்” என்ற ஒன்றைக் காண்பாய். எல்லாவற்றையும் கடந்து உள் உறையும் நான் எல்லாவற்றையும் கடந்து நிற்பதால் கடவுள் எனும் பெயர் கொண்டேன். இந்த உடம்பு நானல்ல அதேபோல் நீயும் உணர்ந்து உனக்குள்ளே தேடி உண்மை யைக் கண்டுகொள் என்பதே புத்தர் வாழ்வின் சாராம்சம். இதனாலேயே புத்த விகாரைகளில் ஒன்றுமே இல்லாத வெற்றுக் கோபுரங்களும் கட்டடங்களும் உள்ளன. கட்டடத்தின் புறத்தே புத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதனால் இதை உற்றுநோக்கும்போது நான் வேறெங்கும் இல்லை; உனக்குள்ளே மட்டும்தான் உள் ளேன் என்று ஆகின்றது. ஆனால் நான்

எங்கும் நிறைந்து எல்லாமாக உள்ளேன். தூணிலும் துரும்பிலும் விக்கிரகங்களிலும் உயிருள்ள எல்லாவற்றிலும் ஜடத்திலும் இருக்கின்றேன் என்பதைக் குறிப்பதே இந்து ஆலயக் கோபுரங்களினதும் ஆலயங்களின தும் தத்துவமாகும். இத்தத்துவத்தை அறிய வேண்டின் உள்ளே சென்று உன்னை அறி. அதன் பின்பே உனக்குப் புரியும்.

நான் யேசு என்னும் நாமத்துடன் தோன்றியது மனுக்குலமாகிய மனித குலம் ஒன்றே என்பதை உணர்த்துவதற்காகவே. மனிதர்களாகிய எல்லோரும் ஒரே தாய் தந்தையரின் குழந்தைகளே. ஆகவே நாம் எல்லோரும் சகோதரர்கள். ஆகவே நலிந்தோர் ஏழைகளில் என்னைக் காண் என்றேன். இங்கே மனித நேயம் என்பது அன்பு மயமானது என்றும் நித்தியமான ஆன்மா அன்பு சொரூபமானது என்றும் அதுவே நான் என்றும் உணர்த்தப்படுகின்றது. கேளுங்கள் கொடுக் கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வாக்கியங்களை நீ உன்னையே கேட்டுப்பார் பதில் கிடைக்கும். உன் இதயக் கதவைத் தட்டிப்பார் கதவு திறந்து உள்ளே என்னைக் காண்பாய் என்பதாகும். உள்ளே என்னைக் கண்டவன் தானே அது என்பதை உணர்ந் தவன். எங்கும் எதிலும் என்னைக் காண்பான் அவனுக்குப் பேத புத்தி தோன்றாது. எல்லா உயிர்களையும் நேசித்து ஒற்றுமையாக வாழ் வான்.

மனித குலம் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காகவே நான் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களில் தோன்று கின்றேன். நபிகள் நாயகமாகத் தோன்றியதும் நானே. இடங்களின் வேற்றுமைக்கேற்ப மொழி களும் வெவ்வேறாக அமைவதால் நான் "அல்லா" என அழைக்கப்பட்டேன். இங்கே நான் எந்த உருவமுமின்றி வெட்டவெளியே நான் என்று உணர வைத்தேன். ஆனால் அவ் வெட்டவெளியை உள்ளே கண்டு தன் னைத்தான் அது என்று கொண்டதே நபிகளின் கொள்கையாகும். அங்கேயும் ஏழைகளை நேசி, மனிதர்கள் எல்லோரும் சகோதரர்கள் என்னும் கொள்கைதான் அடிப்படைக் கொள் கையாகும். ஆகவே எல்லோரும் எல்லாமாக இருக்கும் ஓர் இறைவனான ஒரே கடவுளை உணர அவரின் இயல்பாகிய கருணை எனும் உணர்வைப் பெற வேண்டும். ஒவ்வொரு மனி தனும் சகோதரனே என உணரவேண்டும்.

இதற்கு உதாரணமாக குழந்தைகள் விளையாடும்போது தத்தமக்குப் பிடித்தமான உருவத்தையுடைய பொம்மைகளை வைத்து விளையாடுவதுபோல் தமது நம்பிக்கைக்கும் வாழ்விற்கும் ஆதாரமான இறைவனை எவ்வுரு வில் வணங்க விரும்பினாலும் வணங்கலாம். ஆனால் இறைவனின் திருவாக்கான வேதவாக் கைப் புரிந்து கடைப்பிடித்தால் ஒவ்வொரு தோற்றத்திலும் நான் கூறியவை முழு மனித சமுதாயத்திற்குமே ஆகும். நான் உருவம், நாமம், மொழி, இடம் எல்லாம் கடந்து எங்கும் நிறைந்து எல்லாமாய் விளங்குபவன் என்பதை உணர்ந்து "மனுக்குலம் ஓர்குலம்" என்னும் ஒருமைப்பாட்டினை வலுப்படுத்தி எளியோரை வலியோர் அடிமைப்படுத்தாது அன்புடன் வாழ வைக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பணத் திற்கு முதலிடம்; மனிதனுக்கு அதைவிடக் குறைவான பெறுமதியே உள்ளது. பணத் திற்கு நாணயம் என்ற பெயர் உண்டு. நாண யம் என்றால் நேர்மை, வாக்குத் தவறாமை, ஒழுக்கம் என்பதாகும். நாணயத்தைக் (பணத்தை) கையாள்பவன் நாணயமான மனி தனாக இருந்தால்த்தான் நாணயத்திற்கும் மதிப்பு அதைக் கையாளும் மனிதனுக்கும் மதிப்பு உண்டாகும். ஆகவே மனிதன்

நாணயமாக நடந்து கொள்வது மிக முக்கிய மான விடயமாகும்.

எனது விடயம் பெரியது. ஆனால் மனித வாழ்வின் காலமோ குறுகியது. ஆகவே நான் எவ்வெவ் காலங்களில் எந்தெந்த உருத் தாங்கி வந்தபோதும் எனது வாக்கின் சாராம்ச மாக அமைந்தது பஞ்ச சீலக் கொள்கை. அதாவது கொலை, கள், களவு, காமம், பொய் இவ்வைந்தையும் விலக்கி வாழ்ந்தால் மனிதன் அமைதியாக சுதந்திரனாக அனை வரையும் அன்புடன் நேசித்து அன்பெனும் அமிர்தத்தைப் புசித்து ஆனந்தமாக வாழலாம்.

## ஆறுமுகம்

பழந்தமிழ் இலக்கியங்களில் பல புலவர்களால் பாடப்பட்ட இந்து சமய தெய்வங்களைப் பற்றிய பாடல்கள் பல வழக்கொழிந்து வருகின்றமை வருந்தத்தக்க விடயமாக இருக்கின்றது. இவ்வருகையினால் பல புலவர்கள் பற்றியும் அவர்கள் யாத்த பாடல்கள் பற்றியும் இன்றைய நம் இளம் சமுதாயம் அறியாதிருப்பதையிட்டு நாம் கவலைப்பட வேண்டியதாய் உள்ளது. இந்தவகையில் நாம் சில புலவர்கள் பற்றிப் பார்ப்போம்.

வெண்பாவில் புகழேந்தி
பரணிக்கோர் சயங்கொண்டான்
விருத்தம் எனும் ஒண்பாவிற்குயர் கம்பன்
கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்
பண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்
வசை பாடக் காளமேகம்.

புகழேந்தி, சயங்கொண்டான், கம்பன், ஒட்டக்கூத்தன், இரட்டைப் புலவர்கள், காளமேகம் ஆகிய புலவர்கள் மேற்காணும் பாடல் வகைகளில் வித்துவத்தன்மை மிக்கவராக விளங்கினர் எனக் காண்கிறோம்.

இவ்வாறு பாடப்பட்ட பாடல்களில் ஆறுமுகனைப் பற்றிய ஓர் பாடலை ஆராய்வோம்.

சங்கரர்க்கும் ஆறுமுகம்
சண்முகற்கு ஆறுமுகம்
ஐங்கரர்க்கு மாறுமுகம் ஆனதே
சங்கைப் பிடித்தோற்கு ஆறுமுகம்
சங்கரா உன்பாதம் பிடித்தோர்க்கு மாறுதலைத்தா!

சங்கரன் எனும் சிவபெருமானுக்கு அவர்தம் தலையிலிருந்து கங்கை பெருக்கெடுத்து ஆறாகப் பாய்கிறது. சண்முகன் எனப்படும் திருமுருகனும் ஆறுமுகங்களைத் தாங்கியவனாக ஆறுமுகத்தான் என நாமகரணத்துடன் காட்சியளிக்கின்றான். ஐங்கரன் என நாம் வணங்கும் பிள்ளையார் பெருமானும் மாறுபாடான யானைமுகத் தோற்றத்தில் காட்சி தருகின்றான். திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளும் திருமாலும் ஐந்துதலை கொண்ட அரவத்தின் மடியில் தனது தலையை வைத்து ஆறாவது தலையாக திருப்பாற்கடலில் பள்ளிகொள்கின்றான். சங்கரரான நாம் வணங்கும் சிவனே உன் பாதத்தை தினம் நாம் வணங்குகிறோம். எமக்கு ஆறுதலைத் தருவாயாக என்கின்ற மிக ஆழமான தெய்வீக சிந்தனைக் கருத்தினை நாம் காண்கின்றோம்.

-பொ. சின்னையா-

# சத்சங்கம்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

அன்பு கலந்ததாகவும், அறிவு பொருந்தியதாகவும் அருளோடு பிணைந்துள்ள பொருள் நிறைந்ததாகவும் இருப்பது எதுவோ அதுவே சத்சங்கம் எனப்படும்.

எமது வாழ்வு மேன்மைபெற வேண்டுமானால் எமக்கு சான்றோருடைய கூட்டுறவு மிக அவசியம்.

"சான்றோர் இனத்திரு" என்பது ஔவை மூதாட்டியின் அமுதவாக்காகும். ஸ்தூலமாக இல்லாவிடினும், சூட்சுமமாகவேனும் அருளாளர்களுடன் நாம் தொடர்புகொள்ள வேண்டும்.

நல்லாரைக் காண்பதுவும் அவர்கள் சொல் கேட்பதுவும் அவர்களோடு இணைந்திருப்பது வும் நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று என நாம் இளமையிலேயே கற்றோம் அல்லவா?

ஆனால் இப்போது நடப்பது என்ன? காலத்தின் கோலம் என்ற போர்வையுள் மனிதன் சந்தர்ப்பவாதியாகிவிட்டான். நல்லவன் என்று தெரிந்து நாம் பழகுகின்றோமா? எவர் எமக்குச் சாதகமாக நடக்கின்றாரோ, எவர் நாம் சொல்வதற்கெல்லாம் சரி என்று தலை ஆட்டுகின்றாரோ, அவரை அல்லவா எம் மனம் நாடுகின்றது. இது சரியா? தப்பா? என்பது நிதானமாக இருந்து சிந்திக்கவேண்டிய விடயம்.

தடித்த தோலுடன் முட்களும் நிறைந்து காணப்படும் பலாக்கனி இனிய சுவையான சுளைகளைத் தருகின்றது. ஆனால், சிறிய உருண்டை வடிவில் அழகான வண்ணம் கொண்ட காட்டுப் பழம் கொடிய நஞ்சாகின்றது. எனவே தோற்றம் கண்டு நாம் ஒருவரை எடைபோடக் கூடாது.

நாம் உறவு கொண்டாடும் மக்கள், இதயசுத்தி உடையவர்களாக இருக்கவேண்டும். மனச்சாட்சிக்கு அஞ்சுபவர்களாக இருக்கவேண்டும். இவ்வாறு நல்லோரை இனங்கண்டு நாம் உய்யவேண்டுமானால் எமக்கு அருளாளர்களின் உறவு, துணை அவசியம்.

வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தூய்மையானதுதான். ஆனால் அது சேற்றில் விழுந்தால் சேறாகி விடுகின்றது. சாக்கடையில் விழுந்தால் சாக்கடை நீராக மாறி விடுகின்றது. அதுவே கங்கையில் வீழ்ந்தால் புனித கங்கா தீர்த்தமாகி விடுகின்றது.

அதுபோன்றே நாமும் எத்தகையவர்களோடு சேருகின்றோமோ அதற்கேற்பவே எமது பண்பும், குணமும் அமையும் மாறுபடும்.

அதனால்த்தான் எமது நல்வாழ்வுக்கு ஊன்றுகோலாக எமக்கு நல்லோர் தொடர்பு அவசியம். நல்லோர் தொடர்பு சத்சங்கம் ஆகும்.

நாங்கள் பெற்ற பேற்றினை மற்றவர்களும் பெற்று உய்ய வேண்டும் என்ற உயர் நோக்கோடு செயற்படுதல், பெரியோர், சான்றோர் இயல்பாகும். இதற்கு மாறாக தீயோர் நட்பு

எமது வாழ்வை, வளத்தையே அழித்துவிடும். ஆனால் எம்மில் பலர் எமக்கு எல்லாம் தெரியும் எம்மை எவரும் வழிநடத்தவேண்டிய அவசியம் இல்லை. நாம் சரியான உண்மை நிறைந்த பாதையில்த்தான் சென்று கொண்டிருக்கின்றோம் என நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இது எங்கே போய் முடியும்? எம்மை நாம் அறிந்து கொள்வது எப்போது?

இச்சந்தர்ப்பத்தில் ஒரு கதையைக் கேட்டுப் பாருங்கள். சந்நியாசி ஒருவர் கனவு ஒன்று கண்டார். அக்கனவில் அவர் சொர்க்கம் சென்று அங்கு இடம்பெறும் ஒரு விழாவைக் காண்கிறார்.

எங்கும் அலங்கார வளைவுகள், மகர தோரணங்கள், வண்ண விளக்குகள், அழகுக் கோலங்கள், வண்ண மலர்க் குவியல்கள், எங்கும் ஒரே ஒளி வெள்ளம்.

சந்நியாசிக்கு ஒன்றும் புரியவில்லை. "இங்கே என்னதான் நடக்கிறது?" என்று கேட்கிறார் அயலில் நின்ற ஒருவரிடம். விசயம் தெரியாதா உங்களுக்கு? இன்று இறைவனின் பிறந்தநாள். அதைக் கொண்டாட ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் இறைவனும் கலந்துகொள் கிறார் என்றால் பாருங்களேன். அருகில் இருந்தவர் தந்த பதில் இது.

சந்நியாசி பாதையின் ஓரத்தே சென்று நின்று ஊர்வலத்தைக் கவனித்தார். ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. யானைகள், குதிரைகள், குடை, கொடி, ஆலவட்டங்கள் மக்கள் வெள்ளம் அலை அலையாக வந்துகொண்டிருந்தது.

முதலில் ஒரு குதிரை வந்தது. அதன்மீது ஒருவர் வாட்டசாட்டமாக அமர்ந்திருந்தார். அவர் பின்னே ஒரே மக்கள் கூட்டம். கொடி, குடை, ஆலவட்டம் குதிரையில் இருப்பவர் யார்? அவர் பின்னே இத்தனை மக்கள் கூட்டம் வருகிறதே. சந்நியாசி தன் அருகில் நின்றவரைக் கேட்டார். அவர் ஒரு மதத்தின் பெயரைச் சொல்லி அந்த மதத்தின் தலைவர் இவர். அவர் பின்னால் வருபவர்கள் எல்லாம் அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று பதில் அளித்தார்.

ஊர்வலம் தொடர்ந்தது. அடுத்து ஒரு பெரிய யானைமேல் ஒருவர் வந்தார். அவர் பின்னாலும் ஏகப்பட்ட கூட்டம். "இவர் யார்?" என்று வினாவினார் சந்நியாசி. அருகில் நின்றவர் இன்னுமொரு மதத்தின் பெயரைச் சொல்லி அந்த மதத்தின் தலைவர் இவர். பின்னால் வருபவர்கள் அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று பதில் அளித்தார்.

அந்த ஊர்வலத்தின் முடிவில் முடி நரைத்த வயதான ஒருவர் ஒட்டி உலர்ந்த குதிரைமேல் வந்து கொண்டிருந்தார். ஆனால் அவருக்குப் பின்னே எவருமே வந்ததாக இல்லை. கொடி, குடை, ஆலவட்டம் எதுவுமே கிடையாது.

"இவர் யார்? இவர் மட்டும் ஏன் தனியாக வந்து கொண்டிருக்கின்றார்?" "இவர் இந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவர் இல்லையா?" என்று கேட்டார் சந்நியாசி.

"ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? இவர்தான் கடவுள். இவருடைய பிறந்தநாள்தான் இன்று அதனைக் கொண்டாடத்தான் இந்த ஊர்வலம் ஏற்பாடெல்லாம்" என்றாரே பார்க்கலாம் பக்கத்தில் நின்றவர்.

சந்நியாசி திடுக்கிட்டுக் கண்விழித்துக் கொண்டார். மக்கள் எல்லாம் தாம் சரியான பாதையில் போகின்றோம் என நினைத்துக்கொண்டு தவறாகப் போய்க்கொண்டிருக்கின்றார்கள். உண்மைதான், கடவுளைப் பின்பற்றுவதாக நினைத்துக்கொண்டு தாம் செயற்படுவதும் சரியானதே என்ற நினைவில் தம்மைப் பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் பலர். ஆனால்,

உண்மையில் அவர்கள் கடவுளை நேசித்ததாக இல்லை. தம்மையே பிரபல்யப்படுத்துகின்றார்கள். யதார்த்தமாக யோசித்துப் பார்த்தால், உண்மைக்குப் பின்னேதான் நாங்கள் போய்க்கொண்டிருக் கின்றோம் என எங்களில் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மை தனியே அநாதையாய் போய்க்கொண்டிருக்கின்றது.

எனவே! இவர்களுள் நாம் எந்தவகையைச் சேர்ந்தவர்கள்? என்று யோசிக்கின்றீர்களா? யோசித்துப் பாருங்கள் புரியும்.

## உடன் வருவான் சிவன் மைந்தன்

அந்த சந்நிதி யிலாடு மயிலேறி
சிந்தை குளிர வந்த மர்பவன்
பந்த பாசங்க ளனைத்து மறுத்திடும்
அந்த மாதியி ல்லா சிவன் மைந்தனே.

எந்த நேர மும் ஏழைக் கிரங்கு பவன்
சொந்த மில்லா மெவர்க் குந்துணை நின்றுகாப்பவன்
ஆடு ம்பாம் பதனை யாரமாய் யணிந்தவன்
அம் பலத்தி லாடுமாதி சிவன் மைந்தனே.

மும் மலம றுத்தெடுக் கமுன் நின் றருள்பவன்
அம் மலம றுத்து விட்டா லனைத்து மவன் சொருபம்
நிம் மதியா ய்கைலை மலை வாழுமி வன்தந்தை
அம் மனை பாதியா க்கியரு ளும்சிவன் மைந்தனே.

கையா லாகா தார்கரு த்துரைப்பர் சிலநேரம்
பொய் யாய்பு னைகதை களை தோற்று விப்ப ரிப்புவியில்
மெய் யாய் யுரைப் பதென் றாலுண்மை யிதுவன்றோ
உய் யும் வழிகாட்ட உடன் வருவா ன்சிவ ன்மைந்தனே!

வந்து விட்டா லுன்மனதி லகங்கார மழிந்துவிடும்
சிந்து மருள் மொழிகள் சிவன் மகனை புகழ் பாடும்
கந்த னவன் காலடி தான்கதி யென்றே நினைத் துவிடு
எந்த நிலை வந்தாலு மேற்றுக் கொள்வான் சிவன் மைந்தன்.

முற்று ம்துறந்து விடுமுழு மனதா யேற்றுவிடு
அற்று போய் விடுமான வத்தால் வந்தவினை
கூற்றுவன் வந்தாலும் கலங்காது நின்றுவிடு - நீ
ஊற்று மருள் மொழி கள்வாழ வைக்கும் உன் நினைவை.

-பொ. பாலேஸ்வரன்-

உன் அவசரப் பேச்சு உன்னை அனாதரவாக்காமல் பார்த்துக்கொள்.

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...)

– செல்வி சி. நிலா அவர்கள் –

நாம் கதிர்காம யாத்திரைக்குப் போகும் காலங்களில் அநேகமாக கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் அல்லது குளிர்த்திப் பொங்கல் என்பன இடம்பெறுவது வழமை. நாம் போன சமயம் உற்சவகாலம் ஆகையால் ஆலயச் சூழல் மிக அழகாகவும், வழிபாட்டிற்கு வந்த அடியார்களாலும் நிரம்பி வழிந்தது. அடியார் கூட்டத்தைப் பார்த்ததும் கண்ணகை அம்மன் மிகவும் சக்திவாய்ந்த அம்பாள் என்பதை உணர்ந்து வணங்கினோம்.

உற்சவ காலமாகையால் அம்பாள் சாத்துப்படி அலங்காரத்துடன் அழகுறக் காட்சி அளித்தவண்ணம் வீற்றிருந்தாள். அப்போது திரு சண்முகராஜா அவர்கள் என்னிடம் வந்து அம்மனுக்குச் சாத்தியிருக்கும் சாத்துப்படியில் என்ன வித்தியாசம் தெரிகின்றது என்று கேட்ட பொழுதுதான் நானும் சாத்துப்படியை உற்று நோக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. என்ன ஆச்சரியம்! மற்ற ஆலயங்களில் பூமாலை களால் செய்யப்பட்டிருக்கும் சாத்துப்படியைத் தான் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கே ரூபா நோட்டினால் (காசு) அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அவற்றில் பலவித பெறுமதியில் உள்ள பண நோட்டுக்கள் அதாவது ஆயிரம், ஐநூறு, இருநூறு, நூறு, ஐம்பது, இருபது, பத்து ஆகிய எண்ணிக்கை கொண்ட நோட்டுக்களால் அலங்கரிக்கப்பட்ட கோலத்துடன் கண்ணகை அம்மன் வீற்றிருந்த கோலம் எங்கும் காணமுடியாத ஒரு அதிசயமாகவே எனக்குத் தோன்றியது. இதற்கு ஏதாவது காரணமுண்டா என்று நான் கேட்டபொழுது, ஒவ்வொரு நாளைக்கு விதம் விதமான சாத்துப்படியில் காட்சிதரும் அம்மன் இன்று பண நோட்டுக்களில் அமைத்த சாத்துப்படியில் காட்சி தருகின்றா வேறு ஒரு காரணமும் இல்லை என்று கூறினார்.

அவற்றைப் பார்வையிட்டு ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த எங்கள் அனைவருக்கும் ஆலய பிரசாதமாக பொங்கல், மோதகம் ஆகியவைகளை எம் கைநிறைய வழங்கினார்கள். அதிலும் மோதகத்தின் ருசி சொல்லுந் தரமன்று. ஏனெனில் அங்கே தந்த மோதகத்தின் உள்ளே பயறுக்குப் பதிலாக எள்ளும் சர்க்கரையும் இருந்தது. அதன் சுவை வித்தியாசமாக இருந்தது. எல்லோரும் அச்சுவையின் தன்மையை சிலாகித்தபடி திரு சண்முகராஜா மற்றும் அன்னதானச் செயற்பாட்டில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றிகூறி மீண்டும் கண்ணகை அம்மனை வணங்கி எல்லோரிடமும் விடைபெற்று எமது பயணம் தொடர்ந்தது.

யாத்திரை ஆரம்பிக்கும் காலங்களில் எல்லாம் யாத்திரையில் ஈடுபடும் அடியார்கள் அனைவரின் தேவையைக் கருத்திற்கொண்டு செயலாற்றுவதில் ஐயாவுக்கு நிகர் ஐயாவே. அதன் பிரகாரம் ஓமந்தை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து தொடர்ந்த பேருந்து வவுனியா வேப்பங்குளத்தில் ஒரு வீட்டின் முன் நின்றது. எங்கே போகின்றோம் என்று தெரியாத

வகையில் எல்லோரையும் வாகனத்திலிருந்து இறங்குமாறு ஐயா கூறியதும் அனைவரும் இறங்கினோம். அப்போது வீட்டினுள் இருந்து வந்தவர்களைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியம். ஏனெனில் வந்தவர்கள் வேறு யாரும் இல்லை. ஒரு காலத்தில் தவத்திரு முருகேசு சுவாமியவர்களின் அடியார்களாக இருந்து சுவாமி அவர்களின் மறைவின் பின் ஆச்சிரமத்தோடு இணைந்த திரு திருமதி பவானி தர்மலிங்கம் அவர்களும் அவரது மகள் மீனாவும். "இது உங்கள் வீடா" என்று கேட்டு உள் நுழைந்தேன். அவர்களும் "ஆம்" என்று கூறியதுடன் எல்லோரையும் உள்ளே அழைத்து வரும்படி கூறியதுடன் பிரயாணச் சோர்வை நீக்குவதற்குரிய வகையில் கை, கால் முகம் கழுவியதும் தேநீரும் சிற்றுண்டியும் தந்து உபசரித்தவிதம் சந்நிதியான் ஆச்சிரமத்தோடும் ஐயாவோடும் கொண்டிருந்த ஈடுபாட்டினை நன்கு புலப்படுத்தியது.



எமக்குரிய மதிய உணவினை கண்ணகை அம்மன் ஆலயத்திலும், அன்றைய இரவு உணவை திருமதி பவானி வீட்டிலேயே தயார் செய்து அவற்றை எடுத்துச் சென்று வழியில் ஏதேனும் ஓர் இடத்தில் உண்ணுவது வழமை. அன்று அவர்கள் வீட்டில் தயாரித்து எடுத்த பிட்டையும், கறியினையும் எமது பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு பவானி அன்ரி குடும்பத்தினருக்கும் நன்றி கூறிய பின்னர் எமது பயணம் ஆரம்பமாயிற்று. இரவு பத்து மணியை அண்மித்துவிட்டது. நாம் போகும் பாதையில் மன்னம்பிட்டி என்ற இடத்தில் றோட்டோரம் அமைந்திருந்த பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக எமது பேருந்தை நிறுத்தி எல்லோரும்

*எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.*

இறங்கி அடுப்புமூட்டி நாம் கொண்டுசென்ற பானையில் தண்ணீரைக் கொதிக்க வைத்து சுவையான தேநீருடன் பிட்டையும் பரிமாறி னோம். அமைதியான சூழல், இதமான காற்று மனதுக்கு ஒரு ஆறுதலாக இருந்தது. வீதி யால் செல்லும் வாகனங்களைத் தவிர வேறு ஒன்றும் அவ்விடத்தில் இல்லை. ஒரு பெரு வெளி என்றே கூறலாம்.

அப்போது ஐயா, மன்னம்பிட்டி ஒரு தமிழ்க் கிராமம். பிள்ளையார் ஆலயத்துக்குச் சிறிது தூரம் உள்ளே சென்றால் பழமையான முருகனாலயம் ஒன்று உண்டு. ஒருமுறை பகல் இந்த வழியால் வரும்போது அந்த ஆலயத்தையும் தரிசிப்போம். அதோடு மட்டு மல்ல தயிருக்கு முதன்மையான இடம். ஒரு காலத்தில் மன்னம்பிட்டித் தயிர் என்றால் வாய் ஊறும். ஆனால் நாட்டில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக தமிழ்க் கிராமமாக முற்றிலும் தமிழர் வாழ்ந்த பிரதேசம் இப்போது பௌத்தர்களுக்குரியதாகிவிட்டது. தமிழர் களின் வாழ்வாதாரமாக விளங்கிய மன்னம் பிட்டி எமக்குரியதாக இல்லை என்று விளக் கம் தந்தார். எம்மோடு வந்திருந்த பலரும் நேரம் இரவு பதினொரு மணியைத் தாண்டி விட்டது. பின் ஏன் நாம் இங்கே நிற்கவேண்டும் என்று அவசரப்பட்டார்கள். ஆனாலும் ஐயா அவர்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நாம் போவது சந்நிதியானின் அனுக்கிரகத்துடன் தான். சந்நிதியான் எல்லாவற்றையும் சரிவரச் செய்வான் என்று கூறி தொடர்ந்து இரவு ஓட்டம். வாகனம் இனிக் கதிர்காமத்தில்த்தான் நிற்கும். ஆகையால் வாகனத்தோடு நாமும் இளைப்பாறிச் செல்லலாம் என்று கூறியதன் பிரகாரம் சுமார் 11.30 மணியளவில் எமது பிரயாணம் ஆரம்பமாயிற்று.

கிணற்றுக்குள் இருக்கும் தவளைக்கு அதுவே உலகம் என்றிருப்பதுபோல் இவ் வளவு காலமும் ஊரைவிட்டு ஓரிடமும் போகா மல் இருந்த எனக்கு இந்த யாத்திரையின் மூலம் ஏற்பட்ட பல அனுபவங்களை சுவை பட வாசகர்களாகிய உங்களோடு பகிர்வதற்கு ஆவலாக இருக்கின்றது. நான் பெற்ற அனு பவம் உங்களது மனதில் எவ்வித ஆவலைத் தோற்றுவிக்கப் போகிறது என்பதை இனிவரும் தொடர்கள்மூலம் காண்போம். இதற்குச் சந்நிதி யான் துணை நிற்க வேண்டும். (தொடரும்...

## ஏழ்மை அடியார்கள் கூடித் தங்கிடும் கோவில்

அன்பு கொண்டு உருகிடும் அடியார்கள் தொழுகின்ற கோவில்
ஆதிசிவன் மகன் இருந்து அருள் சுரக்கும் கோவில்
இன்முகத் தோடு அன்பர்கள் வரம் பெற்று ஏகும் கோவில்
ஈசன் மகன் துணை "யாமிருக்க பயம் இல்லை" என்ற கோவில்
உண்ண மதிய உணவு தந்து பசி களையும் கோவில்
ஊரெல்லாம் கோவில் போலல்லாது தாழ் போடாக் கோவில்
எண்ணெழுத்து அறிவிலாதார் கூட வணங்கி ஏற்றம் பெற்ற கோவில்
ஏழ்மை அடியார்கள் கூடித் தங்கி மகிழ்வுறும் கோவில் இதே செல்வச்சந்நிதி கோவில்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*உன் விதியை நீயே நிர்ணயம் செய். இல்லையென்றால் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள்.*

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

**01.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தன் புகழ் மாலை" (கந்தசஷ்டிகால நிகழ்வு)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**08.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**15.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "அறுமுகன் தஞ்சமடி"

வழங்குபவர் :- திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

---

**22.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**29.11.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

[இளை அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

**263ஆவது மலர்**

பதிவு இல: *QD/10/NEWS/2019*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

